www.tamilarangam.net

# 1084ன் அ



## மகாசுவேதாதேவி

தமிழ்ப்புத்தகாலயம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 1084ன் அம்மா

சமூக நாவல்

SEELAN BOOKS
SIGNATURE
NORWAY

## மகா சுவேதா தேவி

வங்க மொழியிலிருந்து தமிழாக்கம்

**சு. கிருஷ்ணமூர்த்தி**

**தமிழ்ப் புத்தகாலயம்**
*# 15, மாசிலாமணி தெரு*
*பாண்டி பஜார் தி.நகர்*
*சென்னை–600 017 ☎ 4345904*

*மின் அஞ்சல்* tamilputhakalayam@yahoo.com
tamilputhakalayam@vsnl.com
website www.intamm.com/tamilputhakalayam

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**1084ன் அம்மா** (சமூக நாவல்)
முதற் பதிப்பு : டிசம்பர் 1999
**விலை : ரூ. 45-00**

**1084's MOTHER**
by **Mrs. MAHASWETA DEVI**
Tamil translation of
Bengali social novel
trd. by : **S. Krishnamoorthy**
© Mahasweta Devi
First Edition : December 1999
160 Pages
Cover Design : **K. UMA**
**TAMIL PUTHAKALAYAM**
#15, Masilamani Street
Pondy Bazar T.Nagar
PB No. 5193 ☎ 4345904
Chennai-600 017
**Price Rs. 45.00**

Email tamilputhakalayam@yahoo.com
tamilputhakalayam@vsnl.com
website www.intamm.com/tamilputhakalayam

Laser typesetting : **ESSKAY GRAPHICS**
201 Dr.Natesan Rd Ch.5. Ph.8413659
Printed by : **MANI OFFSET, 112, Bells Road, Chennai-5. Ph: 8555249, 8588186.**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இந் நாவல்

கல்கத்தாவின் ஒரு மூலையில் உள்ள வசதியான குடும்பத்தைச் சேர்ந்த ஒரு தாய்... தன் மகனின் எதிர்பாராத மரணத்துக்குப் பின் தன்னைத் தானே சமாதானம் செய்து கொள்ளும் முயற்சியே இந்நாவல்...

'1084ன் அம்மா'... முதலில் படிக்க ஆரம்பித்தவுடன் ஒரு தாயின் நினைவோட்டமாய் தோன்றினாலும், படிக்கப்படிக்க... நம்மோடு நெருங்கி வந்து, நம்மெதிரே உட்கார்ந்து, முகத்திலறையும்படியான பல நியாயமான கேள்விகளை நம்முன் ஆசிரியர் வைப்பதாய்த் தோன்றுவதைத் தவிர்க்க முடியவில்லை.

'ஏன் எனது 21 வயது மகன் சாவை ஆசையாக, பயமின்றி ஏற்றுக் கொண்டான்?' என்னும் அத் தாயின் கேள்வியே நூல் முழுதும் வியாபித்திருக்கிறது.

இப்படி அவன் இறந்துபோனதில் தாயான தன் பங்கு என்ன?

பணம், வெளிவேஷம், மூடநம்பிக்கைகள், போலிவாழ்க்கை– என வாழ்வையே ஓர் நாடகமாக நடிக்கும் பெரும்பான்மைச் சமூகத்திடமிருந்து, வேறுபட்டு தன் மகன் போன்ற ஒரு சில இளைஞர்களின் தீவிரமான, நியாயமான கோபங்களுக்கு விலை மரணந்தானா!

இப்படிப்பட்ட படித்த, புத்திசாலி இளைஞர்களின் நம்பிக்கை இழப்பிற்கு யார், எது காரணம்?

சமூகத்தில் இவர்களின் வாழ்விற்கு மட்டுமல்ல, மரணத்திற்கும் கூட ஏன் அங்கீகாரம் இல்லை?

'உண்மை' சிறுபான்மையாய் இருப்பதாலேயே செத்துவிட வேண்டுமா?

இப்படி உண்மைக்காக உயிரையும் கொடுக்கும் இளைஞர்களுக்கு நாம் என்ன கொடுக்கிறோம்? இவர்களுக்கும் குடும்பம் இருக்கிறது, தாய் இருக்கிறாள், இவர்களும் நம்முடன் தானே வளர்கிறார்கள்?

இப்படிப் பல கேள்விகள்....,

அனைத்திற்கும் பதில்கள்... கண்டிப்பாக நாம்தான் அளிக்க வேண்டும்.

**உமா**

தமிழ்ப் புத்தகாலயம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மகாசுவேதா தேவியும் இந்த நாவலும்

மகாசுவேதாதேவி 1926ம் ஆண்டில் வங்கத்தில் ஒரு கலை-இலக்கியக் குடும்பத்தில் பிறந்தார். தந்தை புகழ்பெற்ற கவி, சிறுகதை ஆசிரியர் மனீஷ்கட்டக், வங்க மறுமலர்ச்சி இலக்கிய இதழ் 'கல்லோல்'-இன் முக்கிய எழுத்தாளர். சிற்றப்பா புகழ் பெற்ற திரைப்பட இயக்குநர் ரித்விக்கட்டக். புதல்வர் நபாருண் பட்டாச்சார்யாவும் ஓர் எழுத்தாளர்.

இவர் ஆங்கில இலக்கியத்தில் எம்.ஏ. பட்டம் பெற்றவர். மக்கள் நாடக இயக்கத்தில் ஈடுபாடு கொண்டு அதே இயக்கத்தைச் சேர்ந்தவரும், முதல் வங்காளி முற்போக்கு நாடகமான 'நபான்ன' வின் ஆசிரியருமான பிஜன் பட்டாச்சார்யாவை மணந்து கொண்டார்.

இவரது முதல் படைப்பு (1950) ஜான்சி இராணியின் வரலாறு. இவரது நாவல்கள், சிறுகதைத் தொகுப்புகள், கட்டுரைத் தொகுப்புகள், சிறுவர் நூல்கள் என 90க்கும் அதிகமாகப் புத்தகங்களாக வெளிவந்துள்ளன. சமூக உணர்வு மிக்க இவர் ஒடுக்கப்பட்டவர்கள், பழங்குடி மக்களுக்காகச் சங்கங்கள் அமைத்து அவர்களிடையே பணியாற்றி வருகிறார். அவர்களது வாழ்க்கைப் பிரச்சனைகளே இவருடைய படைப்புகளில் பெரும்பாலும் இடம் பெறுகின்றன. சாகித்திய அகாதமி விருது பெற்ற இவரது நாவல் 'அரண்யேர் அதிகாரர்' முண்டா இன விடுதலை வீரன் பீர்ஸா பற்றியது. இந்த நாவல்

www.tamilarangam.net

தமிழில் 'காட்டில் உரிமை' என்ற தலைப்பில் சாகித்திய அகாதமியால் வெளியிடப்பட்டுள்ளது. இவர் பழங்குடி மக்களுக்காக ஒரு பத்திரிகையும் நடத்திவருகிறார்.

இவர் மெக்ஸெஸே விருது, ஞானபீட விருது, சரத் நினைவுப் பரிசு, மற்றும் பல விருதுகளும் பெற்றுள்ளார்.

1084ன் அம்மா ஆங்கிலம், இந்தி, மராத்தி, அசாமி, ஒரிய, குஜராத்தி, பஞ்சாபி, கன்னட, தெலுங்கு, தமிழ், மலையாள மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

வங்கத்தில் 12 பதிப்புகள் வந்துள்ள '1084ன் அம்மா' இந்தியில் 'ஹஜார் சௌராஸி கீமா' என்ற தலைப்பில் திரைப் படமாக்கப்பட்டுள்ளது. பிரபல இயக்குநர் கோவிந்த நிகலானியின் இப் படத்தில் புகழ்பெற்ற நடிகை ஜெயாபச்சன் முக்கிய பாத்திரம் பெற்றுள்ளார்.



www.tamilarangam.net

மொழி பெயர்ப்பாளர்

## சு. கிருஷ்ணமூர்த்தி

சு.கிருஷ்ணமூர்த்தி 1929ல் பிறந்தவர். ஆங்கில இலக்கியத்தில் எம்.ஏ. பட்டம் பெற்றவர். 40 ஆண்டுகளுக்கும் மேலாகக் கல்கத்தாவாசி. தமிழ், ஆங்கிலம், வங்காளி மொழிகளில் 150க்கு மேற்பட்ட சிறுகதைகள்/ கட்டுரைகள்/மொழிபெயர்ப்புகள் படைத்துள்ளார்; சுமார் 25 தமிழ்/ வங்காளி/ஆங்கில மொழிபெயர்ப்பு நூல்கள் எழுதியுள்ளார். இவற்றுள் குறிப்பிடத்தக்கவை - வங்காளியில் திருக்குறள், இந்திரா பார்த்தசாரதியின் 'குருதிப்புனல்', ஆதவன் சிறுகதைகள், ஆங்கிலத்தில் சிலப்பதிகாரம்.

இவர் தமிழில் காஜி நஜ்ருல் இஸ்லாம், சரத்சந்திரர், பிரேம்சந்த், ஈசுவர சந்திர வித்தியாசாகர் ஆகியோரின் வாழ்க்கை வரலாறுகளைத் தமிழில் எழுதியுள்ளார். மும்முறை இலக்கியச் சரத் சமிதியின் சரத் பரிசு, ரவீந்தரர் நினைவுப்பரிசு, சாந்தி நினைவுப்பரிசு, சாகித்திய அகாதமி மொழி பெயர்ப்புப் பரிசு, திருப்பூர் தமிழ்ச் சங்கப் பரிசு, நிகில் பாரத் வங்க சாகித்திய சம்மேளனப் பரிசுள், மற்றும் பல பரிசுகள் பெற்றுள்ளார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 1084ன் அம்மா

## காலை

சுஜாதா கனவில் இருபத்திரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் ஒரு காலை நேரத்துக்குத் திரும்பிப் போய்விட்டார். இப்போதெல்லாம் அடிக்கடி போகிறார். துண்டு, ரவிக்கை, புடவை, பிரஷ், சோப்பு இவற்றைத் தாமே பையில் எடுத்து வைத்துக் கொள்கிறார். இப்போது அவருக்கு வயது ஐம்பத்து மூன்று. கனவில் அவர் முப்பத்தோரு வயது சுஜாதா பையில் சாமான்களை எடுத்துவைத்துக்கொள்வதைப் பார்க்கிறார். அவருடைய உடம்பு நிறை கர்ப்பத்தின் சுமையில் தளர்ந்திருக்கிறது. அவர் ப்ரதீயை வெளிக்கொணரப் போகிறார். முகம் வலிதாங்காமல் அடிக்கடி கோணுகிறது. சுஜாதா பல்லால் உதட்டைக் கடித்துக்கொண்டு அழுகையை அடக்கிக் கொள்ள முயற்சிக்கிறார்.....ப்ரதீ வந்து கொண்டிருக்கிறான்.

இரவு எட்டு மணியிலிருந்தே நோவு தொடங்கிவிட்டது. ஹேம் ரொம்ப அனுபவப்பட்டவள் போல், ''கர்ப்பம் தொப்புள் வரை வந்துருச்சு, சீக்கிரம் ஆயிரும்'' என்றாள். சுஜாதாவின் கையைப் பிடித்துக் கொண்டு, ''நல்லபடியா ரெண்டு ஒடம்பாப் பிரிஞ்சு திரும்பி வா'' என்று சொன்னாள்.

வலி, பயங்கர வலி...எந்த நேரமும் பிரசவமாகலாம் என்று முதல் நாளே மருத்துவமனைக்கு வந்து விட்டார் சுஜாதா. அப்போது ஜோதிக்கு வயது பத்து, நீபாவுக்கு எட்டு, தூலிக்கு ஆறு. அந்தத் தடவை வீட்டில் மாமியாரும் இருந்தார் என்பது நன்றாக நினைவிருக்கிறது சுஜாதாவுக்கு. சுஜாதாவின் கணவர் திவ்யநாத் மாமியாரின் ஒரே பிள்ளை. பிள்ளை பிறந்ததுமே விதவையாகிவிட்டார் மாமியார். சுஜாதா பிள்ளை பெறுவதைப் பார்க்கப் பொறுக்காது அவருக்கு. ஆகையால் சுஜாதாவுக்குப் பேறுகாலம் நெருங்கும் போது அவரைத் தவிக்கவிட்டுவிட்டுத் தம் தங்கை வீட்டுக்குப் போய் விடுவார் மாமியார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



'அம்மாவுக்கு ரொம்ப எளகின மனசு..... வலி, அழுகை இதெல்லாம் பார்க்கப் பொறுக்காது.....' என்று சொல்வார் திவ்யநாத்.

ஆனால் எவ்வளவுதான் வலியாயிருந்தாலும் சுஜாதா அழுததில்லை, முனகியதில்லை; பல்லால் உதட்டைக் கடித்துக்கொண்டு குழந்தை குட்டிகளைக் கவனித்துக் கொள்வார்.

அந்தத்தடவை மாமியாரின் தங்கை கல்கத்தாவில் இல்லாததால் மாமியார் சுஜாதாவுடன் தானிருந்தார். திவ்யநாத் வேலையாகக் கான்பூர் போயிருந்தார். அந்தத்தடவை அம்மா அங்கேயே தானிருப்பார் என்று அவருக்குத் தெரியாது. வழக்கம் போல் இப்போதும் போய்விடுவார் என்றுதான் நினைத்திருந்தார். ஆனாலும் அவர் சுஜாதாவுக்காக ஏற்பாடு எதுவும் செய்துவிட்டுப் போகவில்லை. எப்போதும் செய்ததில்லை. சுஜாதா பாத்ரூம் போனபோது வலி தோன்றிவிட்டது. இரத்தம் வந்ததைப் பார்த்துப் பயந்துவிட்டார். தாமே சாமான்களைப் பையில் எடுத்து வைத்துக்கொண்டு, டாக்சி கொண்டு வர சமையல்காரனை அனுப்பினார்.

அவர் தனியாகவே போனார் மருத்துவமனைக்கு. அவரைச் சோதித்துப்பார்த்த மருத்துவரும் பயந்துவிட்டார். வலி மிகுதியால் கண் மங்கிவந்தது சுஜாதாவுக்கு. யாரோ நன்றாகக் கீறப்பட்ட கண்ணாடியால் அவருடைய கண்ணை மறைத்தாற் போலிருந்தது.

சுஜாதா மிகவும் சிரமப்பட்டுக் கண்களைத் திறந்து ''ஆம் ஐ ஆல்ரைட்?'' என்று மருத்துவரைக் கேட்டார்.

''ஆமா!''

''கொழந்தை?''

''நீங்க தூங்குங்க.''

''என்ன பண்ணப் போறீங்க?''

''ஆபரேஷன்.''

www.tamilarangam.net



''டாக்டர், கொழந்தை?''

''நீங்க தூங்குங்க...நான் தான் இருக்கேனே?... நீங்க ஏன் தனியா வந்தீங்க?..''

''அவர் ஊர்லே இல்லை.''

திவ்யநாத் ஊரிலிருந்தாலும் கூட வந்திருக்கமாட்டார் என்று சுஜாதாவுக்குத் தெரியும். 'வருவாரென்று டாக்டர் மட்டும் ஏன் எதிர்பார்க்க வேண்டும்? எப்போதுமே கூட வருவதில்லை திவ்யநாத். குழந்தை பிறந்த பிறகு வீட்டுக்குக் கூட்டிப் போகவும் வருவதில்லை. பச்சைக்குழந்தை இரவில் அழுதால் தம் உறக்கம் கெட்டுவிடுமென்று அவர் இரண்டாம் மாடியில் படுத்துக் கொள்வார். குழந்தைக்கு உடல் நிலை சரியில்லாவிட்டாலும் இரவில் வந்து பார்க்கமாட்டார். ஆனால் ஒன்று மட்டும் கவனமாகப் பார்த்துக்கொள்வார்– சுஜாதாவுக்கு மறுபடி பிள்ளை பெறத்தக்க வலுவந்துவிட்டதா என்று. ''டானிக் எல்லாம் சாப்பிடறியா?'' என்று கேட்பார் கனத்த, கபங்கட்டிய குரலில். அவருக்கு உடல்பசி ஏற்படும் போதெல்லாம் அவரது குரல் கரகரக்கும் - தொண்டையில் கபங்கட்டிக் கொண்ட மாதிரி.

சுஜாதாவுக்கு திவ்யநாத்தை நன்றாகத் தெரியும். திவ்யநாத் காட்டும் அக்கறைக்கு ஒரேயொரு பொருள்தான் உண்டு.

இதெல்லாம் எப்படித் தெரியும் மருத்துவருக்கு?

மருத்துவர் சுஜாதாவுக்கு மருந்து கொடுத்தார். மருந்தில் வலி குறையவில்லை. அந்தச் சமயத்தில் பிறக்கவிருக்கும் குழந்தைக்காக ரொம்பக் கவலை ஏற்பட்டது சுஜாதாவுக்கு - தூலி பிறந்து ஏறக்குறைய ஆறு வருடங்களாகிவிட்டன....

சுஜாதா எவ்வளவோ ஜாக்கிரதையாகத்தான் இருந்தார். அப்படியும் கடைசியில் இப்படி நேர்ந்துவிட்டது.

ஆகவே இந்த ஒன்பது மாதங்களாக அவருக்குத் தாம் அசிங்கமாகிவிட்டதாக, தூய்மை கெட்டுவிட்டதாகத் தோன்றிக்கொண்டு வந்தது. வயிற்றில் கொஞ்சம் கொஞ்சமாக

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வளரும் சுமை ஒரு சாபமாகத் தோன்றியது...ஆனால் கர்ப்பத்துக்கு ஆபத்து நேரலாம் என்று தோன்றியதுமே அவருக்கு அந்தப் புதிய ஜீவன்பால் பாசம் பொங்கியது. அவர் மருத்துவரைக் கூப்பிட்டு, ''ஆபரேஷன் செய்யுங்க, கொழந்தையைக் காப்பாத்துங்க'' என்று சொன்னார்.

''அதுக்குத்தானே ஏற்பாடு செய்யறேன்'' என்றார் மருத்துவர்.

பணிப்பெண் ஊசிபோட்டாள். வலி சுஜாதாவின் அடிவயிற்றைக் குத்திக்கொண்டு வெளியே வந்தது. அது ஆயிரத்துத் தொள்ளாயிரத்து நாற்பத்தெட்டாம் ஆண்டு ஜனவரி பதினாறாம் நாள். சுஜாதா படுக்கையில் தாம் போர்த்திக் கொண்டிருந்த வெள்ளைப் போர்வையை அடிக்கடி இறுகப் பிடித்துக் கொண்டார் வலிதாங்காமல். அவருடைய நெற்றி பூரா வியர்வை. கண்ணுக்குக் கீழே கருப்புத்தழும்பு இன்னும் அகலமாகிவிட்டது. அவருக்குக் கொஞ்சங்கூடக் குளிராக இல்லை. இத்தனைக்கும் அந்த ஜனவரியில் ரொம்பக் குளிர்.....

வலி அடிவயிற்றைக் குத்திக்குத்திக் கொண்டு வெளியே வருகிறது. படுக்கையின் வெள்ளைப் போர்வையை இறுகப் பிடித்துக்கொண்டிருந்த சுஜாதா உடம்பெல்லாம் வியர்த்துப் போய் விழித்துக் கொண்டார். பக்கத்துக் கட்டிலில் திவ்யநாத்தைப் பார்த்து அவருடைய சிவப்பு நெற்றியில் நீண்ட புருவங்கள் உயர்ந்தன. இவர் இங்கே எப்படி வந்தார்?

பிறகு புரிந்தது சுஜாதாவுக்கு. ப்ரதீ பிறந்தபோது திவ்யநாத் பக்கத்தில் இல்லை. அதனால் சுஜாதாவின் கனவில் அவர் இருக்கவில்லை. ஆனால் இப்போது சுஜாதா பார்ப்பது கனவல்லவே!

சுஜாதா சிரமப்பட்டுக் கையை நீட்டி ஒரு பேரல் கான் மாத்திரையை எடுத்துக் கொண்டார். மாத்திரையை வாயில் போட்டுக் கொண்டு கொஞ்சம் தண்ணீர் குடித்தார். சேலைத் தலைப்பால் நெற்றி வியர்வையைத் துடைத்துக் கொண்டார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மறுபடியும் படுத்துக்கொண்டார். இப்போது ஒன்றிலிருந்து நூறுவரை எண்ணவேண்டும். டாக்டரின் கட்டளை. எண்ணி முடிவதற்குள் வலி குறைந்துவிடும். அந்த நேரத்துக்குள் மாத்திரை தன் வேலையைச் செய்யத் தொடங்கிவிடும். சுஜாதாவைச் சோர்வடையச் செய்து விட்டு, தோற்கடித்துவிட்டு வலிகுறையும்.

வலி இப்போது குறைந்து கொண்டிருக்கிறது. சுஜாதா கடிகாரத்தைப் பார்த்தார். மணி ஆறு அடித்துவிட்டது. சுவரிலிருந்த காலண்டரைப் பார்த்தார். ஜனவரி பதினேழு. பதினாறாந்தேதி இரவு முழுதும் வலி இருந்தது. நினைவு போய்ப் போய் வந்து கொண்டிருந்தது. மருந்து நெடி, பிரகாசமான வெளிச்சம், வலிக்கு நடுவில் திரைக்கு மறுபுறத்தில் மங்கலாக மருத்துவர்களின் நடமாட்டம்...இரவு முழுதும்... அதன்பிறகு பதினேழாம் தேதி அதிகாலையில் ப்ரதீ பிறந்தான்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு இதே ஜனவரி பதினேழாந் தேதி அதிகாலையில் இதே அறையில், இதே மாதிரி, இதே ஆளுக்கருகில் கட்டிலில் உறங்கிக் கொண்டிருந்தார் சுஜாதா.

பக்கத்து மேஜையிலிருந்த டெலிபோன் மணியடித்தது - திடீரென்று.

இப்போது டெலிபோன் ஒலிக்கிறது ஜோதியின் அறையிலிருந்து. இரண்டாண்டுகளுக்கு முன் நிகழந்த அந்த நிகழ்ச்சிக்குப் பிறகு ஜோதி டெலிபோனைத் தன் அறைக்கு எடுத்துச் சென்றுவிட்டான். ஜோதி விவேகம் மிக்கவன். அவன் சுஜாதாவின் முதல் குழந்தை, மூத்த மகன். அப்பா திவ்யநாத்துக்கு மிகவும் கீழ்ப்படிதலுள்ள பிள்ளை. வினியின் அன்புமிக்க கணவன், சுமனின் பாசம் நிறைந்த தந்தை.

ஆம், ஜோதி மிகவும் விவேகி. இரண்டாண்டுகளுக்கு முன் சுஜாதா ஐம்பத்தோரு வயதைக் கடந்துவிட்டாள், திவ்யநாத் ஐம்பத்தாறை. ஆபத்தில்லாத வயது. இருவரது வாழ்க்கையும் ஒழுங்கானதாக இருந்தது. பெரிய

www.tamilarangam.net



பெண்ணுக்குத் திருமணமாகி விட்டது. சிறியவனுக்கு வரன் நிச்சயமாகிவிட்டது. பெரியபிள்ளை ஜோதி நல்ல வேலையிலிருந்தான். சிறியவனுக்குக் கல்லூரிப்படிப்பு முடிந்ததும் அவனை வெளிநாட்டுக்கு மேற்படிப்புக்கு அனுப்ப எண்ணியிருந்தார் திவ்யநாத். வாழ்க்கை மிகவும் ஒழுங்கான முறையில், வெகு அழகாகக் கழிந்து கொண்டிருந்தது.

அந்தச் சமயத்தில், அந்த வயதில், டெலிபோன் ஒலித்தது. சுஜாதா தூக்கக்கலக்கத்தோடு ரிசீவரை எடுத்தார். திடீரென்று டெலிபோனில் ஒரு பரிச்சயமில்லாத, பற்றற்ற ஆபிசரின் குரல் கேட்டது. ''ப்ரதீ சாட்டர்ஜி ஒங்களுக்கு என்ன சொந்தம்?''

''பிள்ளையா?... காண்ட்டாபுகூருக்கு வாங்க.''

ஆம், முகம் - உடலுறுப்பு, இரத்தம் - தசையற்ற ஒரு குரல் காண்ட்டாபுகூருக்கு வரச்சொல்லியது.

ரிசீவர் சுஜாதாவின் கையிலிருந்து நழுவி விழுந்தது. சுஜாதாவும் நினைவிழந்து, பல்லும் பல்லும் கிட்டித்துக்கொள்ள, கீழே விழுந்து விட்டார்.

இரண்டாண்டுகளுக்கு முன், ஜனவரி பதினேழாம் நாள், ப்ரதீயின் பிறந்த தேதியில் இந்த அழகிய, பளபளப்பான வீட்டில், இந்த அமைதியான குடும்பத்தில், இந்த டெலிபோன் செய்தி போன்ற ஒரு தாறுமாறான, சற்றும் எதிர்பார்க்கப்படாத நிகழ்ச்சி நடை பெற்று விட்டது.

அதனால் தான் ஜோதி அந்த அறையிலிருந்து டெலிபோனை எடுத்துக்கொண்டு போய்விட்டான். ஆனால் அது சுஜாதாவுக்கு மூன்று மாதங்கள் வரை தெரியாது. ஒன்றும் தெரியாது. அந்த மூன்று மாதங்களும் அவர் படுக்கையில் கிடந்தார். கையால் கண்களை மூடிக்கொண்டு சில சமயம் ஒலியெழுப்பாமல் அழுவார். ஹேம் மட்டும் அவருடைய கையைப் பிடித்துக் கொண்டு உட்கார்ந்திருப்பாள், தேவைக்கேற்பத் தூக்கமருந்து தருவாள்.

www.tamilarangam.net



ஆகவேதான் டெலிபோன் அப்புறப் படுத்தப்பட்டது சுஜாதாவுக்குத் தெரியாது.

மூன்று மாதங்களுக்குப் பிறகு சுஜாதா மறுபடி வங்கி வேலைக்குப் போகத் தொடங்கினார். மறுபடி ஜோதி, தீபா, தூலி ஆகியோருடன் சாதாரணமாகப் பேசத் தொடங்கினார். சுமனுக்குப் பென்சில் சீவித் தந்தார். ''என்னோட கருப்புக்கரைச் சேலையைச் சலவைக்குப் போட்டிருக்கியா?'' என்று வினியைக் கேட்டார். திவ்யநாத் ஆபிஸ் வேலையாக பம்பாய் சென்ற போது அவருடைய சூட்கேசில் மலச்சிக்கல் மருந்து எடுத்து வைத்தார்...

இவ்வாறு எல்லாம் இயல்புநிலைக்கு வந்த பிறகுதான் அவர் கவனித்தார், டெலிபோன் அப்புறப்படுத்தப்பட்டிருப்பதை.

பார்த்ததும் சுருங்கியது சுஜாதாவின் புருவம். ஜோதி இவ்வளவு முட்டாளா? அவனுடைய முட்டாள் தனத்தைப் பார்த்து அடிக்கடி தலையை ஆட்டிக்கொண்டார் அவர். இனிமேல்தான் அவருக்கு டெலிபோன் செய்தி எதுவும் வராதே!

திவ்யநாத் சார்ட்டர்டு அக்கௌண்டெண்டாகத் தொழில் புரிகிறார். ஜோதி ஒரு பிரிட்டிஷ் கம்பெனியில் நடுமட்ட ஆபீசர். பெரிய பெண் தீபாவின் புருசன் சுங்க இலாகாவில் பெரிய ஆபிசர். தூலிக்கும் இப்போது திருமணம் நிச்சயமாகி விட்டது. அவளுடைய வருங்காலக் கணவன் டோனி கபாடியா சுவீடனுக்கு இந்தியக் கலைப்பொருள்களை ஏற்றுமதி செய்கிறான் - பட்டு - பாட்டிக் உடைகள், தரைக்கம்பளம், பித்தளை நடராஜர் சிலை, பாங்க்கூராவின் மண் குதிரை பொம்மைகள்...

இவர்களில் எவருமே ஆபத்தான, எதிர்பார்க்கப்படாத காரியமெதுவும் செய்யமாட்டார்கள். ஆகவே திடீர் டெலிபோன் செய்தி எதுவும் வராது. சுஜாதாவுக்குக் காண்ட்டாபுகூருக்கு ஓடிப்போகத் தேவை ஏற்படாது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



காண்ட்டாபுகூர் சவக்கிடங்கில் மல்லாந்து படுத்துக் கிடக்க நேரும்படியான குற்றமெதையும் இவர்கள் முட்டாள் தனமாகச் செய்யமாட்டார்கள்...

சவக்கிடங்கின் பணியாள் ஒரு கனத்த போர்வையைத் தூக்கினான். போலீஸ் ஆபீசர் கேட்டார், ''ஒங்க பையனை அடையாளம் தெரியுதா?''

இவர்களெல்லாரும் ஒழுங்கானவர்கள், சட்டத்தை மதித்து நடக்கும் நல்ல குடிமக்கள். சுஜாதாவை இந்த நிலைக்கு ஆளாக்கக் கூடிய எந்தக் காரியமும் செய்ய மாட்டார்கள். திவ்யநாத்தை அலையவிடமாட்டார்கள்.

அப்போது நிறைய அலைந்து திரிய நேர்ந்தது திவ்யநாத்துக்கு - தம் பிள்ளை இந்த இழுக்கான முறையில் இறந்து போன செய்தி பத்திரிகைகளில் வெளிவந்துவிடாமல் தடுப்பதற்காக.

டெலிபோன் செய்தி கிடைத்ததுமே திவ்யநாத்துக்கு ஏற்பட்ட முதல் கவலை இந்தச் செய்தி வெளிவராமல் அமுக்கிவிடுவது எப்படி என்பது தான். காண்ட்டாபுகூருக்கு உடனே போவது கூட அவ்வளவு அவசியம் என்று தோன்றவில்லை அவருக்கு.

ஜோதியும் அப்பா மாதிரிதான். அவனும் தந்தையுடன் வெளியே கிளம்பினான்.

திவ்யநாத் சுஜாதாவை வீட்டுக் காரை எடுத்துச் செல்ல அனுமதிக்கவில்லை. அவருடைய சொந்தக் கார் காண்ட்டாபுகூர் சவக்கிடங்கு வாசலில் நின்று கொண்டிருப்பதை யாராவது பார்த்துவிட்டால்!

அன்று இறந்தது ப்ரதீமட்டுமல்ல; சுஜாதாவின் சிந்தனையில் திவ்யநாத்தும் இறந்துவிட்டார். அவரது அன்றைய நடத்தை ஒரு பேரிடியாக இருந்தது சுஜாதாவுக்கு. ஒரு பெரிய வெடிப்பு - கோடிகோடி ஆண்டுகளுக்கு முன்னால் பூமியின் தொடக்க காலத்தில் ஏற்பட்ட வெடிப்புகள் போல, பூமியைச் சிறு சிறு துண்டங்களாக்கிச் சிதறச் செய்த

www.tamilarangam.net



வெடிப்புகள் போல. அவற்றுக்கிடையே ஏற்பட்ட இடைவெளிகளைக் கடல் நிரப்பிவிட்டது.

திவ்யநாத்துக்குத் தெரியாது, அவருடைய அன்றைய நடத்தையின் விளைவாக அவர் சுஜாதாவின் சிந்தனையில் இறந்து விட்டார், முடிவில் சுஜாதாவிடமிருந்து வெகு தொலைவுக்கு விலகிப் போய் விட்டாரென்று. அவர் சுஜாதாவுக்கருகில்தான் படுத்திருக்கிறார்; ஆனால் அன்று இறந்து போன ப்ரதீயை விட உயிரோடிருக்கும் தம்முடைய பாதுகாப்பு, கௌரவம் பற்றியே தாம் அதிகம் கவலைப்பட்டதற்காக சுஜாதாவின் சிந்தனையிலிருந்து மறைந்து போய்விட்டதை உணரவில்லை.

திவ்யநாத்தின் அலைச்சல்கள், திரை மறைவு முயற்சிகள் வெற்றி பெற்றன. மறுநாள் செய்திப் பத்திரிகைகளில் போலீஸ் துப்பாக்கிக்கு இரையான நான்கு இளைஞர்களின் பெயர்கள் வெளிவந்தன; ஒரு பத்திரிகையிலும் ப்ரதீயின் பெயர் இடம் பெறவில்லை.

இவ்வாறு அவர் ப்ரதீயைத் தம் வாழ்க்கையிலிருந்து அழித்துவிட்டார். அது சுஜாதாவால் இயலவில்லை.

இத்தகைய முறைகேடான, ஒழுங்குமுறைக்கு மாறுபட்ட நிகழ்ச்சியெதுவும் இனி அந்தக் குடும்பத்தில் நடக்காது. இருந்தாலும் ஜோதி ஜாக்கிரதையுணர்வோடு டெலிபோனைத் தன் அறையில் கொண்டு போய் வைத்துக்கொண்டது வேடிக்கையாயிருந்தது சுஜாதாவுக்கு.

சுஜாதாவின் உதட்டோரத்தில் கேலிப்புன்னகையைப் பார்த்த வினி - அதிர்ச்சியடைந்த வினி - எழுந்துவிட்டாள். அவள் ஜோதியிடம் ''ஒங்க அம்மாவுக்கு இதயமே இல்லை'' என்று சொன்னாள், சுஜாதாவின் காதில் விழும்படி.

இந்தப் பேச்சு காதில் விழுந்தும் சுஜாதாவுக்குக் கோபம் வரவில்லை. வினிக்குப் ப்ரதீயிடம் பரிவு உண்டு என்றுதான் நினைத்திருந்தார் சுஜாதா. ஆனால் இப்போது அப்படி நினைக்கவில்லை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஒரு நாள் வராந்தாச் சுவரில் ஆடிய ப்ரதீயின் போட்டோவைக் காணோம். அவனுடைய ஷுக்கள், மழைக் கோட்டு எல்லாம் மறைந்து விட்டன.

''போட்டோ எங்கே?'' சுஜாதா வினியைக்கேட்டார்.

''ரெண்டாம் மாடியறையிலே.....''

''ரெண்டாம் மாடியிலேயா?''

''ஆமா...அப்பா சொன்னார்....''

அப்பா சொன்னார்!

ப்ரதீ இறந்த பிறகு அவனுடைய நினைவுச் சின்னங்களை அழித்துவிட திவ்யநாத் செய்த முயற்சிகளைப் பார்த்து சுஜாதா வியப்படையவுமில்லை, புதிதாக வருத்தப்படவுமில்லை. அவர் நினைத்ததெல்லாம் - திவ்யநாத் இப்படியெல்லாம் செய்வார்தான், ஆனால் வினியுமா அவருடன் சேர்ந்து கொண்டு! வினி அவரைத் தடுத்திருக்கக் கூடாது?

மேலே எதுவும் பேசாமல் தம் அலுவலகத்துக்குப் போய் விட்டார் சுஜாதா. இந்த வங்கி வேலையை அவர் வெகு காலமாகச் செய்து வருகிறார். ப்ரதீக்கு மூன்று வயதாயிருந்த போது அவர் வேலையில் சேர்ந்தார்.

அப்போது திவ்யநாத்தின் ஆபிசில் சற்று இக்கட்டான நிலை. இரண்டு பெரிய கட்சிக்காரர்கள் அவருடைய ஆபீசின் தொடர்பை முறித்துக் கொண்டு விட்டார்கள். அந்த சமயத்தில்தான் வேலையிலமர்ந்தார் சுஜாதா. இவ்விஷயத்தில் வீட்டிலிருந்த எல்லோரும் அவருக்கு உற்சாகமளித்தார்கள். மாமியார் கூட சொன்னாள், ''நீ வேலைக்குப் போறது சரிதான். நீயாக இருக்கக்கொண்டு இவ்வளவு நாள் வேலை பார்க்காமே சும்மா இருந்தே. திபூவும் பெண்டாட்டி வேலை பார்க்கணும்னு நினைக்கறவன் இல்லை. அப்படி நினைக்கறவனாயிருந்தால் உன்னை முன்னாலேயே வேலைக்கு அனுப்பிச்சிருப்பான்.''

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சுஜாதா ஏனிப்படி திடீரென்று தாமாகவே வேலை தேடிக் கொள்ள முனைந்தார் என்று தெரிந்து கொள்ள யாருக்கும் அக்கறை ஏற்படவில்லை. அதுவும் நல்லதுக்குத்தான். இந்த வீட்டில் திவ்யநாத்தும் அவருடைய தாயுந்தான் எப்போதும் மற்றவர்களுடைய கவனத்தைத் தங்கள் பால் ஈர்த்துவைத்திருந்தார்கள். வீட்டில் சுஜாதா ஒரு நிழல் மாதிரிதான்; அவருக்கென்று தனியாக எந்த முக்கியத்துவமும் இல்லை.

சுஜாதாவுக்கு அறிமுகமானவர் ஒருவர் வங்கியில் பெரிய பதவியில் இருந்தார். அவர் மூலந்தான் இந்த வேலை கிடைத்தது; இல்லாவிட்டால் கிடைத்திருக்காது. குடும்ப கௌரவம், கண்ணியம் மிக்க தோற்றம், நல்ல ஆங்கில உச்சரிப்பு இவற்றின் பலத்தால் வேலை கிடைத்துவிட்டது. அவரைப் போல் லோரெட்டோ கல்லூரியில் பி.ஏ. படித்த எவ்வளவோ பேர் வேலையில்லாமல் இருக்கிறார்கள் என்று சுஜாதாவுக்குத் தெரியும்.

அவர் வேலைக்குப் போவதில் ப்ரதீக்குத்தான் வருத்தம். அவர் வேலைக்குப் புறப்படும் போது மூன்று வயது ப்ரதீ அவருடைய முழங்கால்களைப் பிடித்துக் கொண்டு அழும் காட்சியை அவர் எவ்வளவோ முறை கனவில் பார்த்திருக்கிறார்.

''அம்மா, நீ ஆபிசுக்குப் போகவேண்டாம், என்கிட்டேயே இரும்மா!''

சிவப்பாக, ஒல்லியாக ப்ரதீ... பட்டுப் போன்ற தலை முடி, அவன் கண்களில் பாசம்.

ப்ரதீ.....'விடுதலை யுகத்தில்' ஆயிரத்து எண்பத்து மூன்று பேர் இறந்தபின் ஆயிரத்து எண்பத்து நாலாவதாக அவன் மரித்தான். அந்தப் பத்தாண்டுக்கால எல்லையில் இரண்டரை ஆண்டுகளில் கொல்லப்பட்ட வாலிபர்களின் பட்டியலை யாராவது தயாரித்தால் அவருக்குப் ப்ரதீயின் பெயர் கிடைக்குமா? செய்திப் பத்திரிகைகளிலிருந்து பட்டியல் தயாரிக்கப்பட்டால் ப்ரதீயின் பெயர் அதில் இருக்காது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



திவ்யநாத் தான் ப்ரதீயின் பெயர் வெளிப்படாமல் பார்த்துக் கொண்டுவிட்டாரே!...

''ப்ரதீ சாட்டர்ஜி?''

''நீங்க அவனுக்கு என்ன சொந்தம்?''

''..........''

''வேணாம், மூஞ்சியைப்பார்க்கத் தேவையில்லை... ஒடம்பிலே ஏதாவது அடையாளம்?...''

''..........''

''கழுத்திலே மச்சம்?''

''..........''

''வேணாம், மூஞ்சியைப் பார்க்க வேணாம்...''

சுஜாதா என்ன சொன்னார்?

அவர் நீலச் சட்டையை, விரலை, முடியைப் பார்த்தார். இருந்தாலும் உள்ளூற ஒரு சந்தேகம். பகுத்தறிவை, கண்களின் சாட்சியத்தை மீறி ஒரு சந்தேகம் - முகத்தைப்பார்த்தால் அது வேறு யாரோவாக இருக்கலாமோ என்று. அதனால்தான் அவர் முகத்தைப் பார்க்க வேண்டுமென்று சொன்னார்.

சவக்கிடங்கின் பணியாள் மிகவும் இரக்கத்தோடு சொன்னான், ''என்னத்தையம்மா பார்க்கப் போறீங்க? முகம்னு ஒண்ணு இருந்தாத்தானே!...''

அப்போது என்ன செய்தார் சுஜாதா?

பக்கத்தில் இன்னும் நான்கு சவங்கள் இருந்தன, யாரோ விம்மி விம்மியழுது கொண்டிருந்தார்கள். வேறு யாரோ தரையில் தலையை முட்டி மோதிக் கொண்டிருந்தார்கள். எவருடைய முகமும் தெளிவாக நினைவில்லை, சுஜாதாவுக்கு எல்லாம் மங்கலாகத்தான் தெரிந்தன.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஆனால் சில நினைவுகள் வைரக் கத்திபோல் பிரகாசமாக, கூர்மையாக இருக்கின்றன.

ப்ரதீயின் நெஞ்சிலும் வயிற்றிலும் கழுத்திலும் குண்டுக் காயங்கள் நீலக் குழிகளாக இருந்தன. வெகு அருகிலிருந்து சுடப்பட்ட குண்டுகள். குண்டு ஊடுருவிய பகுதி கார்டைட்டால் பொசுங்கிப்போய் நீலமாக இருந்தது. வாதுமை நிற இரத்தம். குண்டு பட்ட இடங்களில் வட்டமாகக் கிழிந்த தோல்.

ப்ரதீயின் முகம்... ப்ரதீயின் முகம்.... சுஜாதா பலவந்தமாகப் போர்வையை விலக்கிப் பார்த்தார். துப்பாக்கியின் அடித்தண்டால் பல தடவை அடிக்கப்பட்டு நசுங்கி உருத்தெரியாமல் போன முகம். பின்னால் நின்றிருந்த தூலியின் தெளிவற்ற ஓலக் குரல்.

சுஜாதா குனிந்து ப்ரதீயின் முகத்தைப் பார்த்தார். அதை விரலால் தடவ விரும்பினார். ஆனால் விரலால் தடவும்படியாக ஓர் அங்குல அகலங்கூட மிருதுவாக இல்லை தோல். எல்லாமே நசுங்கிக் கிடந்தது.

சுஜாதா ப்ரதீயின் முகத்தை மூடினார். பின்னால் திரும்பித் தூலியைக் கட்டிப் பிடித்துக் கொண்டார்...

இந்த நிகழ்ச்சிக்குப்பின் அவர் மறுபடி வேலைக்குச் சென்ற போது...

வங்கி மேலாளர் ஹூத்ரா சுஜாதாவிடம் வந்து சொன்னார், ''மேடம், ஸோ ஸாரி....''

''தாங்க் யூ'' தலை நிமிராமல் சொன்னார் சுஜாதா.

''அம்மா!''

பணியாள் பிக்கன் ஒரு கண்ணாடி டம்ளரில் தண்ணீர் வைத்துக் கொண்டு நின்றான்.

வங்கிக்குள் நுழைந்ததும் ஒரு டம்ளர் தண்ணீர் குடிப்பது சுஜாதாவின் வழக்கம்.

www.tamilarangam.net



''அம்மா!''

பிக்கனின் குரலில் பரிவு, பார்வையில் அனுதாபம், அவன் அவரைப் பார்வையால் தழுவிக்கொண்டான்.

சுஜாதாவும் அவனை ஒரு நாள் தழுவிக் கொண்டிருக்கிறார், அவனுடைய பிள்ளை நோயில் இறந்த செய்தியைத் தாங்கி ஒரு தந்தி வந்த போது.

பிக்கனின் பார்வையிலிருந்து தம் கண்களை விலக்கிக் கொண்டார் சுஜாதா. அவர் இன்னும் அனுதாபத்தை ஏற்றுக் கொள்ளும் நிலையில் இல்லை. பிக்கன், என்னை மன்னித்து விடு! உன் பிள்ளையின் மரணமும் ப்ரதீயின் மரணமும் ஒரே மாதிரி அல்ல. உன் பிள்ளை இறந்ததற்காக அனுதாபங்காட்டி உன்னைத் தழுவிக்கொள்ளலாம். நீ ஒரு கீழ்மட்டப் பணியாள் என்பதை மறந்து.

ஆனால் ப்ரதீ அப்படி இறக்கவில்லையே! அவனது சாவுக்கு முன்னால் பல கேள்விகள், அதற்குப் பின்னால் பல கேள்விகள். கேள்விக்குறிகளின் ஊர்வலம், கடைசியில் ஒரு கேள்விக்கும் விடை கிடைக்காமலே ப்ரதீ சாட்டர்ஜியின் கேஸ் ஃபைல் மூடப்பட்டுவிட்டது...

சுஜாதா நாள் முழுவதும் வங்கியில் இயந்திரம் போல் வேலை செய்தார். அவர் வங்கிக்குப் புறப்படுவதற்கு முன்னாலேயே திவ்யநாத் ப்ரதீயின் படத்தையும் மற்ற பொருள்களையும் அப்புறப்படுத்தச் சொல்லியது அவருக்குத் தெரிந்து விட்டது.

அவர் வங்கியிலிருந்து திரும்பியதும் கணவரைக் கேட்டார்- ''நீங்க ப்ரதீயோட போட்டோவை ரெண்டாம் மாடியிலே கொண்டு போய் வைக்கச் சொன்னீங்களா?''

''ஆமா.''

''ப்ரதீயோட ஷூ?''

''அதையுந்தான்.''

www.tamilarangam.net



''ஏன்?''

''ஏனா?'' தலையை ஆட்டிக் கொண்டார் திவ்யநாத். ப்ரதீயின் நினைவுச்சின்னங்களை அப்புறப்படுத்துவது, அவனது நினைவையே அழித்துவிடுவது எவ்வளவு முக்கியம் என்பது சுஜாதாவுக்குத் தானாகப் புரியாவிட்டால் யாரால் புரிய வைக்க முடியும்?

திவ்யநாத் பதில் சொல்லவில்லை.

''ரெண்டாம் மாடி ரூம் பூட்டியிருக்கா?''

''ஆமா.''

''சாவி யார்கிட்டே இருக்கு?''

''என்கிட்டே.''

''என்கிட்டே கொடுங்க.''

சாவியை வாங்கிக் கொண்டு இரண்டாம் மாடியறைக்குப் போனார் சுஜாதா. அது ப்ரதீயின் அறை. எட்டாம் வயதிலிருந்து அங்குதான் தூங்குவான் அவன். முதலில் அவனுக்குத் தனியாகப் படுத்துக் கொள்ளப் பயமாயிருந்தது.

''அப்படீன்னா ஹேம் இங்கேயே துணையாகத் தரையிலே படுத்துக்கட்டும்'' என்றார் சுஜாதா.

திவ்யநாத்துக்கு இதைக் கேட்டுக் கோபம் வந்துவிட்டது. ''மற்ற குழந்தைகள் சிறுவயதில் தனியாகப் படுத்துக் கொள்ளவில்லையா, இவனுக்கு மட்டும் என்ன?'' என்றார் அவர்.

உண்மையில் மற்ற குழந்தைகளும் பயப்படத்தான் செய்தார்கள். ஆனால் அப்போதெல்லாம் திவ்யநாத்தின் பேச்சை மீறத் துணிவில்லை சுஜாதாவுக்கு.

ப்ரதீ ரொம்பவும் பயப்படுவான். மிகவும் கற்பனை வசப்பட்டவன் பயப்படுவது இயற்கைதான். இரவில் சவ ஊர்வலக்காரர்களின் 'நரிபோல்' முழக்கத்திற்கு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பயப்படுவான். பகலில் புலிவேஷக்காரன் வந்து உறுமினால் நடுங்குவான். பிறகு கொஞ்சங் கொஞ்சமாக அவனது பயம் தெளிந்தது...

இப்போது ப்ரதீ பயத்துக்கும் பயமின்மைக்கும் அப்பால்.

சிறுவயதிலிருந்தே ப்ரதீக்குச் சாவைப் பற்றிய கவிதைகள் ரொம்பப் பிடிக்கும். ஏழு வயது ப்ரதீ ஜன்னலிலமர்ந்து கால்களைத் தொங்கப் போட்டுக் கொண்டு கவிதை படிக்கும் காட்சியைக் கனவில் காணும் போது இருவகைப்பட்ட எண்ணங்கள் தோன்றும் சுஜாதாவுக்கு. ஒன்று சொல்லும், 'இது கனவு, ப்ரதீ இப்போது இல்லை' என்று; மற்றது சொல்லும், 'இல்லையில்லை, இது கனவல்ல, உண்மை' என்று.

ப்ரதீ ஜன்னலில் அமர்ந்து கால்களைத் தொங்கப் போட்டுக்கொண்டு கவிதை படிப்பான், சுஜாதா அவனுடைய படுக்கையில் உட்கார்ந்து கொண்டு கேட்பார். நடு நடுவே அவனுடைய போர்வையை நன்றாகப் போர்த்துவார்.

சில சமயம் ப்ரதீ படிப்பான்-

''எல்லோரையும் விடக் கோழையாயிருந்தான் பூட்டியிருந்த இருண்ட அறையைத் திறந்தான்.''

சில சமயம் ப்ரதீ ரவீந்திரரின் 'சிசு' கவிதைத் தொகுப்பைக் கையில் வைத்துக் கொண்டு தரையில் உலவியவாறே படிக்கும் காட்சி சுஜாதாவின் கனவில் தோன்றும்-

''இருண்ட இரவில் போய்விட்டாய் நீ,
இருண்ட இரவில் அரவமின்றி வா;
யாரும் உன்னைப் பார்க்க மாட்டார்கள்,
அவர்கள் பார்த்துக் கொண்டிருப்பார்கள்
தாரகைகளை.''

தூக்கத்தில் ''ப்ரதீ!'' என்று கூவிக்கொண்டு தூக்கத்திலிருந்து விழித்துக் கொள்வார் சுஜாதா. தாம் கண்ட

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



காட்சி கனவாக அன்றி உண்மை போலத் தோன்றியதால் அவர் ப்ரதீ எங்கே என்று தேடத் தொடங்குவார்.

சுஜாதா இரண்டாம் மாடியறையைத் திறந்து கொண்டு உள்ளே போய் நின்றார். அங்கே ப்ரதீயின் படுக்கை சுருட்டி வைக்கப் பட்டிருக்கிறது. அவனுடைய சட்டைஅலமாரியில் இருக்கிறது. சுவரில் அவனுடைய போட்டோ, ஷெல்பில் புத்தகங்கள், சூட்கேஸ் இல்லை. அவற்றைப் போலீசார் எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள்.

ப்ரதீயின் கட்டிலின் ஒரு காலைப் பிடித்துக்கொண்டு யோசித்துப் பார்க்கத் தொடங்கினார் சுஜாதா - ப்ரதீயின் சாவில் அவரது மறைமுகப் பங்கு எவ்வளவு? 'விடுதலைப் பத்தாண்டாக' உருவெடுத்து ப்ரதீயை ஆயிரத்து எண்பத்து நாலாக ஆக்கிய காலத்துக்கு அவனை எப்படித் தயார் செய்திருந்தார் சுஜாதா? அல்லது, அவனுக்கு அவர் செய்திருக்கக்கூடிய, ஆனால் செய்யத் தவறிய, எந்தச் செயலுக்காக ப்ரதீ இப்படி ஆயிரத்து எண்பத்து நாலாகிவிட்டான்? எந்த விஷயத்தில் தவறிவிட்டார் சுஜாதா?

திவ்யநாத்துக்கு ப்ரதீயைக் கட்டோடு பிடிக்காது. ''நீ தான் அவனை எனக்குச் சத்ரு ஆக்கிட்டே!அவன் அம்மாக் கோண்டு!'' என்று சுஜாதாவைத் திட்டுவார் அவர்.

இதைக் கேட்டுத் திகைப்பார் சுஜாதா. அவர் ஏன் மகனைத் தந்தைக்கு விரோதியாக்க வேண்டும்? திவ்யநாத் என்ன சுஜாதாவின் எதிரியா? திவ்யநாத் நம்பும் விஷயங்களில்தானே - கௌரவம், வாழ்க்கை வசதி, பாதுகாப்பு இவற்றில்தானே - சுஜாதாவுக்கும் நம்பிக்கை! நம்புகிறாரா இல்லையா என்ற கேள்வியே அவருள் இதுவரை எழுந்ததில்லை. அப்படியானால் அவர் நம்புகிறார் என்றுதானே பொருள்!

சுஜாதா பெரிய இடத்துப் பெண். அந்தக் குடும்பம் பழைய பழக்க வழக்கங்களைப் பின்பற்றுவது. பெண் லோரெட்டோ கல்லூரியில் படித்து பி.ஏ. பாஸ் செய்வது கலியாணத்துக்காகத்தான். திவ்யநாத்தும் கௌரவமான

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



குடும்பத்தைச் சேர்ந்தவர்தாம். இருந்தாலும் வசதி போதாது. எனினும் சுஜாதாவின் அப்பா பெண்ணைத் திவ்யநாத்துக்கு மணம் செய்து வைத்தார். மருமகன் வாழ்க்கையில் நன்கு முன்னேறுவான் என்ற நம்பிக்கை அவருக்கு.

சுஜாதாவின் இந்த மாளிகையில், பாதுகாப்பில் நம்பிக்கை உண்டு, ஆகையால் திவ்யநாத்தின் குற்றச்சாட்டில் உண்மை இல்லை.

அப்படியானால் சுஜாதா ப்ரதீயைத் திவ்யநாத்தின் எதிரியாகும் படி சொல்லவில்லை என்பது ருசுவாகிறது. ஆனால் ப்ரதீ திவ்யநாத்தைத் தன் எதிரியாகக் கருதவில்லை என்பது ருசுவாகவில்லை. ப்ரதீதான் தந்தையை வெறுத்தான் என்பது சுஜாதாவுக்கு நன்றாகவே தெரியும்.

''ஏன் வெறுக்கறே, ப்ரதீ?''

''திவ்யநாத் சாட்டர்ஜிங்கற தனி மனிதன் என் எதிரியில்லை.''

''அப்படீன்னா?''

''அவர் நம்பறாரே அந்த விஷயங்கள், அந்த மதிப்பீடுகள், அவை எனக்கு உடன்பாடில்லை. இன்னும் பல பேர் அவற்றை நம்பறாங்க. அப்படி நம்பறவங்க எல்லாரும் ஒரு வர்க்கம். அந்த வர்க்கத்தை நான் வெறுக்கிறேன்..அந்த வர்க்கத்திலே அப்பாவும் ஒருத்தர்.''

''என்ன சொல்றே ப்ரதீ? எனக்குப் புரியவில்லை?''

''புரிஞ்சுக்க ஏன் முயற்சி பண்றே?... பொத்தானைத் தச்சுக் கொடு.''

''ப்ரதீ, நீ மாறிக்கிட்டிருக்கே.''

''மாற வேணாமா?''

''நீ நாள் பூரா எங்கே சுத்தறே?''

''சும்மா வம்பளந்துக்கிட்டிருக்கேன்.''

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



''யாரோடே?''

'' சினேகிதங்களோடே.''

''பொத்தானைத் தச்சுட்டேன், இந்தா. இதுக்காகத்தான் உனக்கு அம்மாவோடே ரெண்டு நிமிஷம் பேச நேரங் கிடைச்சுது.''

ப்ரதீ ஒன்றும் சொல்லவில்லை, கண்களை இடுக்கிக்கொண்டு சிரித்தான். அவனுடைய சிரிப்பில், பேசும் முறையில் கொஞ்சங் கொஞ்சமாக ஒரு மாற்றம் நிகழ்ந்து கொண்டிருந்தது. சகிப்புத்தன்மை, பொறுமை, சுஜாதா பேசுவதற்கு முன்னாலேயே தான் சொல்வது சுஜாதாவுக்குப் புரியாது என்று தெரிந்தவன் போல அவன் நடந்து கொண்டான். ஒரு தந்தை தன் சிறிய பெண்ணிடம் பேசுவது போல் அவன் சுஜாதாவோடு பேசினான். ஏதேதோ சொல்லிக் குழந்தையை சமாதானப்படுத்தும் முயற்சி.

பிள்ளை சிறிது சிறிதாகத் தனக்கு வேற்று மனிதனாக ஆகிக் கொண்டிருக்கிறான் என்று புரிந்தது சுஜாதாவுக்கு. அப்போது அவருக்கு மிகவும் வருத்தம் எற்பட்டது. ஆனால் பயம் ஏற்படவில்லையே, ஏன்?

பிள்ளை தன்னிடமிருந்து இப்படி விலகிப்போவதால், ஒரே வீட்டில் வசித்தும் அவனுடன் உறவு துண்டு படுவதால் பயங்கர விபத்து ஏதேனும் நேரலாம் என்று ஏன் தோன்றவில்லை அவருக்கு?

ப்ரதீயின் அறையில் நின்றவாறு புருவத்தைச் சுளித்து யோசித்துப் பார்த்தார் சுஜாதா.

சுஜாதாவின் அண்ணன் மாதிரி ப்ரதீயும் ஒரு தீராத நோய்வாய்ப்பட்டு இறந்தாலும் சில கேள்விகள் எழலாம். அந்தக் கேள்விகள் இந்த மாதிரி இருக்கும் - சாவுக்குக் காரணம் மருத்துவரின் தவறா, அல்லது உறவினர்களின் தவறா? அந்த மருத்துவரைக் கூப்பிடாமல் வேறு ஒருவரைக் கூப்பிட்டிருக்கலாமோ? அந்த மருந்துக்குப் பதிலாக வேறு மருந்து கொடுத்திருக்கலாமோ?

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஒரு சாதாரண மரணத்துக்குப் பிறகு இத்தகைய் கேள்விகள்தாம் எழும்.

ப்ரதீ ஒரு விபத்தில் இறந்திருந்தால், கேள்வி எழுந்திருக்கும் - அவன் இன்னும் ஜாக்கிரதையாக இருந்திருந்தால் விபத்தைத் தவிர்த்திருக்கலாமோ? விபத்து நேர்ந்த சூழ்நிலையை எப்படியாவது தவிர்த்திருக்க முடியுமா? திவ்யநாத்துக்கு இருந்தாற் போல சுஜாதாவுக்கும் சோதிடத்தில் நம்பிக்கையிருந்தால் ப்ரதீயின் ஜாதகத்தில் விபத்து பற்றிய எச்சரிக்கை ஏதேனும் இருக்கிறதா என்று பார்த்திருப்பார். எச்சரிக்கை இருந்திருந்தால் விபத்தைத் தவிர்க்க உபாயம் ஏதாவது உண்டா என்று யோசித்திருப்பார்.

ப்ரதீ தண்டனைக்குரிய ஒரு பெரிய குற்றத்தைச் செய்து அதன் விளைவாக இறந்திருந்தால், அவனுடைய குற்றத்துக்கு யார் பொறுப்பு, கெட்ட சேர்க்கை காரணமாக அவன் குற்றவாளி ஆனானா என்ற கேள்வி எழும். என்ன செய்திருந்தால் இந்த விளைவைத் தடுத்திருக்கலாம் என்ற யோசனை தோன்றும்.

ஆனால் ப்ரதீயின் மரணம் மேற்கண்ட எந்த வகையிலும் சேரவில்லை. அவன் இந்த சமூகத்தில், சமூக அமைப்பில் நம்பிக்கை இழந்து விட்டான் என்பது தான் அவன் செய்த குற்றம். சமூகமும் நாடும் இப்போது சென்று கொண்டிருக்கும் பாதையில் உண்மையான விடுதலை வராது என்று அவனுக்குத் தோன்றியிருக்கிறது. இந்தக் கருத்தை வெறும் கோஷமாகச் சுவர்களில் எழுதுவதுடன் திருப்தியடையவில்லை அவன், அதை நம்பவும் செய்தான்.

சாஸ்திரீய முறையில் ப்ரதீயின் சடலத்துக்குத் தீ வைக்க திவ்யநாத்தோ ஜோதியோ வரவில்லை. பயங்கர சமூகவிரோதி ப்ரதீயின் சடலம் காண்ட்டாபுகூர் கிடங்கிலேயே பகல் முழுதும் இருந்து விட்டு இரவில் மற்ற சடலங்களுடன் மயானத்துக்குக் கொண்டு செல்லப்பட்டு எரிக்கப்பட்டது.

www.tamilarangam.net



சடலங்கள் இரவில் எரிந்தன. சடங்குகளில் நம்பிக்கையுள்ளவர்கள் பகல் முழுவதும் சிவந்து வீங்கிய கண்களோடு காத்திருந்து விட்டு இரவில் இத்தகைய சடங்குகளைச் செய்யும் பிராமணன் ஒருவனைக் கூட்டிவந்தார்கள். அவன் ஒரு சடலத்துக்கு இவ்வளவு என்ற கணக்கில் ஏதோ காசு வாங்கிக் கொண்டு இரவோடிரவாகச் சடங்குகளை முடித்துக் கொடுத்து விட்டுக் கம்பி நீட்டிவிட்டான்.

ப்ரதீ கோஷங்கள் எழுதியிருந்தான். போலீசார் அவனுடைய அறையைச் சோதனை போட்டுச் சுவரொட்டிகளைக் கைப்பற்றியபோது சுஜாதா அவற்றைப் படித்துப் பார்த்தார்.

''சிறைதான் எங்கள் பல்கலைக் கழகம்!''

''துப்பாக்கிக் குழலிலிருந்துதான்...''

''இந்தப் பத்தாண்டு விடுதலைப் பத்தாண்டாகும்!''

''வெறுங்கள்! அடையாளங்காணுங்கள்! நொறுக்கித் தள்ளுங்கள் மிதவாதிகளை!''

''...இன்று ஏனானாக ஆகிக்கொண்டிருக்கிறது!''

ப்ரதீயும் அவனுடைய தோழர்களும் இந்த கோஷங்களைச் சுவர்களில் எழுதுவார்கள், சுவரொட்டிகளை ஒட்டுவார்கள் என்று சுஜாதா கேள்விப்பட்டார். இதெல்லாம் இரவின் இருளில் நடைபெறும். இரவு பதினோரு மணிக்கு, போலீஸ் குடியிருப்புப் பகுதியையே சூழ்ந்துவிட்ட நேரத்தில், ரஸ்தாவில் பிணமாகிக் கிடக்கும் தபனின் இரத்தம் காய்வதற்கு முன், காலுவைப்போல் உயிரைப் புல்லாக மதிப்பவர்கள் ஒரு கந்தைத் துணியை அந்த இரத்தத்தில் நனைத்து அதைக்கொண்டு ஏதாவதொரு பணக்கார வீட்டின் அழகான சுவரில் எழுதுவார்கள் - ''சிவப்பு வங்காளத்தின் செந்தோழன் தபனின் சிவப்பு இரத்தத்தில்...கடைத்தெருவுக்கு நெருப்பு வைத்து...''

www.tamilarangam.net



எழுதிக் கொண்டிருக்கும்போது காலு சுடப்பட்டுவிட்டதால் வாசகம் பூர்த்தி பெறாமல் நின்று விட்டது.

ப்ரதீயும் அவனுடைய தோழர்களும் ஒரு புதிய சாதியைச் சேர்ந்தவர்கள். இந்த மாதிரி கோஷங்கள் எழுதினால் துப்பாக்கிக் குண்டு பாய்ந்து வரும் என்று தெரிந்தும் கோஷங்கள் எழுதினார்கள். காண்ட்டாபுகூர் சவக்கிடங்குக்கு ஓடோடி வந்தார்கள்.

சுஜாதாவால் ப்ரதீயைக் குற்றவாளிகளின் எந்த ஒரு வகையிலும் சேர்க்க இயலவில்லை.

திவ்யநாத்தும் ஜோதியும் ப்ரதீக்காக அழுத சுஜாதாவுக்கு அறிவுறுத்த முயன்றார்கள். இந்த சமூகத்தில் உணவிலும் மருந்திலும் குழந்தையுணவிலும் கலப்படம் செய்பவர்கள் பிழைத்திருக்கலாம்; கிராமத்து மக்களைப் போலீஸ் குண்டுக்கு இரையாக்கும் தலைவர்கள் தங்கள் வீடு வாசல், கார், போலீஸ் பாதுகாப்பு இவற்றுடன் சௌக்கியமாக இருக்கலாம். ஆனால் ப்ரதீ இவர்களைவிடப் பெரிய குற்றவாளி. ஏனெனில் அவன் இந்த சுயநலமிக்க வியாபாரிகளும் தலைவர்களுமடங்கிய சமூகத்தில் நம்பிக்கையிழந்துவிட்டான். இந்த நம்பிக்கையிழப்பு யாருக்கு நேர்ந்தாலும் - அவன் வயது பன்னிரண்டு, பதினாறு, இருபத்திரண்டு எதுவாயிருந்தாலும் - அவனுக்குரிய தண்டனை சாவுதான்! காலம் மாறுவதற்கேற்பத் தங்கள் கருத்தை மாற்றிக்கொள்ளும் முதுகெலும்பற்ற கலைஞர்கள், எழுத்தாளர்கள், அறிவு ஜீவிகள் அடங்கிய சமூகத்தை வெறுத்து ஒதுக்குபவர்களுக்கு நிச்சயமாக மரண தண்டனைதான்!

இப்படிப்பட்டவர்களை யாரும் கொல்லலாம்! இவர்களைக் கொல்லும் ஜனநாயக உரிமை எல்லோருக்கும் இருக்கிறது! இதற்குச் சட்டத்தின் அனுமதி தேவையில்லை!

இவர்களைத் தனித்தனியாகவோ, கூட்டமாகவோ, யாருக்கும் தெரியாமலோ, பலர் முன்னிலையிலோ, குண்டு,

www.tamilarangam.net



கத்தி, ஈட்டி, அரிவாள் எந்த ஆயுதத்தைக் கொண்டும் கொல்லலாம்.

இப்படியெல்லாம் மீண்டும் மீண்டும் சுஜாதாவுக்கு அறிவுறுத்தினார்கள் திவ்யநாத்தும் ஜோதியும். ஆனால் சுஜாதா அவர்களது கூற்றை ஏற்றுக் கொள்ளவில்லை. சாவதற்கு முன் ப்ரதீ இந்த நம்பிக்கையிழப்பில் நம்பிக்கை வைத்தது ஏன் என்ற கேள்வி எழுகிறது.

ப்ரதீ இறந்தபின் எழும் கேள்வி - அவனது ஃபைல் மூடப்பட்டுவிட்டது உண்மைதான், ஆனால் இதன் மூலம் நம்பிக்கையிழப்பில் அவன் கொண்டிருந்த தீவிர நம்பிக்கை ஒழிக்கப்பட்டு விட்டதா? ப்ரதீயும் அவனுடைய சகாக்களும் இப்போது இல்லைதான். அதனாலேயே எல்லாம் முடிந்து போய்விட்டதா?

ப்ரதீயின் சாவு அர்த்தமற்றதா என்பதுதான் கேள்வி. அந்த மரணத்துக்குப் பொருள் ஒரு பெரிய 'இல்லை' யா?

எல்லாமே பொய்யா? அவனுடைய நம்பிக்கை? அவனது துணிவு? அவனது உணர்ச்சி? தனக்கு மரணம் நிச்சயம் என்று தெரிந்திருந்தும் அவன் ஜனவரி பதினாறாந்தேதி நீலச்சட்டை அணிந்து கொண்டு சுஜாதாவை ஏமாற்றிவிட்டுத் தன் தோழர்களை சமூ, விஜித், பார்த்தா, லால்ட்டு ஆகியோரை - எச்சரிக்கை செய்யப்புறப்பட்டது? புறப்படு முன் அவன் திரும்பி சுஜாதாவை ஒரு முறை பார்த்தது? சுஜாதாவின் அழகிய, கண்ணியம் வாய்ந்த, முதிர்ச்சிபெற்ற முகத்தின் ஒவ்வொரு வேதனைக் கீற்றையும் அவன் தன் மனதில் உள்வாங்கிக் கொண்டது?....

சுஜாதா தலையை ஆட்டிக் கொண்டார். ப்ரதீயின் அறையிலிருந்து வெளியே வந்து கதவைப் பூட்டினார். அன்று முதல் அறைச்சாவியைத் தம்மிடமே, தம் கைப்பையில், வைத்துக்கொண்டார்.

கடந்த இரு ஆண்டுகளாக அவர் தினம் இரவில் ப்ரதீயின் அறைக்கு வருகிறார், துடைக்கிறார், கூட்டுகிறார்,

www.tamilarangam.net



ப்ரதீயின் ஷூவைத் துடைத்து வைக்கிறார், படுக்கையைச் சரி செய்கிறார்.

அவரைப் போல் இன்னும் எத்தனை தாய்மார்கள் இந்த மாதிரி தங்கள் பிள்ளைகளின் சட்டைகளைத் தடவிப் பார்க்கிறார்களோ, அவர்களுடைய போட்டோக்களைத் தொட்டுப் பார்க்கிறார்களோ!

அறையில் சிறிது நேரம் உட்கார்ந்திருப்பார் சுஜாதா. மனதுக்குள் அவனோடு பேசுவார், கண்களை மூடிக்கொண்டு நினைப்பார் ப்ரதீ தம் அருகில் உட்கார்ந்திருப்பதாக. தம்மைப் போல் இன்னும் எத்தனை அம்மாக்கள் தங்கள் குழந்தைகளுக்காக ஏங்குவார்கள் என்று நினைத்துப் பார்ப்பார்.

அவர் ப்ரதீயோடு பேசுவார். அவன் சில சமயம் பதில் சொல்லுவான், சில சமயம் பேசமாட்டான்...

ஜோதியின் அறையில் டெலிபோன் அடித்தது. அதை எடுக்கப் போய்த்தான் இவ்வளவு விஷயங்கள் நினைவுக்கு வந்தன சுஜாதாவுக்கு.

சமூ, லால்ட்டு, விஜித், பார்த்தாவின் வீடுகளில் டெலிபோன் இல்லை. அது அதிகாலையில் ஒலித்து வீட்டிலுள்ளோரின் தூக்கத்தைக் கெடுக்காது.

இப்போது சமூ, லால்ட்டு, விஜித்தின் அம்மாக்கள் என்ன நினைத்துக் கொண்டிருப்பார்கள்?

நைலான் நைட்டி அணிந்த வினி எரிச்சலோடு கதவைத் திறந்தாள். இவ்வளவு சீக்கிரம் எழுந்திருக்கும் வழக்கமில்லை அவளுக்கு.

ஜோதிக்கும் வினிக்கும் நிறையத் தூக்கமும் ஓய்வும் தேவை. காரணம் அந்த ஜோடிக்குக் காம இச்சை அதிகம். அவர்களுடைய குழந்தை சுமனுக்கு எட்டு மாதம் ஆனதிலிருந்தே அவர்கள் தனித் தனிப் படுக்கைகளில் படுத்துக் கொண்டாலும் அவர்கள் தீவிரக் காம இச்சை

www.tamilarangam.net



கொண்டவர்கள் என்பது எல்லோருக்கும் தெரியும்.

ஆனால் அவர்கள் விஷயத்தில் உடல் வேட்கை வேறு, காதல் வேறு. அது வேறு வகைக் காதல். அவர்கள் ஒரு பெரிய விருந்து வைத்துத் தங்கள் திருமண ஆண்டு நிறைவைக் கொண்டாடுவார்கள், ஒன்றாகச் சுற்றுவார்கள். அவர்கள் கிளப்புக்குப் போனால் வினி ஜோதியோடு மட்டுந்தான் நடனமாடுவாள் என்று சுஜாதா கேள்விப்பட்டிருக்கிறார். ஆகையால் சமூகத்தில் வினிக்கு மிகவும் நல்ல பெயர்.

சுஜாதா போனை எடுத்தார் - ''யாரு?''

''நான் நந்தினி.''

''நந்தினியா?''

''ஆமா, நான் திரும்பி வந்துட்டேன்.''

''எப்ப?''

''முந்தா நாள்.''

''அப்படியா?''

''நான் ஒங்களைப்பார்த்துப் பேசணும். நான் ஒங்க வீட்டுக்கு வரல்லே. நீங்க ஆபிஸ் போவீங்களா இன்னிக்கு?''

''இன்னிக்குப் போக மாட்டேன் நந்தினி. இன்னிக்கு என் சின்னப் பெண் தூலியோட திருமண நிச்சயதார்த்தம்...சாயங்காலம் தவிர வேறே எப்போ எங்கே ஒன்னைப் பார்க்கலாம்னு சொல்லு, நான் அங்கே வரேன்.''

''மாலை நாலு மணிக்கு?''

''வரேன். விலாசத்தைச் சொல்லு.''

''ஒங்க வீட்டுக்குப் பக்கத்திலேதான் '' என்று நந்தினி ஒரு விலாசம் சொன்னாள்.

ப்ரதீ நந்தினியை மிகவும் நேசித்தான். ஆனால் சுஜாதா நந்தினியைப் பார்த்ததேயில்லை.

சுஜாதா தூங்கிக் கொண்டிருக்கும் ஜோதியின் பக்கம் திரும்பிப் பார்த்தார். அவன் தூங்கும் போது தான்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அவனுடைய முகத்தில் ப்ரதீயின் முகத்தின் சாயல் தெரிகிறது.

சுஜாதா வராந்தாவுக்கு வந்தார். நல்ல குளிர்.

ப்ரதீயும் நந்தினியும் ஒரு கவிதைப் பத்திரிகை நடத்தி வந்தார்கள். அவர்கள் ஒரு சமயம் ஒரு நாடகமும் போட்டார்கள். சுஜாதாவுக்கு அப்போது அம்மை வார்த்திருந்ததால் அவர் நாடகம் பார்க்கப் போகவில்லை. அவர் வீட்டிலிருந்து யாருமே போகவில்லை - ஹேமைத் தவிர. ஹேம் நாடகம் பார்த்துவிட்டு வந்து சொன்னாள், ''சின்ன ஐயா நல்லா நடிச்சார் அம்மா, எல்லோரும் கைதட்டினாங்க.''

ஹேம் தான் ப்ரதீயுடன் சரளமாகப் பேசுவாள். ப்ரதீ சுஜாதாவுக்கு அன்னியமாகிக்கொண்டிருந்த காலத்தில் அவனது முகத்தைப் பார்த்து அவனோடு பேசவே பயமாயிருக்கும் சுஜாதாவுக்கு. அப்போது கூடச் சற்றும் தயக்கமில்லாமல் அவனோடு பேசுவாள் ஹேம்-''ஆமாமா, ரொம்ப வேலைதான் ஒனக்கு! கொஞ்சம் சாப்பிட்டுட்டுப் போயிடு, ரொம்பப் புண்ணியம் ஒனக்கு!''

கடைசியில் அவனுடைய தீகா பிரயாணத்துக்காக சூட்கேசில் சாமான்கள் எடுத்து வைத்து உதவியவள் ஹேம் தான்.

ப்ரதீ உண்மையில் தீகா போகவில்லை. தீகா போகும் பஸ்ஸில் ஏறியவன் வழியில் இறங்கி வேறெங்கோ போய்விட்டான்.

ஹேம் மூலந்தான் சுஜாதாவுக்கு முதலில் நந்தினி பற்றித் தெரிந்தது. ஒரு நாள் ஹேம் சொன்னாள், ''சின்ன ஐயாவுக்கு ஒரு பொண்ணு சிநேகம். ரெண்டு பேரும் ரஸ்தாவிலே சந்திச்சுப் பேசிக்கறாங்க. நம்ம சமையல்காரன் தான் பார்த்து என்கிட்ட சொன்னான். பொண்ணு கருப்பாம்''.

அந்தப் பெண் தான் இந்த நந்தினி. சுஜாதாவுக்கு நெஞ்சு ஏனிப்படிப் படபடக்கிறது? பேரல்கான் மாத்திரை சாப்பிட்டபின் வெகுநேரம் படுத்திருக்காததாலா? நந்தினி போன் செய்ததாலா?

www.tamilarangam.net



வினி நன்றாக ஒப்பனை செய்து கொண்டு பாத்ரூமிலிருந்து வெளியே வந்தாள். கழுத்து வரை வெட்டப்பட்ட தலைமுடி. நீலநிறச் சேலையின் மேல் நீல நைலான் ஸ்வெட்டர். கலர் பொருத்தத்தோடு உடையணிவதில் வினி மகா கெட்டிக்காரி. தீபாவும் தூலியும் அப்படித்தான்.

மிகவும் அழகாயிருக்கிறாள் வினி. அவள் கேட்டாள்- ''யார் போன் பண்ணினாங்க அம்மா?''

''நந்தினி.''

''நந்தினி யாரு?''

''ப்ரதீயோட சிநேகிதி.''

வினியின் முகத்தில் ஆர்வம் தெரிந்தது.

''ஏம்மா கீழே போறீங்க?''

''என்ன நடந்துக்கிட்டிருக்குன்னு பார்க்கறேன். நீ சுமனை எழுப்பு. அவனுக்கு ஸ்கூல் உண்டா? பஸ் வந்துடும்.''

''தூலிதான் கீழே போயிருக்காளே!''

மனதுக்குள் சிரித்துக் கொண்டார் சுஜாதா. தான் மேற்பார்வை பார்க்காவிட்டால் இந்த வீட்டில் காலை ஆகாரம், பகல் சமையல், மாலை நேர டீ எதுவுமே சரியாகத் தயாராகாது என்பது தூலியின் எண்ணம். அவள் யாரையும் நம்புவதில்லை.

தூலி பதினாறாம் வயதிலேயே படிப்பை நிறுத்திவிட்டு கைவேலை கற்கத் தொடங்கிவிட்டாள். அது முதலே வீட்டு நிர்வாகப் பொறுப்பையும் எடுத்துக் கொண்டுவிட்டாள்.

திவ்யநாத்தின் தொழில் நல்ல நிலைக்கு வந்த பிறகு அவர் சுஜாதாவைத் தம் வேலையை விட்டுவிடச் சொன்னார். சுஜாதா இணங்கவில்லை, ப்ரதீக்கு எட்டு வயது ஆகும் வரை சுஜாதாவின் மாமியார் உயிருடனிருந்தார். அதுவரை தம்மிஷ்டப்படி ஒரு துணி வாங்கக் கூட



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



உரிமையில்லாமலிருந்தது சுஜாதாவுக்கு. ஆகவே தாமே வேலை பார்ப்பதன் மூலம் தமக்குக் கிடைத்துள்ள சுதந்திரத்தை இழக்க மனமில்லை அவருக்கு.

திவ்யநாத்துக்கும் அவருடைய தாய்க்கும் சுஜாதா தொடர்ந்து பணிபுரிவது பிடிக்கவில்லை. சுஜாதாவுக்கு வீட்டுப் பொறுப்பு இல்லை. குழந்தை குட்டிகளைச் சுமையாகக் கருதுகிறார் என்றெல்லாம் அவர்கள் சுஜாதாவின் மேல் குற்றஞ் சாட்டுவார்கள்.

உருவச் சாயலிலும் சுபாவத்திலும் பாட்டியைக் கொண்டிருக்கிறாள் தூலி. ''வீட்டு எசமானி தினம் பத்துமணி நேரம் வீட்டுக்கு வெளியே இருந்தால் அவளோட பொண்ணுதானே வீட்டைப் பார்த்துக்கணும்!'' என்று அடிக்கடி சொல்லுவாள் தூலி.

அவளுடைய முகத்தில் எப்போதும் ஒரு கடு கடுப்பு. டீயை எடுத்துக் கோப்பைகளில் ஊற்றுவது, என்ன சமையல் செய்ய வேண்டும் என்று சொல்வது, இது போன்ற சாதாரணக் காரியங்கள் செய்யும் போது கூட தான் ஏதோ பெரிய தியாகம் செய்வது போல் நடந்து கொள்வாள் அவள்.

கலியாணமாகிவிட்டால் அவள் திருந்திவிடலாம்.

அவள் கைவினைப் பொருள்கள் செய்யக் கற்றுக் கொண்ட பிறகு ஒரு தோழியுடன் சேர்ந்து சேலைகளுக்குப் பிரின்ட் செய்யும் தொழில் செய்யத் தொடங்கினாள். இவ்வாறுதான் டோனிகபாடியாவுடன் தொடர்பு ஏற்பட்டது அவளுக்கு.

இன்று - ப்ரதீயின் பிறந்த நாளென்று - தூலியின் திருமண நிச்சயதார்த்தம் கொண்டாட முடிவு செய்தது டோனியின் அம்மாதான். அவளுடைய குருவான சாமியார் அமெரிக்காவில் வசிக்கிறார். அவர்தான் அந்த நாளைத் தேர்ந்தெடுத்திருக்கிறார் நல்ல நாளென்று. சாமியாரின் பஞ்சாங்கப் படிதான் அவருடைய சீடர்கள் தங்கள் காரியங்களைச் செய்தார்கள். அந்தப் பஞ்சாங்கத்தில் விடுமுறை நாள் கிடையாது. ஆண்டில் முன்னூற்று

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அறுபத்தைந்து நாட்களும் செயற்பட வேண்டிய நாட்கள், தியானத்துக்குரிய நாட்கள். திவ்யநாத்தும் டோனியின் அம்மா சொன்னதை ஒப்புக் கொண்டபோது சுஜாதாவைக் கலந்து ஆலோசிக்கவில்லை...

மாடியிலிருந்து கீழே இறங்கும் போதே சுஜாதாவுக்குப் புரிந்தது, தூலி தம்முடன் மனதுக்குள் சண்டை போட்டுக் கொண்டிருக்கிறாளென்று. இன்று தூலியின் வாழ்க்கையில் ஒரு முக்கியமான நாள். ஆனால் அம்மா அதற்குப் போதிய முக்கியத்துவம் அளிக்கவில்லைஎன்று தூலிக்குக்கோபம்.

''நீ என்ன சாப்பிடறே, அம்மா?''

''கொஞ்சம் எலுமிச்சம் பழச் சாறு.''

''ஏன்? வலி அதிகமாயிருச்சா?''

''இல்லை...இப்போ இல்லை.''

''நீ ஏன்தான் இப்படி பிடிவாதம் பிடிக்கிறியோ? இப்பல்லாம் அப்பெண்டிக்ஸ் ஆபரேஷன் ரொம்ப சாதாரண விஷயம்.''

அப்பெண்டிக்ஸ் வளரத் தொடங்கியதுமே அதை வெட்டி விடுவதுதான் நல்லது. ஆனால் சுஜாதா தம் அப்பெண்டிக்ஸை வளரவிட்டுவிட்டார். மேலும், அதை உடனே அறுத்துவிடாமலிருந்தால் சீழ்கோத்துக் கொள்ளும் என்று மருத்துவர் பயப்படுகிறார். ஆபரேஷன் செய்வதிலும் ஆபத்து இருக்கத்தான் செய்கிறது. சுஜாதாவுக்கு இதயம் பலவீனமாயிருக்கிறது, ரத்தசோகை வேறு. ஆகையால் இப்போது ஆபரேஷன் செய்வது உசிதமில்லை.

இதெல்லாம் நேற்றே தெரிந்துவிட்டது சுஜாதாவுக்கு. ஆனால் அவர் இதைத் தூலியிடம் சொல்லவில்லை. ''ஆபரேஷன் பண்ணிக்கறேன்'' என்று மட்டும் சொன்னார்.

''எப்போ?''

''ஒன்னோட கலியாணத்துக்கப்புறம்.''

www.tamilarangam.net



''கலியாணம் ஏப்ரல்லே தானே!''

''தேவைப்பட்டா அதுக்கு முன்னாலேயே பண்ணிக்கறேன்...... ஹேம், ஹேம்!....''

''ஏம்மா?''

''எனக்குக் கொஞ்சம் எலுமிச்சம் பழச்சாறு கொடு.''

''இவ்வளவு அதிகாலையிலே யாரு ஒனக்கு போன் பண்ணினாங்க?'' தூலி கேட்டாள்.

''நந்தினி.''

இதைக் கேட்டதும் தூலியின் முகம் சிவந்தது. புருவங்கள் அதிருப்தியில் சுருங்கின. அவள் ஸ்பூனால் பலமாக டீக் கெட்டிலைக் கிளறினாள் டீக் கஷாயம் கெட்டியாக இருக்கிறதா என்று பார்க்க. பிறகு சொன்னாள், ''இந்த வீட்டிலே டீகுடிக்க எல்லாரையும் கூப்பிடறதுக்கு மணி அடிக்கற ஏற்பாடு செஞ்சாத் தேவலை. அவங்கவங்க இஷ்டப்பட்ட நேரத்துக்கு வராங்க. இதனாலே வேலைக்காரங்களுக்கும் அசௌகரியம், எனக்கும் கஷ்டமாயிருக்கு.''

தூலியின் குரல் சுஜாதாவின் மாமியார் குரல் மாதிரியே இருந்தது. குழந்தைகள் மகிழ்ச்சியாகப் பேசிக் கொண்டு சாப்பிடுவது சுஜாதாவின் மாமியாருக்குப்பிடிக்காது. சீக்கிரம் சாப்பிடுங்க என்று விரட்டுவார். அவருடைய கட்டுப்பாட்டுக்கு எல்லோரும் அடங்கி நடந்தார்கள். ப்ரதீ மாத்திரந்தான் இதற்கு விதிவிலக்கு. அவன் தினம் தாமதமாக எழுந்திருப்பான். அவன் சாப்பிடவருவதற்குள் உணவு மேஜையிலிருந்து அப்புறப்படுத்தப்பட்டிருக்கும். அவன் சமையலறைக்குப் போய் ஹேமுக்கருகில் பலகையின் மேல் உட்கார்ந்து கொண்டு சாப்பிடுவான்.

''விசித்திரமான வீடு! விசித்திரமான ஒழுங்கு!'' அதிருப்தியோடு சொன்னாள் தூலி.

அவளுக்கு இப்போது தான் வயது இருபத்தெட்டு. அதற்குள் இவ்வளவு அலுப்பு!

www.tamilarangam.net



''ஜோதி ரொம்ப நேரங்கழிச்சுப் படுக்கப் போறான். அவனை இப்பவே ஏன் எழுப்பணும்?...ஒன்னோட அப்பா தான் டீ குடிக்கறதில்லே, மோர்தான் குடிப்பார்...'' சுஜாதா சொன்னார்.

''நான் இப்போ அவரைப் பத்திப் பேசல்லே. அப்பாவோட மஸாஜ் முடிஞ்சதுமே நான் அவருக்கு மோர் அனுப்பிச்சுட்டேன்......''

''வினி பூஜையறையிலே இருக்கா.... இதோ வந்துடுவா....''

''வெறும் பாசாங்கு!''

''ஏன் பாசாங்குங்கறே? ஒன் பாட்டி நாள் தவறாமே பூஜை பண்ணுவாங்க. எனக்கு அதெல்லாம் பிடிக்காது. பேருக்கு ரெண்டு பூவைப் போட்டுட்டு வந்துடுவேன். வினிக்கு இதெல்லாம் பிடிக்குது, பூஜை செய்யறா. இதிலே என்ன பாசாங்கைப் பார்த்தே?''

''எனக்குத் தெரியாதும்மா...வெளிநாட்டிலே பொறந்து பதினாறு வயசு வரை அங்கேயிருந்தவளுக்கு இவ்வளவு பக்தி எங்கேருந்து வந்தது?''

''அவளோட அப்பா வெளிநாட்டிலே வேலை பார்த்துக்கிட்டு இருந்ததாலே அவளும் அங்கே பொறந்து வளர்ந்தா. வெளிநாட்டிலே வளர்ந்ததுக்கும் பூஜை பண்றதுக்கும் என்ன விரோதம் இருக்க முடியும்? அப்படியொண்ணும் விரோதம் இருக்கறதாத் தெரியல்லியே எனக்கு!''

''பக்தி உண்மையா இருந்தா ஒப்புத்துக்குவேன். அண்ணிக்குப் பூஜையறையும் ஒரு வீட்டு அலங்காரம் மாதிரி.''

''நீயுந்தான் பார்க் தெருவிலே ஒன் எதிர்காலக் கணவனோட கோவிலுக்குப் போறே.''

''அது வேறு விஷயமாக்கும்.''

www.tamilarangam.net



''எனக்கு அப்படித் தோணல்லே. யாருக்கு எதிலே நம்பிக்கை இருக்கோ அதை நம்பிட்டுப் போகட்டுமே! பொறத்தியாரோட நம்பிக்கை பாசாங்கு, என்னோட நம்பிக்கை தான் உண்மைன்னு ஏன் நினைக்கணும்?''

''ப்ரதீயும் பொறத்தியாரோட நம்பிக்கையைக் கேலி பண்ணுவானே!''

''ஒன் வருங்காலக் கணவன் மேலே ஒன்னோட நம்பிக்கை, வினியோட பூஜையிலே நம்பிக்கை - இது ரெண்டும் ஒரே மாதிரி விஷயம். ப்ரதீயோட நம்பிக்கைக்கும் ஒங்க நம்பிக்கைக்கும் வித்தியாசம் இருக்கு, தூலி, ப்ரதீ கூடப் பொறத்தியாரோட நம்பிக்கையைக் கேலி பண்ணினதாகச் சொல்ல முடியாது. அவன் தர்க்கம் பண்ணுவான். அதிலே நீ தோத்துப் போவே, ஒனக்குக் கோபம் வந்துடும். ஒன் கோபத்தைப் பார்த்து அவன் சந்தோஷப்படுவான்.''

''அவனுக்கு என்ன நம்பிக்கை இருந்தது, அப்பா? அவன் ஒண்ணையும் நம்பல்லை.''

''தூலி! நான் ப்ரதீயைப்பத்தி ஒன்னோடே பேசத் தயாரில்லே.''

''ஏனோ?''

''ஏன்னா, பேசிப் பிரயோசனமில்லை. ஒனக்கு ப்ரதீயைத் தெரியாது.''

''நீ இன்னும்...''

''தூலி! மேலே பேசாதே!''

சுஜாதாவின் கை நடுங்கியது. அவர் கண்ணாடி டம்ளரைக் கீழே வைத்தார். பிறகு ஹேமிடம் சொன்னார், ''ஹேம், வினியை டீ குடிக்க வரச் சொல்லு?''

அவருடைய பெண் தூலி அவரைக் கொடூரமாகப் பார்த்தாள். பிறகு ஒரு மாதிரி அன்னியமான குரலில் கேட்டாள், ''இன்னிக்கு லாக்கர்லேருந்து நகைகளை எடுத்துக்கிட்டுவர நான் தான் போகணுமா?''

www.tamilarangam.net



''இல்லை நான் போறேன்.''

''சாயங்காலம் வீட்டிலேதானே இருப்பே?''

''ஆமா.''

''இன்னிக்கு நீ டோனியோட சிநேகிதங்களோடே சகஜமாப் பழகுவியா?''

''சரோஜையும் கூப்பிட்டிருக்கீங்களா?''

''கூப்பிட்டிருக்கோம்....வருவானா இல்லையா, தெரியாது.''

சரோஜ் பால்! அவனுக்கு மன்னிப்பு இல்லை!

இரண்டாண்டுக் காலம் புலன் விசாரணை, தண்டனையளிப்பு எல்லாம் சரோஜ்பாலின் பொறுப்பில்தான் விடப்பட்டிருந்தது. அவனுடைய அசாதாரணத் திறமை, துணிவு!...

விடுதலைப் பத்தாண்டு! விடுதலைப் பத்தாண்டு!

சரோஜ்பால் தான் தளபதி. அவன் தன் படையை ஒழுங்குபடுத்துகிறான், அதற்கு உத்திரவிடுகிறான் -''காளிக்கு இரத்தம் வேண்டும்!''

சரோஜ்பால்... அழகான தோற்றம், அழகான சிரிப்பு, அழகான உச்சரிப்பு...''எஸ்,மிஸ்டர் சாட்டர்ஜி, கவலையே வேண்டாம்!.... மிஸஸ் சாட்டர்ஜி, நான் இருக்கேன், எனக்கும் அம்மா இருக்கா....''

''எஸ், சர்ச் தி ரூம்!... மிஸஸ் சாட்டர்ஜி, ஒங்க பிள்ளை ஒங்க கிட்டே பொய் சொல்லியிருக்கான். அவன் தீகாவுக்குப் போகல்லே, வழியிலே எறங்கிட்டான்...வழி தவறின இளைஞன். ஜனநாயகத்திலே படர்ந்த புற்றுநோய்... இல்லை, மிஸ்டர் சாட்டர்ஜி, இந்த செய்தி ஒரு பத்திரிகையிலேயும் வராது. நீங்க டோனியோட மாமனாராகப் போறவர். டோனி என்னோட...''

சரோஜ் பால்!

www.tamilarangam.net



தூலி தாயைப் பார்த்தாள். ''அம்மா, எனஃப் இஸ் எனஃப்! நீ ரெண்டு வருஷமா இந்த வீட்டை ஒரு சுடுகாடு மாதிரி பண்ணிவச்சிருக்கே. அப்பா ஒனக்கு முன்னாலே பேசறதேயில்லே. அண்ணன் கூட.... இந்த மாதிரி ஒரு நிகழ்ச்சி நடந்துட்டா அதை மறைக்கத்தான் எல்லோரும் விரும்புவாங்க. அதுதான் இயற்கை...ப்ரதீ செத்துப் போயிட்டான். இப்போ நீ உசிரோட இருக்கறவங்களைப் பத்தித்தான் நினைக்கணும். நீ....''

''அதுக்காக இவ்வள்வு சீக்கிரமாவா மறைக்கப் பார்ப்பாங்க? சடலத்தைப் பார்க்கறத்துக்கு முன்னாலேயா? டெலிபோன்லே செய்தி கேட்டதும் உடனே ஓடிப் போய்ப் பார்க்கணும்னு தோணாதா? காண்ட்டாபுகூருக்கு முன்னா்லே நம்ம வண்டியைக் கொண்டு போய் நிறுத்தினா மானம் போயிடும்னு தோணுமா?

உண்மை என்னவென்றால், டெலிபோன் செய்தி வருவதற்கு வெகுகாலம் முன்பே அப்பாவையும், அண்ணனையும் பொருத்தவரை ப்ரதீ இறந்து போய்விட்டான். அதனால்தான் அந்த டெலிபோன் செய்தியை சுஜாதாவால் நம்ப முடியவில்லை; திவ்யநாத்தும் ஜோதியும் நம்பிவிட்டார்கள். அதனால் தான் அவர்கள் செய்தி கேட்டவுடனே அது வெளியே பரவாதிருக்க முயற்சியில் ஈடுபட்டார்கள்.

இது ஓர் அசட்டு நாடகம் என்று திடீரென்று தோன்றியது சுஜாதாவுக்கு. அவர்களெல்லோருமே அந்த நாடகப் பாத்திரங்கள்.

ப்ரதீ இந்தக் குடும்பத்துப்பையன்தான். ஆனால் தான் கொடுமையான முறையில் கொல்லப் பட்டால் தன் தந்தை, அண்ணன், அக்காமார் தங்கள் சமூகத்தில் இந்த சாவை எப்படி விளக்குவார்கள், இந்த சாவால் அவர்களுக்கு எவ்வளவு அசௌகரியம் ஏற்படும் என்பதையெல்லாம் ப்ரதீ யோசித்துப் பார்க்கவில்லை. அவனுடைய சாவால் அவர்களுடைய ஒழுங்கான, கண்ணியமான வாழ்க்கையில் இடைஞ்சல் ஏற்பட்டுவிட்டது. இப்போது அவர்கள் சுஜாதாவை ப்ரதீயின்

www.tamilarangam.net



கட்சியில் சேர்த்துவிட்டுத் தாங்கள் ஒரு தனிக்கட்சி அமைத்துக் கொண்டு விட்டார்கள்.

என்னதான் அப்பாவாக, அண்ணனாக, அக்காவாக இருக்கட்டுமே, இப்படிச் சொல்ல நேர்வது கஷ்டந்தானே!

''எனக்கு ஒரு பிள்ளை இருந்தான்....''

''என் தம்பி ஒருத்தன்....''

''எனக்கு ஒரு தம்பி இருந்தான்....''

அவர்கள் சுஜாதாவை எதிர்க்கட்சியாக வைத்துக்கொண்டு விட்டார்கள். ஏனென்றால் அவர் தம் வாழ்க்கை சீர்குலைந்ததற்காக ப்ரதீயைப் பொறுப்பாக்கவில்லை. அவர் நெஞ்சிலடித்துக் கொண்டு அழவில்லை; அவர்களுடைய நெஞ்சில் முகத்தை வைத்துத் தேம்பவில்லை. எப்போதும் தங்கள் காரியத்தைப் பற்றியே முதலில் நினைப்பவர்களிடம் ப்ரதீயைப் பற்றிப் பேசி ஆறுதல் தேடக்கூடாது என்று முன்னதாகவே முடிவு செய்துவிட்டார் அவர். ப்ரதீயின் அப்பா, அண்ணன், அக்காமார்களைவிட ஹேம் அவருக்கு இன்னும் நெருக்கமானவளாகத் தோன்றினாள்.

ப்ரதீ மாறத் தொடங்கிய நாளிலிருந்தே மற்றவர்கள் உள்ளூற அவனை மாற்றுக் கட்சிக் காரனாக நினைக்கத் தொடங்கி விட்டார்கள் என்று சுஜாதாவுக்குத் தோன்றியது. அவர்கள் செய்வதை அவன் செய்வதில்லை. பெரியவனான பின் அவன் அவர்களைப் பின்பற்றமாட்டான் என்று அவர்களுக்குத் தெரிந்துவிட்டது. அதனால் அவன் எதிர்க்கட்சிக்காரன்.

ப்ரதீ ஜோதியைப் போல் நிறையக் குடிப்பவனாயிருந்திருந்தால்; நீபாவின் புருஷன் போல் போதையில் உளறுபவனாயிருந்திருந்தால்; சில நாட்களுக்கு முன்பு கூட ஒரு பெண் டைபிஸ்ட்டோடு கூடிக் குலவிக் கொண்டிருந்த திவ்யநாத் போலிருந்திருந்தால்; டோனி கபாடியா மாதிரி மோசடிக்காரனாக இருந்திருந்தால்; புருஷனின்

www.tamilarangam.net



அத்தை பிள்ளை யொருவனுடன் பகிரங்கமாகக் குடித்தனம் நடத்தும் நீபாவைப் போல் ஒழுக்கங் கெட்டவனாக இருந்திருந்தால், அவர்கள் ப்ரதீயையும் தங்கள் கட்சியில் சேர்த்துக் கொண்டிருப்பார்கள்.

அல்லது, ப்ரதீ பெரியவனான பிறகு அவன் தங்களைப்போல் இருப்பான் என்ற நம்பிக்கையாவது ஏற்பட்டிருந்தால் அவர்கள் அவனை எதிர்க்கட்சியாகக் கருதியிருக்க மாட்டார்கள்.

ஆனால் ப்ரதீ அவர்களுடைய ஈடுபாடுகள் எதிலுமே அக்கறை காட்டவில்லை.

தம் குடும்பத்தினரின் ஒழுங்கற்ற செயல்களுக்காகத் தாம் துன்புறுவதாகத் தோன்றியதில்லை சுஜாதாவுக்கு. முதலாவதாக, எந்த நிகழ்ச்சியையும் இயல்பாக ஏற்றுக் கொள்ளக் கற்றிருந்தார் அவர். இரண்டாவதாக, அவர்களுடைய நடவடிக்கைகளைக் கண்டிக்கத் தமக்கு உரிமை இருப்பதாக அவர் நினைக்கவில்லை. திவ்யநாத்துக்குப் பெண் சபலம் எப்போதுமே உண்டு. இதற்காக அவருடைய தாயார் அவரைக் கண்டித்ததில்லை. தம் பிள்ளை ஆண்பிள்ளை, பெண்டாட்டிக்கு அடங்கிக்கிடப்பவன் அல்ல என்பதில் அவருக்குப் பெருமை.

சுஜாதாவுக்கு இதனால் மன வருத்தம் ஏற்படாமலில்லை. ஆனால் உலகத்தில் கலப்பற்ற மகிழ்ச்சி யாருக்குத்தான் கிடைக்கிறது என்று அவர் தம்மைத் தேற்றிக் கொண்டார்.

ஆனால் ப்ரதீ முற்றிலும் வேறு வகை. சிறுவயதிலிருந்தே அவனைப் பொய்சொல்லி ஏமாற்ற முடியாது. காரணத்தை விளக்கினால் தான் அவன் ஒப்புக்கொள்வான். அடக்குமுறைக்குப் பணிய மாட்டான். அவன் வளர வளர சுஜாதா அவனிடம் தம் கணவரிடமிருந்தும் மற்ற குழந்தைகளிடமிருந்தும் முற்றிலும் வேறுபட்ட ஒரு மானிட உலகத்தைக் கண்டார்.

சுஜாதா அவனுடன் சேர்ந்து புத்தகங்கள் படித்தார்,

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அவனைக் கூட்டிக் கொண்டு மிருகக்காட்சிசாலைக்குச் சென்றார், அவனுடைய நண்பர்களை வீட்டுக்கழைத்து அவர்களுடன் உரையாடினார்; இப்போது கொஞ்சங் கொஞ்சமாக அவனுடைய உலகத்தில் தாமும் கலந்துவிட்டார். ப்ரதிதான் அவர் உயிர் வாழ்வதற்கான ஒரே காரணம் என்று ஆகிவிட்டது. அவன் விஷயத்தில் தமக்கு ஒரு சிறப்பான உரிமை இருக்கிறது என்று நம்பத் தொடங்கிவிட்டார் அவர்.

அவர் ப்ரதீக்காகக் கணவரையும் மாமியாரையும் எதிர்த்துக் கொண்டார். அவர்கள் அவனை அநியாயமாக அடக்கவோ அல்லது அதீத சலுகையுடன் நடத்தவோ அவர் அனுமதிக்கவில்லை. அவருடைய மாமியார் மற்ற குழந்தைகளைத் தம் கட்டுப்பாட்டில் வைத்திருக்க, சுஜாதா ப்ரதீயின் மேல் தம் உரிமையை விட்டுக் கொடுக்கவில்லை. சுஜாதாவின் பரிவின் நிழலில் ப்ரதீ பிடிவாதக்காரனாக, எளிதில் உணர்ச்சிவசப்படுபவனாக, கற்பனைமிக்கவனாக வளர்ந்தான். இவ்வாறு கணவர், மாமியார் ஆகியோரின் ஆளுமைக்கு அடிமைப்படாமல் ப்ரதீயை வளர்க்க மிகவும் சிரமப் படவேண்டியிருந்தது சுஜாதாவுக்கு.

அதனால் தான் இவர்கள் இப்போதும் இவ்வளவு கடுமையாக இருக்கிறார்களா? அல்லது, ப்ரதீ விஷயத்தில் இவர்களது மனதில் ஏதாவது குற்ற உணர்வு இருக்கிறதா? அதன் காரணமாகத்தான் இயல்புக்கு மாறாக அடங்கியிருக்கிறார்களா?

இதைப் பற்றியெல்லாம் சுஜாதா பேசவில்லை. அவர் தூலியிடம் ''தூலி, நீ சௌக்கியமா இருப்பே'' என்று மட்டும் சொன்னார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நண்பகல்

இரண்டு லட்சம் மக்கள் வசிக்கும் இந்தக் குடியிருப்பு திட்டமிட்டு அமைக்கப்பட்டதல்ல. மேற்கு வங்கத்தில் அகதிகளால் பலவந்தமாகக் குடியேறப்பட்ட முதல் குடியிருப்பு இது. அதற்கு முன் இது ஒரு ஜமீந்தாருக்குச் சொந்த்மாக இருந்தது. இங்கே ஒரு பூந்தோட்டம், சில குளங் குட்டைகள், சில சிறு கிராமங்கள் இருந்தன.

நாற்பத்தியேழாம் ஆண்டுக்குப் பின் மக்கள் பெருக்கத்தின் விளைவாகத் திறந்தவெளி புதர்கள், தென்னந் தோப்பு, வயல்கள் எல்லாவற்றையும் விழுங்கிவிட்டு இந்தக் குடியிருப்பு உருவாயிற்று.

வெகுகாலமாகவே இந்தக் குடியிருப்பு வாசிகள் எதிர்க்கட்சிக்கே வோட்டுப் போட்டு வந்ததன் விளைவாகவோ என்னவோ, இங்கே பக்கா ரஸ்தா, சுகாதார நிலையம், போதிய அளவில் குழாய்க்கிணறு, முறையான பஸ்வசதி எதுவுமே செய்யவில்லை சர்க்கார். கடந்த இருபதாண்டுகளில் பொருளாதார நிலையில் உயர்ந்தவர்களும் இந்தக் குடியிருப்புக்காக ஒன்றும் செய்யவில்லை.

இவ்வளவு காலத்துக்குப் பிறகு கல்கத்தா நகர முன்னேற்ற வாரியம் சிறிது வேலை தொடங்கியிருக்கிறது. சாலைகள் போட ஏற்பாடுகள் நடக்கின்றன.

இப்போது இங்கே குழப்பமோ, பயமோ இல்லை. திடீரென்று கடைக் கதவுகளும், வீட்டுக் கதவுகளும் மூடப்படுவதில்லை; ரிக்ஷா ஓட்டிகளும் வழிப்போக்கர்களும், தெரு நாய்களும் மூச்சிரைக்கப் பயந்தோடுவதில்லை. திடீரென்று குண்டு வெடி, ' அடி கொல்லு!' என்ற சத்தம், அடிபட்டவர்களின் முனகல் கேட்பதில்லை இப்போதெல்லாம்.

இப்போது இரும்புவலை போட்ட கருப்பு வேன் ரஸ்தாவில் பாய்ந்தோடுவதில்லை. இரும்புத்தொப்பியணிந்த போலீசோ அல்லது ராணுவமோ துப்பாக்கியைத் தூக்கிக்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கொண்டு இளைஞனெவனையும் துரத்துவதில்லை. ஓடும் வேனின் சக்கரத்தோடு கயிற்றால் கட்டப்பட்ட வாலிபனின் உடல் ரஸ்தாவில் இழுபட்டுக்கொண்டு போகும் காட்சி இப்போது இல்லை.

இப்போது தெருவுக்குத் தெரு தரையில் இரத்தம், தாய்மார்களின் ஓலக் குரல் இல்லை. சுவர்களில் எழுதப்பட்டிருந்த பழைய வாசகங்கள் அழிந்து போய் வேறு புதிய வாசகங்கள் அங்கே இடம் பெற்றுள்ளன. ''தோழர்....மஜீம்தார் வாழ்க! புரட்சி வீரர்.....உங்களை மறக்க மாட்டோம்!....குடியிருப்பு வீரத்தோழர்களைக் கொலை செய்தவர்களை மன்னிக்கமாட்டோம்!'' போன்ற கோஷங்களை வெற்றி பெற்றவர்களின் ஆணவமுழக்கங்கள் அமுக்கிவிட்டன.

இங்கு நிலவிய ஒழுங்கான வாழ்க்கை முறையை இரண்டரை ஆண்டுக்காலம் கலக்கிய குழப்பத்தின் அடையாளம் இப்போது இல்லை.

குழப்பகாலத்தில் குடிபெயர்ந்திருந்த-அமைதியை விரும்பும் - சுகஜீவிக் குடும்பங்கள் திரும்பக் குடிவந்துவிட்டன. இப்போது இங்கே கள்ளக்கடத்தல் தொழில் தடையின்றி நடக்கிறது. இரவும் பகலும் திரைப்படக்காட்சிகள், புதிய தேவதைகளுக்கு முன்னால் வெறிபிடித்த மக்கள்திரள்.

முன்பு கொலை செய்தவர்கள் இப்போது வேறொரு புதிய அங்கியணிந்து கொண்டு புதிய பெயரில் நடமாடுகிறார்கள். ஓர் அத்தியாயம் முடிந்து விட்டது, பெருங்கதையின் புதிய அத்தியாயம் தொடங்கியிருக்கிறது.

தெரு முனைகளில் நினைவுச்சின்னங்கள் மட்டும் நிற்கின்றன - உடம்பில் தெரியும் காயங்கள் போல. ஆனால் அவற்றில் சமூ, விஜித், பார்த்தா, லால்ட்டுவின் பெயர்கள் இல்லை. ப்ரதீயின் பெயரைப் பற்றிய பேச்சுக்கே இடமில்லை. அவர்களுடைய பெயர்கள் ஒரு வேளை ஒரு சிலரின் உள்ளங்களில் எஞ்சியிருக்கலாம்.

www.tamilarangam.net



சுஜாதா சமூவின் வீட்டில் உட்கார்ந்திருந்தார். வங்கியிலிருந்து நகைகளை எடுத்துக்கொண்டு திரும்பும் வழியில் அங்கு வந்திருந்தார் அவர்.

தம் நகைகளை அவர் முன்னமே நான்காகப் பங்கிட்டுவிட்டார். நீபா, வினி, தூலி, ப்ரதீயின் வருங்கால மனைவி ஒவ்வொருவருக்கும் ஒரு பங்கு.

ப்ரதீக்காக வைத்திருந்த பங்கையும் இப்போது தனக்குத் தரவேண்டுமென்கிறாள் தூலி.

நீபாவின் பெண்ணுக்கும், ஜோதியின் பிள்ளைக்கும் கொஞ்சம் வைத்துக்கொண்டு அவர் மிச்சத்தைத் தூலிக்கே கொடுத்து விடலாம். அவர் கையில் மெல்லிய வளையல், காதில் தோடு, கழுத்தில் ஒரு மெல்லிய சங்கிலி இவை தவிர வேறெதுவும் அணிவதில்லை.

இப்போது அவரது முகத்தில் சோர்வு, வேதனை. அவருக்கு முன்னால் உட்கார்ந்து கொண்டு அரவமின்றி அழுதுகொண்டிருக்கிறாள் சமூவின் அம்மா. அவள் கண்களிலிருந்து நீர் வெள்ளமாகக் கொட்டுகிறது. கடந்த ஓராண்டுக் காலத்தில் இன்னும் இளைத்து, மெலிந்து போய்விட்டாள் அவள். அழுக்கான வெள்ளைச் சேலையை அணிந்திருக்கிறாள்.

வைக்கோல் வேய்ந்த கூரையில் பாசி படர்ந்திருக்கிறது, படல் பல இடங்களில் உடைந்திருக்கிறது, அட்டைகளால் ஓட்டைகள் அடைக்கப்பட்ட சுவர்களுடன் பரிதாபமாகக் காட்சியளிக்கிறது சமூவின் வீடு. எனினும் இங்கு வந்து உட்கார்ந்தால் சிறிது அமைதி கிடைக்கிறது சுஜாதாவுக்கு - ஏதோ தம் சொந்த வீட்டில் இருப்பதுபோல.

முதன் முதலில் சுஜாதாவைப்பார்த்து சமூவின் அக்கா அழுதுவிட்டாள். இப்போது அவரைப் பார்த்ததும் அவளுடைய புருவம் சுருங்கியது.

சமூ இறந்து சிறிது காலத்துக்குள் அவனுடைய தந்தையும் காலமாகிவிட்டார். குழந்தைகளுக்கு ட்யூஷன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சொல்லிக் கொடுத்துக் குடும்பத்தைக் காப்பாற்றிவருகிறாள் சமூவின் அக்கா. கடுமையான உழைப்பாகிய தீயில் அவளுடைய உடம்பு பொசுங்கிக் கருகிவிட்டது. அவளுடைய கண்களில் மாத்திரம் கையாலாகாத கோபம் குடி கொண்டிருக்கிறது. வீட்டில் வயதுவந்த ஒரே பிள்ளை சமூ. அவன் செத்துப்போய் இப்போது அவளைச் சாக அடித்துக்கொண்டிருக்கிறான். அவனுடைய தந்தை அவனைக் கல்லூரியில் படிக்க வைப்பதற்காக அவளுடைய படிப்பை நிறுத்திவிட விரும்பினார். அவன் தான் ட்யூஷன் சொல்லிக்கொடுத்து அந்தப் பணத்தில் தன் படிப்பைத் தொடர்ந்தான்.

அவள் சுஜாதாவை நிஷ்டூரமாகப் பார்த்து விட்டு வெளியே போய்விட்டாள். அவள்தான் இப்போது குடும்பத்தலைவி. சுஜாதா ஒவ்வொராண்டும் அங்கு வந்து தன் இறந்துபோன தம்பியை நினைவுறுத்துவது அவளுக்குப் பிடிக்க வில்லை என்று சுஜாதாவுக்குப்புரிந்தது. வெளியேறும் பெண்ணை அவர் கெஞ்சும் பார்வையோடு பார்த்தார் - நான் இங்கே வருவதைத் தடுக்காதே என்று மன்றாடுவதுபோல். ஆனால் அவருடைய வாயிலிருந்து வார்த்தையெதுவும் வரவில்லை, சமூவின் அக்கா போய்விட்டாள்.

சமூவின் அம்மா அழ, சுஜாதா மௌனமாக உட்கார்ந்திருந்தார்.

''அழுவாதே, அழுவாதேன்னு தான் எல்லோரும் சொல்றாங்க அம்மா. அழுதாப் புள்ளே திரும்பி வந்துடுவானாங்கறாங்க. பார்த்தாவோட அம்மாவோட நிலையைப் பார்த்து ஒன்னைத் தேத்திக்கங்கறாங்க. பார்த்தாவோட தம்பி உசிரோடே தான் இருக்கான். ஆனா, அவன் இங்கே வரமுடியாதாம், அதனாலே எங்கேயோ சித்தி வீட்டிலே இருக்கானாம்!''

''இன்னும் திரும்பி வரல்லியா?''

''இல்லேம்மா...போனவன் போனவன் தான். அவன் திரும்பிவர முடியாதாம்! இது என்ன நெயாயம்

www.tamilarangam.net



அம்மா?''

மறுபடி அழத் தொடங்கினாள் சமூவின் அம்மா.

ப்ரதீயின் மரணத்துக்குப்பின் ஓராண்டு நிறையும் போது இங்கு வருவதற்கு முன் மிகவும் தயங்கினார் சுஜாதா. சில மாதங்களுக்கு முன்பு தான் சமூவின் அப்பா இறந்து போயிருந்தார்.

சுஜாதா முதலில் அந்தக் குடியிருப்பில் நுழைந்து சமூவின் வீடு பற்றி விசாரித்தபோது எல்லாரும் அவரை ஒரு மாதிரியாகப் பார்த்தார்கள். முதலில் ஒருவரும் அவருக்குப் பதில் சொல்ல விரும்பவில்லை. கடைசியில் ஒருவன் ''அதோ பாருங்க, அதுதான் சமூவோட வீடு'' என்று சுட்டிக்காட்டினான்.

சுஜாதாவின் விலையுயர்ந்த வெள்ளைப்புடைவை, கண்ணியமான தோற்றம், சிறிது நரை கலந்த முடிக்குக் கீழே கம்பீரம் வாய்ந்த முகம் இவற்றைப் பார்த்துத் திகைத்து நின்றாள் சமூவின் அம்மா.

''நான் தான் ப்ரதீயோட அம்மா'' என்று சுஜாதா சொல்லியதும் ''ஐயோ சமூ!'' என்று அழத்தொடங்கிவிட்டாள் சமூவின் அம்மா. பிறகு சுஜாதாவைக் கட்டிக் கொண்டு கதறினாள், ''ப்ரதீ ஒங்க புள்ளையா அம்மா?... அவன் எம் புள்ளெக்காகத்தான் உசிரைவிட்டான்... அவன் சமூவையும் மத்தவங்களையும் எச்சரிக்கை பண்ணத்தான் அந்த ராத்திரி இங்கே வந்தான். ''சமூ இருக்கானா?'' என்று கேட்டான். அப்பவே திரும்பிப் போகணும்னான். நான் தான் ''ரா வேளையிலே வெளியே போகாதே பொளுது விடிஞ்சதும் போ''ன்னு சொன்னேன். அந்த ராவு கழியல்லே அவுங்களுக்கு! இந்தச் சின்ன ரூம்புக்குள்ளே விஜித், சமூ, பார்த்தா, ப்ரதீ நாலுபேரும் ஒத்தரையொத்தர் கட்டிக்கிட்டுப் படுத்திருந்தாங்க....''

''எந்த அறையிலே?''

''இந்த ரூம்பிலேதான்! வேறே ரூம்பு ஏது இந்த வீட்டிலே? என் பெரிய பொண்ணு தங்கச்சிகளைக்

www.tamilarangam.net



கூட்டிக்கிட்டுத் திண்ணையிலே போய் உக்காந்திருந்தா. நா சன்னல்லே ஒக்காந்துக்கிட்டு வெளியே பாத்துக்கிட்டிருந்தேன் யாராவது வராங்களான்னு...''

''இங்கேதான் இருந்தானா ப்ரதீ?''

''ஆமாம்மா. எம் புருசனுக்குக் கடைத்தெருவிலே ஒரு சின்னப் பொட்டிக்கடை இருக்கு. மொதல் போடப் பணம் இல்லே. கொளந்தைங்களுக்கு செலேட்டு, பென்சில் இதெல்லாம் விக்கற கடை....சமூ, பார்த்தா, ப்ரதீ அந்த மூலையியே படுத்துக்கிட்டுருந்தாங்க. விடியறதுக்கு முன்னாலே அவங்கள எளுப்பி விடணும்னு எம் புருசன் முளிச்சிக்கிட்டிருந்தாரு..பசங்க மூணு பேரும் ஒரு சமக்காளத்திலே படுத்துக்கிட்டு...என்ன பேச்சு, என்ன சிரிப்பு! அம்மா, ப்ரதீயோட சிரிப்பு இப்பவும் என் கண்ணுக்கு முன்னாலே மொதக்குது....ஒங்க புள்ளே தங்கம்மா!''

''ப்ரதீ இங்கே அடிக்கடி வர்றதுண்டா?''

''வருவானே! தண்ணி கொடுங்கம்பான், டீ போட்டுக் கொடுங்கம்பான், மத்த புள்ளெங்க மாதிரியே என்னோடே பேசுவான்...''

ப்ரதீ இங்கு வருவான், வந்து டீ குடிப்பான், பேசிக் கொண்டிருப்பான்!...

சமூவின் தாயாரை, அந்த அறையை, அறைச்சுவரில் மாட்டியிருந்த காலண்டர்ப் படத்தை, கைப்பிடியில்லாத டீக்கோப்பையைப் புதிய கண்களால் பார்க்கத் தொடங்கினார் சுஜாதா.

ப்ரதீ...அவரது இரத்தத்தின் இரத்தம்....அவனைப் பிரசவிக்கும்போது அவருடைய உயிருக்கே ஆபத்து நேர இருந்தது....அவன் கொஞ்சங் கொஞ்சமாக அவரிடமிருந்து அன்னியப்பட்டுப் போனான், அவருக்கு வேற்று மனிதன் போல ஆகிவிட்டான். அத்தகைய ப்ரதீயுடன் புதிதாகப் பரிச்சயம் பெறத் தொடங்கினார் சுஜாதா அந்த நிமிடம் முதல்....



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அவர் எவ்வளவோ தடவை கனவில் ப்ரதீயைப் பார்த்திருக்கிறார். அவன் நீலச்சட்டை அணிந்திருக்கிறான், தலை சீவிக்கொண்டிருக்கிறான்.

அவர் பக்கம் திரும்பி உற்றுப் பார்க்கிறான்.

இரவு முழுதும் உறக்கம் வராமல், இறுதியில் அதிகாலையில் சோர்வு மிகுதியால் அவருடைய கண்கள் மூடும் போது, ப்ரதீ மாடிப்படியின் கீழிருந்து அவரை நிமிர்ந்து பார்ப்பது தெரிகிறது. ''ப்ரதீ, நீ போகாதே!'' என்கிறார் அவர். ப்ரதீ பேசாமல் அவரைப் பார்த்துக் கொண்டு நிற்கிறான். சுஜாதா ''மேலே வந்துவிடு, ப்ரதீ!'' என்று சொல்கிறார். ப்ரதீ அவரைப் பார்த்தவாறே நிற்கிறான். அவன் பேசவில்லை, அவனுடைய உதடுகளில் புன்சிரிப்பு இல்லை....

ஆனால் இங்கே, சமூவின் வீட்டில், அவன் பேசுவான், சமூவின் அம்மாவிடம் ''தண்ணிகொடுங்க, டீ கொடுங்க'' என்று கேட்பான்....

சமூவின் அம்மா பேசிக்கொண்டே போனாள். ''நான் அவனைக் கேப்பேன், 'நீ ஏம்பா எல்லாத்தையும் தொறந்துட்டு இப்படி வந்திருக்கே? ஒனக்கு என்ன இல்லே. அப்பா ஒசந்த நெலையிலே இருக்கறார், ரொம்பப்படிச்ச அம்மா...ஒனக்கு என்னத்துக்கு இந்த சங்கடமெல்லாம்?'...அவன் பதில் சொல்லமாட்டான்...சும்மா சிரிப்பான்...அந்தச் சிரிப்பு இப்பவும் என் கண்ணிலே நிக்குதும்மா!''

இதைக்கேட்டு அதிர்ச்சியாயிருந்தது சுஜாதாவுக்கு. ப்ரதீயின் அந்த மோகனச் சிரிப்பு தனக்கே உரியது என்றல்லவா நினைத்திருந்தார் அவர்! அவன் அந்தச் சிரிப்பின் நினைவை சமூவின் அம்மாவுக்கும் கொடுத்து விட்டுப் போயிருக்கிறானா?....

அன்று ப்ரதீ வீட்டிலேயே இருந்தான். தன் அறையில் உட்கார்ந்து கொண்டு நாள் முழுதும் ஏதோ எழுதிக் கொண்டிருந்தான். பின்னால் தெரிந்தது சுஜாதாவுக்கு -

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அவையெல்லாம் கோஷங்களுக்கான வாசகங்கள் என்று. போலீஸ் சோதனை செய்தபோது அவற்றைக் கைப்பற்றி எடுத்துச் சென்று விட்டார்கள்.

இப்போது வீட்டில் எஞ்சியிருப்பவை ப்ரதீயின் பள்ளி, கல்லூரிப் புத்தகங்கள், நோட்டுகள், அவன் வாங்கிய பரிசுகள், தங்கமெடல், கோப்பை, ஓடும்போது அணிந்து கொள்ளும் ஷு, டார்ஜீலிங் போயிருந்த போது நண்பர்களுடன் அவன் எடுத்துக்கொண்டபோட்டோ இவைதான், ப்ரதீயின் வாழ்க்கையின் ஒரு சில நினைவுச்சின்னங்கள்.

எல்லாம் நினைவிலிருக்கிறது சுஜாதாவுக்கு....

''அம்மா, எனக்கு இன்னிக்குப் ப்ரைஸ் தருவாங்க. நீ வந்து பார்க்க மாட்டியா?....''

வீட்டுக்கருகில் உள்ள பூங்காவில் நிறுவப்பட்டிருந்த சிறுவர் சங்கத்தில் ப்ரதீ சேர்ந்த நிகழ்ச்சி....

சுதந்திர தினத்தன்று சீருடையணிந்து கொம்பு ஊதிக்கொண்டு மற்ற சிறுவர்களுடன் ஊர்வலம் சென்றது....

கால்பந்துப் போட்டியில் வெற்றிபெற்றுக் கோப்பை பெற்றது, கூடவே காலை முறித்துக் கொண்டது....

கடந்த ஓராண்டு காலமாகத்தான் அவன் மாறத் தொடங்கினான். அந்தக்காலத்தில் அவன் சேகரித்திருந்த புத்தகங்கள், பத்திரிகைகள், எழுதிய போஸ்டர்கள் இவையெதுவும் வீட்டில் இல்லை. போலீசார் அவற்றை எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள். அவற்றை எரித்து விட்டார்கள் என்று கேள்வி.

நாள் முழுதும் வீட்டிலேயே இருந்தான் ப்ரதீ. மாலையில் வங்கியிலிருந்து திரும்பிய சுஜாதா அவனை வீட்டில் பார்த்து வியப்படைந்தார். அவன் ஒரு டெலிபோன் செய்திக்காகத்தான் வீட்டில் காத்துக்கொண்டிருந்தான் என்பது அவருக்குப் பிற்பாடு தெரிந்தது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சமூவுக்கும் மற்ற தோழர்களுக்கும் எச்சரிக்கை அனுப்பப்பட்டிருந்தது குடியிருப்பிலிருந்து ஓடிப் போய்விடும்படி. ஆனால் தூது அனுப்பப்பட்டவன் அவர்களை எச்சரிக்கை செய்யாமல் அதிகாரி வர்க்கத்துக்குத் தகவல் கொடுத்து விட்டான். இந்தச் செய்தி டெலிபோனில் ப்ரதீக்குக் கிடைத்தபோது வரவிருந்த ஆபத்தைத்தடுக்க நேரமில்லை.

இப்படித்தான் அவர்கள் மரித்தார்கள்-பலரை நம்பி. அவர்களால் நம்பப்பட்டவர்களுக்கு வேலை, பாதுகாப்பான, வசதியான வாழ்க்கை இவற்றின் கவர்ச்சி பெரிதாயிருக்கக் கூடும் என்று தோன்றவில்லை ப்ரதீக்கும் அவன் தோழர்களுக்கும். முதலிலேயே பலர் ஒற்றுவேலை செய்வதற்காகவே அவர்களுடைய குழுவில் ஊடுருவியிருந்தார்கள் என்று அவர்களுக்குத் தெரியவில்லை. ப்ரதீயும் அவன் தோழர்களும் வயதில் சிறியவர்கள். நம்பிக்கை அவர்களைக் குருடர்களாக்கிவிட்டது. அவர்களால் தாக்கப்படுகின்ற சமூகத்தின் தன்மை கருவிலேயே மக்களை நஞ்சாக மாற்றவல்லது என்று அவர்கள் உணரவில்லை. லட்சியமாகிய தீயில் புடம் போடப்பட்டவர்களே சாவுக்கு அஞ்சமாட்டார்கள், மற்றவர்கள் அஞ்சுவார்கள் என்று அவர்களுக்குத் தெரியாது. ஆகவேதான் சமூவும் மற்ற தோழர்களும் பத்திரமாக இருப்பார்கள் என்ற செய்திக்காகக் காத்திருந்தான் ப்ரதீ.

நண்பகல் கழிந்தது, மாலை கழிந்தது, அந்தி வந்து விட்டது. குளிர்கால அந்தி நேரம். ப்ரதீயின் கவலை வளர்ந்தது.

சுஜாதா வங்கியிலிருந்து வந்தார்.

''என்னடா, வெளியிலே போகல்லியா?''

''இல்லே.''

''ஏன்?''

''சும்மாத்தான்...வா, டீ குடிக்கலாம்.''

www.tamilarangam.net



இருவரும் டீ குடித்தார்கள். கதவுப் பக்கம் முதுகைத் திருப்பிக் கொண்டு உட்கார்ந்திருந்தான் ப்ரதீ. ஒரு பழைய சால்வையை அவன் போர்த்திக் கொண்டிருந்தான். நிறம் மங்கிய நீலச்சால்வை, அதில் பொட்டுப் பொட்டாக ஓட்டைகள். ப்ரதீ குளிர்காலத்தில் அதைத்தான் போர்த்திக் கொண்டிருப்பான் வீட்டிலிருக்கும் போது. ''அது வேண்டாம், வேறே சால்வையை எடுத்துப் போத்திக்கோ'' என்று சொல்வார் சுஜாதா.

''இல்லேயில்லே, இது நல்ல கதகதப்பாயிருக்கும்னு ஹேம் சொல்றா'' என்பான் ப்ரதீ.

ப்ரதீயின் தலைமுடி சீவப்படவில்லை. கதவு திறந்திருந்தது. கதவுக்கப்பால் முற்றம், குழாயடி, அதையும் தாண்டி சுற்றுச்சுவர் தெரிந்தது.

அன்று டீ குடிக்கும் போது ப்ரதீ வெகு நாட்களுக்குப் பிறகு வினியுடன் விளையாட்டுச் சண்டை போட்டான்.

சில நாட்கள் முன்பு ப்ரதீ தோழர்களுடன் தீகா போவதாகச் சொல்லிவிட்டுப் புறப்பட்டான். ஆனால் அவர்கள் உண்மையில் தீகா போகவில்லை என்று சுஜாதாவுக்குப் பின்னர் தெரிந்தது. நாக்பூர் ஸ்டேஷன் வட்டாரத்தில் போலீசார் குழுமியிருந்தார்கள். இரும்புத் தொப்பியணிந்த போலீஸ்காரன் தீகா செல்லும் பஸ்ஸில் ஏறி, டார்ச் விளக்கை அடித்துப் பயணிகளின் முகங்களை உற்றுப்பார்த்தான். சில இடங்களில் ரஸ்தாவின் இருபுறமும் துப்பாக்கிகளை உயரத் தூக்கிய போலீசார் பாரா காக்க பஸ் மிகவும் மெதுவாகச் செலுத்தப்பட்டது.

ப்ரதீயும் தோழர்களும் அகப்பட்டுக் கொள்ளவில்லை.

ப்ரதீ தீகா போகவில்லை என்று அப்போது சுஜாதாவுக்குத் தெரியாது. வினிக்குந்தான்.

வினி அவனை தீகாவைப் பற்றிக் கேட்டாள்.

''தீகா ரொம்ப மட்டமான ஊர். சாப்பாடு, தங்க இடம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஒண்ணும் வசதியாயில்லே.'' ப்ரதீ சொன்னான்.

''நீ என்ன அப்படிச் சொல்றே? என் சித்தி பொண் போயிருந்தா. அவ எல்லாம் நல்லாயிருக்குன்னு தானே சொன்னா!''

''ஒன் தங்கையா?''

''ஒனக்குத் தெரியாதாக்கும்! அவ ஒன் சிநேகிதன் தீபக் கோடே டென்னிஸ் விளையாடறாளே, ஒனக்குத் தெரியாதா? நீ தான் தீபக் வீட்டுக்கு அடிக்கடி போறியே வம்பளக்க!''

''எனக்கு ஒன் தங்கையை எப்படித் தெரியும்?''

''தெரியாட்டிப் போகட்டும். நிச்சயம் பார்த்திருப்பே!'' என்றார் சுஜாதா.

''ஏனோ?''

''அவ ரொம்ப அழகாக்கும்!''

''ஒன்னை விடவா?''

வினி சொன்னாள், ''அம்மா, ப்ரதீ ஒனக்கு ஐஸ் வைக்கறான். அவனுக்கு ஒங்கிட்டே ஏதோ காரியம் ஆகணும்!''

''சீ, என்ன பேசறே, வினி! அவனுக்கு என்ன காரியம் ஆகணும் எங்கிட்டே? சினிமாவுக்குப் போகவோ, கைச்செலவுக்கோ எங்கிட்டே காசுகேக்கணுமா இவனுக்கு? அம்மாவுக்கு ஐஸ் வைக்கணும்னு என்ன அவசியம் இவனுக்கு? பார்க்கப்போனா அம்மாவே வேண்டாம்!''

''ஏம்மா இப்படிச் சொல்றே?''

''அம்மா, நீ ரொம்ப அசடு.'' வினி சொன்னாள், ''நானாயிருந்தா எப்படியாவது இவனோட ஸ்காலர்ஷிப் பணத்தைப் பிடுங்கிக்கிட்டிருப்பேன்!''

''அது அவ்வளவு சுலபமில்லே, அண்ணி! சந்தேகமிருந்தா அண்ணனைக் கேட்டுப் பாரு!''

www.tamilarangam.net



''அண்ணனை ஏன் கேக்கணும்?''

''அண்ணன் பெரிய செலவாளி. கைச்செலவுக்குக் கொடுத்த பணத்தைச் செலவு செஞ்சுட்டுத் தவிப்பான். நான் எனக்குப் பூணல் சமயத்திலே கிடைச்ச பணத்திலேருந்து கடன் கொடுப்பேன். ஆனா பைசாவுக்குப் பைசா வட்டி வசூல் பண்ணிடுவேன்!''

ப்ரதீ தன்னோடு பேசுவதைத் தவிர்ப்பதாக ஏனோ தோன்றிற்று சுஜாதாவுக்கு. அவர் சொன்னார்-''ஒனக்கு நான் தேவைதானா? என்னைப்பத்தி ஏதாவது விசாரிக்கறியா? ராவும் பகலும் வீட்டுக்கு வெளியிலேயே சுத்தறே. கேட்டா வேலையிருக்குங்கறே....''

''ஆமா, வேலை இருக்கே!''

''ஆகா, இப்பவே இவ்வளவு வேலையா?'' வினி கேலி செய்தாள். ''ஒன் அண்ணன் மாதிரி சீரியஸ் வேலை செய்ய வேண்டி வரும்போது என்ன செய்வே?''

''நான் சீரியஸ் வேலை பண்ணல்லேன்னு ஒனக்கு யார் சொன்னா?''

''ஆமா, ரொம்ப சீரியஸ் வேலைதான் செய்யறே! சும்மா வம்பளக்கறது!''

''வம்பளக்கறது சீரியஸ் வேலை இல்லியா?''

''ஆமாமா, எனக்குத் தெரியும்.''

''என்ன தெரியும்?''

''நந்தினியோடே வம்பளக்கறது ரொம்ப சீரியஸ் வேலைன்னு தெரியும்.''

''நான் அவளோடே வம்பளக்கிறேன்னு யாரு சொன்னா ஒனக்கு?''

''எனக்கே தெரியும். அவள் போன் பண்றபோது நானே போனை எடுத்திருக்கேனே!''

ப்ரதீ சிரித்தான். ஒலி யெழுப்பாமல் சிரிப்பான்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அவன். சிரிக்கும் போது அவனுடைய கண்கள் சிரிக்கும், முகம் பளபளக்கும். சிரித்துச்சிரித்து மழுப்பியே சங்கடமான கேள்விகளுக்குப் பதில் சொல்வதைத் தவிர்த்தான் ப்ரதீ.

''வாம்மா, மேலே போய் லூடோ விளையாடுவோம்'' - ப்ரதீ அம்மாவைக் கூப்பிட்டான்.

''அம்மா, இவனுக்கு ஒங்கிட்டே ஏதோ காரியம் ஆகணும்'' என்று வினி மறுபடியும் சொன்னாள்.

''நீயும் வாயேன்!''

''இல்லேப்பா, எனக்குத் தூலியோடே வெளியே போகணும். நான் வரல்லேன்னா அவளுக்குக் கோபம் வந்துடும்.''

''இஷ்டமில்லாட்டி ஏன் போறே?'' என்று கேட்டான் ப்ரதீ.

சுஜாதாவும் ப்ரதீயும் லூடோ விளையாடினார்கள். அப்போது சுஜாதா ''நந்தினி யாரு?'' என்று ப்ரதீயைக் கேட்டாள்.

''ஒரு பெண்.''

''எனக்கு ஒரு நாள் காட்டறியா அவளை?''

''நீ பார்க்கணும்னா கூட்டிக்கிட்டுவரேன்.''

''எனக்குப் பாக்கணும்.''

''நீ பார்த்தாக் கோவிச்சுக்குவே.''

''ஏன்?''

''பார்க்க ரொம்ப சாதாரணமா இருப்பா.''

''அதனாலே என்ன?''

''பாஸுக்கு அவளைப் பிடிக்காது.''

ப்ரதீ எப்போதும் தன் தந்தையை 'பாஸ்' என்றே குறிப்பிடுவான். அவனுக்கு நினைவு தெரிந்த நாள் முதல்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



''நான் தான் இந்த வீட்டுக்கு பாஸ்! நான் சொல்றபடிதான் இந்த வீட்டிலே நடக்கணும்!'' என்று திவ்யநாத் சொல்வதை அவன் பலமுறை கேட்டிருக்கிறான்.

''பிடிக்காட்டிப் போகட்டுமே!''

''அம்மா, பாஸ் தினம் சாயந்திரம் அஞ்சு மணிக்கப்பறம் எங்கே போறார்னு ஒனக்குத் தெரியுமா?''

அந்த டைப்பிஸ்ட் பெண்ணுடன் திவ்யநாத்தின் உறவு பற்றி ப்ரதீக்குத் தெரிந்து விட்டது என்று சுஜாதாவுக்குத் தோன்றியது.

''ஏன் திடீர்னு இப்படிக் கேக்கறே?''

''சும்மாத்தான்.....தெரியுமா ஒனக்கு?''

''அந்தப் பேச்சு வேண்டாம், ப்ரதீ.''

ப்ரதீ சிறிது நேரம் விளையாட்டில் கவனம் செலுத்தினான். பிறகு கேட்டான், ''என்னாலே ஒனக்கு ரொம்பக் கஷ்டம், இல்லியாம்மா?''

''என்ன கஷ்டம்?''

''சொல்லேன்.''

''ஒரு கஷ்டமுமில்லே...''

''எனக்குச் சில சமயம் தோணுது ஒனக்கு என்னாலே மனக்கஷ்டம் இருக்குன்னு...அண்ணன், சின்ன அக்கா, பெரியக்கா இவங்களாலே ஒனக்கு ஒரு கஷ்டமுமில்லேன்னு தோணுது...''

சுஜாதா பேசவில்லை. ஆறுதல் தருவதற்காகக் கூடப் பொய் பேசப் பிடிக்காது அவருக்கு.

''ஏன் பேசாமே இருக்கேம்மா?''

''கஷ்டப்படறதுன்னா என்ன, ப்ரதீ? எல்லாரும் நான் நினைக்கறமாதிரியே இருக்க முடியுமா? ஒவ்வொருத்தரும் அவங்க மனசுப்படி மகிழ்ச்சியாயிருந்தா எனக்கு

www.tamilarangam.net



மகிழ்ச்சிதான்.''

''அவங்க மகிழ்ச்சியா இருக்காங்களா?''

''அப்படித்தான் சொல்லிக்கறாங்க.''

''ஆச்சரியமாயிருக்கு.''

''என்ன ஆச்சரியம்?''

''நீ ஏம்மா இவ்வளவு அடங்கி இருக்கே?''

''வேறே வழி?....குழந்தைகள் விஷயத்திலே அடங்கியிருக்கும்படி தான் எனக்குப் பயிற்சி கிடைச்சிருக்கு...ஒன் அப்பாவும் பாட்டியும்....''

திவ்யநாத் தம் முதல் மூன்று குழந்தைகளின் வளர்ப்பு விஷயத்தில் சுஜாதாவுக்கு எந்த உரிமையும் கொடுக்கவில்லை. எல்லாக் குழந்தைகளும் பாட்டியின் கட்டுப்பாட்டில் வளர்ந்தன. மனைவியை மட்டந்தட்டாமலே தாய்க்கு மதிப்பளிக்க முடியும் என்று திவ்யநாத்துக்குத் தெரியாது. மனைவியை அடக்கிவைத்துக் கொண்டு தாயைத் தலையில் வைத்துக் கூத்தாடுவதுதான் அவரது கொள்கை.

சுஜாதாவுக்குத் தன்மான உணர்வு அதிகம். திருமணமாகிச் சிறிது காலத்துக்குள்ளேயே அவருக்குப் புரிந்து விட்டது, இந்தக் குடும்பத்தில் சற்றே விலகியிருந்தால்தான் மற்றவர்களுக்கு நிம்மதி என்று. 'மற்றவர்கள்' என்றால் அவருடைய கணவனும் மாமியாரும். ஜோதி, நீபா, தூலி ஆகியோர் அவர்களது குடும்பமாகிய நாடகத்தில் சுஜாதாவை ஒரு துணைப் பாத்திரமாகவே பார்த்து வந்திருக்கிறார்கள், அவரை அலட்சியப்படுத்தியே வளர்ந்திருக்கிறார்கள். ஆகையால் சுஜாதா அவர்களையும் அந்த 'மற்றவர்'களின் குழுவில் சேர்த்துவிட்டார்.

சுஜாதாவின் இந்த மனநிலை திவ்யநாத்துக்குத் தெரியாது. அவருக்குத் தம் மனைவியிடம் அதிக ஈடுபாடும் இல்லை, அதிக அலட்சியமுமில்லை. மனைவி எப்போதும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இயற்கைவிதிப்படி கணவனிடம் அன்பு செலுத்துகிறாள், அவனுக்கு மரியாதை காட்டுகிறாள். ஆனால் கணவனுக்கோ மனைவியின் அன்பை, மதிப்பை, கீழ்ப்படிதலைப் பெற எந்த முயற்சியும் செய்ய வேண்டியதில்லை. வீடுகட்டி அதில் வேலைக்காரர்களை நியமித்ததோடு தம் கடமை முடிந்துவிட்டதாக நினைத்தார் அவர். தாம் மற்ற பெண்களோடு குலாவுவதை மறைக்கக் கூட அவர் முயலவில்லை. அதெல்லாம் செய்யத் தமக்கு உரிமை இருப்பதாக நினைத்தார் அவர்.

எனினும் அவர் கொடுமைக்காரர் அல்ல. தம் தொழில் நன்றாக முன்னேறியதும் அவர் சுஜாதாவை அவருடைய வேலையை விட்டுவிடச் சொன்னார்.

சுஜாதா இணங்கவில்லை. இது அவரது இரண்டாவது எதிர்ப்பு.

தம் ஒழுக்கக்கேடு பற்றித் தம் குழந்தைகள் அறிந்திருந்தார்கள் என்பது திவ்யநாத்துக்குத் தெரியும். ஆனால் இது பற்றி அவர் வெட்கப்படவில்லை. ஏனென்றால் அவருக்குத் தெரியும், தம் முதல் மூன்று குழந்தைகளும் தம்மைப்போன்றவர்கள் தாம், தம்முடைய நடத்தை ஆண்களுக்கேற்றதென்றே அவர்கள் நினைத்தார்கள் என்று.

''ஒன் அம்மாவோட நடத்தை எனக்குப் புரியல்லே....'' அவர் ஜோதியிடம் சொன்னார். ''பெண்ணுரிமை, பெண்ணுரிமைன்னு அலையற டைப் இல்லை அவ. சும்மா ஃபேஷனுக்காக வேலை பார்க்கறவளும் இல்லை. பின்னே ஏன் வேலையை விடமாட்டேங்கறா?''

''நீ அம்மாகிட்டே சொன்னியா?'' ஜோதி கேட்டான்.

''சொன்னேன். இனிமேல் நீ வேலை பார்க்க வேண்டிய அவசியமில்லே. அம்மாவும் இல்லே இப்போ. குடும்பத்தைப் பார்த்துக்கோன்னு சொன்னேன். 'குழந்தைகள் சின்னஞ்சிறிசா இருந்தபோது, நான் அவங்களைப்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பார்த்துக்க வேண்டிய காலத்திலே எனக்கு ஒரு பொறுப்பும் கொடுக்கல்லே நீங்க. இப்போ குழந்தைகள் பெரியவங்களாயிட்டாங்க. குடித்தனம் அதுபாட்டுக்கு நடக்குது. அதை நான் கவனிக்க வேண்டிய அவசியம் என்ன?' அப்படீன்னு சொல்றா.''

திவ்ய நாத்துக்குத் தம் மனைவியைப் புரிந்துகொள்ள இயலவில்லை. சுஜாதா அதீதப் பெண்ணியவாதியுமல்ல, ஃபேஷனுக்காக வேலை பார்த்துக்கொண்டு தெருக்களில் காரோட்டிக் கொண்டு திரியும் பெண்களில் ஒருவருமல்ல. அவர் அமைதியானவர், அதிகம் பேசமாட்டார், நடையுடையிலும் பழைமை வாதிதான். இயன்றவரையில் வீட்டுக் காரில் பயணிப்பதில்லை. டிராமில் வங்கிக்குப் போவார், டிராமிலேயே வீடு திரும்புவார். வீட்டை விட்டு வெளியில் அதிகம் போவதில்லை. உறவினர், நண்பர்களுடன் அதிகம் இழைவதுமில்லை. வீடு திரும்பியபின் சிறிதுநேரம் புத்தகம் படிப்பார், அல்லது தொட்டிச் செடிகளுக்குத் தண்ணீர் ஊற்றுவார், ப்ரதீ வீட்டிலிருந்தால் அவனுடன் பேசிக்கொண்டிருப்பார்.

வேலையைத் துறக்காமலிருந்தது அவரது இரண்டாவது எதிர்ப்பு. அவரது முதல் எதிர்ப்பு ப்ரதீக்கு இரண்டு வயது நிரம்பிய போது நிகழ்ந்தது. ஐந்தாம் முறையாகக் கர்ப்பம் தரிக்க அவர் மறுத்துவிட்டார்.

ரொம்பக் கோபம் வந்துவிட்டது திவ்யநாத்துக்கு. ''புருஷன் பெண்சாதி இருவருக்கும் சில கடமைகள் உண்டு....ஒன் ஆட்சேபத்துக்கு என்ன காரணம்?''

''அதெல்லாம் முடியாது!'' உறுதியாக மறுத்துவிட்டார் சுஜாதா.

''நீ என் தேவையைப் பூர்த்தி செய்ய மறுக்கறே!'' திவ்யநாத் கத்தினார்.

''நீங்க ஒங்க தேவையைப் பூர்த்தி செய்ய என்னையே நம்பிக்கிட்டிருக்கல்லியே!''

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



''நீ என்ன சொல்றே?''

''நான் என்ன சொல்றேன்னு ஒங்களுக்கு நல்லாப் புரியுது...''

திவ்யநாத் எப்போதும் பிற பெண்களுடன் தொடர்பு கொண்டிருந்ததைத்தான் குறிப்பிட்டார் சுஜாதா.

இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு திவ்யநாத்தின் காதல் லீலைகள் அதிகரித்தன. இப்படிச் செய்வதால் சுஜாதா தம் வழிக்கு வந்துவிடுவார் என்று திவ்யநாத் நினைத்திருந்தாலும் அந்த எண்ணம் பலிக்கவில்லை. சுஜாதா அவர் விரித்த வலையில் விழவில்லை.

ப்ரதீக்கு இதெல்லாம் தெரிந்து தானிருந்தது. ஆனாலும் அவனுடன் லூடோ விளையாடும் போது சுஜாதா இதைப்பற்றி எதுவும் சொல்லவில்லை.

தாயின் துன்பத்தை உணர்ந்திருந்ததால் ப்ரதீக்கு அவரிடம் மிகவும் பரிவு இருந்தது. சுஜாதாவுக்கு உடல் நிலை சரியில்லாதிருந்தால் பத்து வயதில் கூட ப்ரதீ விளையாட்டைப் பாதியில் விட்டு விட்டு அம்மாவிடம் ஓடி வந்து, ''அம்மா, ஒன் தலையைக் கொஞ்சம் அமுக்கிவிடவா?'' என்று கேட்பான்.

திவ்யநாத் அவனை ''அம்மாக்கோண்டு! ஆண்மையில்லாதவன்! பெண்பிள்ளையாப் பிறந்திருக்க வேண்டியவன்!'' என்றெல்லாம் இகழ்வார்.

ப்ரதீ தான் எவ்வளவு துணிவுள்ளவன், ஆண்மை மிக்கவன் என்பதை நிரூபித்து விட்டான்....

அன்று ப்ரதீ வெகுநேரம் பேசாமல் அம்மாவையே பார்த்துக் கொண்டிருந்தான். பிறகு ''விளையாடினது போதும்மா. கொஞ்சம் பேசிக்கிட்டிருப்போம்'' என்றான்.

''கொஞ்சம் இரு... இன்னிக்கு என்ன சமையல் பண்ணணும்னு சொல்லிட்டு வரேன்.''

''ஏன், சின்னக்கா இல்லையா?''

www.tamilarangam.net



''இல்லே. டோனியோட எக்சிபிஷன் சம்பந்தமாக ரொம்ப வேலையா இருக்கா.''

''சரிதான்.''

''நாளைக்கு என்ன சாப்பிடறே, சொல்லு!''

''என்ன திடீர்னு?''

''நாளைக்கு ஒன் பொறந்த நாளில்லையா?''

''அடே, என் பொறந்த நாள் ஒனக்கு ஞாபகம் இருக்கா?''

''ஏன், இருக்காதா?''

''எனக்கு இருக்கிறதில்லே...நாளைக்கு நீ நிச்சயம் பாயசம் பண்ணுவே இல்லே?''

''ஆமா...''

''சரி, என்ன சாப்பிடலாம்னு யோசிச்சுப் பார்க்கறேன்...''

''ஆனா மட்டன் மட்டும் கேக்காதே.''

''ஏன், பாஸ் வீட்டிலே சாப்பிடப்போறாரா?''

''ஆமா.''

''சரி, ஏதோ பண்ணு.''

சுஜாதா கீழே இறங்கும் போது போன் மணி ஒலித்தது. ப்ரதீ ரிசீவரை எடுத்துப் பேசத் தொடங்கியபோது சுஜாதா இறங்கிப் போய் விட்டார்.

அவர் மேலே வந்தபோது ப்ரதீ நீலச்சட்டையும் பேண்டும் அணிந்து கொண்டு தலைசீவிக் கொண்டிருந்தான்.

''என்ன ஆச்சு?'' சுஜாதா கேட்டார்.

''கொஞ்சம் வெளியே போகவேண்டியிருக்கு... கொஞ்சம் பணம் கொடும்மா!''

www.tamilarangam.net



''எங்கே போறே?''

''ஒரு காரியமாப் போறேன். பணங்கொடு.''

''இந்தா...எப்போ வருவே?''

''வந்து வந்து...கொஞ்சம் இரு....'' ப்ரதீ தன் பேண்ட்பைக்குள் என்னென்ன இருக்கிறதென்று பார்த்தான். ஒரு துண்டுக் காகிதத்தை எடுத்துச் சுக்கு நூறாகக் கிழித்தெறிந்தான்.

''எந்தப் பக்கம் போறே?'' சாதாரணமாகத்தான் கேட்டார் சுஜாதா.

அப்போது ஓர் அசாதாரண நிலைமை நிலவியது கல்கத்தாவில். கிழவர்கள், நாற்பது வயதுக்கு மேற்பட்டவர்கள் எங்கு வேண்டுமானாலும் பயமில்லாமல் நடமாடலாம். ஆனால் நகரத்தின் சில பகுதிகளில் இளைஞர்கள் நடமாடமுடியாத நிலை.

சில நாட்களுக்கு முன் பழைய செய்திப்பத்திரிகைகளை எடுத்துப் பார்த்த சுஜாதாவுக்கு அந்த இரண்டரையாண்டுகளில் நிகழ்ந்த நிகழ்ச்சிகள் அதிர்ச்சியளித்தன.

எல்லாமே தலை கீழாகப் புரண்டிருந்த காலம் அது. அந்தக் காலத்தில் தண்டிக்கப்பட்டவர்களில் ப்ரதீயும் ஒருவன்.

ஆனால் இந்த நிகழ்ச்சிகள் நிகழ்ந்த காலத்தில் அவற்றின் தன்மை தெரியாது அவருக்கு. அப்போதெல்லாம் அந்தச் செய்திகளைப் படிக்கும் போது அவரது உடல் நடுங்கும்.

அந்தக் காலத்தில் வீட்டில் எவருமே செய்திப் பத்திரிகையைப் பிரித்துப் பார்ப்பதில்லை. பிரித்தால் சாவு பற்றிய செய்திகள்தான் - பயங்கரமான சாவு பற்றிய வர்ணனைகள் தான். படித்தால் 'மூடு' தான் கெட்டுப் போகும். ஆகையால் சுஜாதாவையும் ப்ரதீயையும் தவிர

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வேறு யாரும் பத்திரிகை படிப்பதில்லை.

பத்திரிகை படித்துவிட்டு வங்கிக்குப் புறப்படும் போது சுஜாதாவுக்குத் தோன்றும்-கல்கத்தா நகரமே ஒரு பெருந்தவறு என்று, இங்கே மைதானம், மெட்ரோ தியேட்டர், ஆக்டர்லோனி மான்யுமெண்ட், காந்தி சிலை, விக்டோரியா மெமோரியல் எல்லாம்தானிருக்கிறது, ஆனால் இது கல்கத்தா இல்லை. இந்தக் கல்கத்தாவை அவருக்கு அடையாளம் தெரியவில்லை.

பத்திரிகையைப் பிரித்துப் படிக்கும் போது அவருக்குத் தெரிந்தது - அதிகாலையில் அவர் வீட்டில் டெலிபோன் மணி ஒலித்த அன்றும் தங்கச்சந்தையில் தங்கம் விலை உயர்ந்தது, வங்கிகள் மூலம் பல கோடி ரூபாய் கொடுக்கல் வாங்கல் நிகழ்ந்தது, ஒரு இந்திய யானைக்குட்டி பிரதமமந்திரியின் வாழ்த்துக்களைத் தாங்கிக்கொண்டு டம் டம் விமான நிலையத்திலிருந்து டோக்கியோவுக்குப் பறந்து சென்றது, கல்கத்தாவில் உலகத் திரைப்பட விழா நடைபெற்றுக்கொண்டிருந்தது, புரட்சியுணர்வு கொண்ட கல்கத்தா நகரத்து அறிவு ஜீவிகளும் கலைஞர்களும் வியட்நாம் போருக் கெதிராகக் கோஷமெழுப்பி அமெரிக்க தூதரகத்தின் முன்பு ஆர்ப்பாட்டம் செய்தார்கள்.

எல்லாமே இயல்பாக நடைபெற்றன கல்கத்தாவில். அதனால் தான் கல்கத்தா இந்தியாவிலேயே மிகவும் விழிப்புணர்வுள்ள நகரம்.

கல்கத்தா அன்றும் இயல்பாகத்தான் இருந்தது. ப்ரதீ மட்டும் பவானி பூரிலிருந்து தென் ஜாதவ்பூருக்குப் போக முடியாமல் போய்விட்டது. எட்டு இளைஞர்கள் பாராசாத்திலிருந்து பிடிக்கப்பட்டு, நினைவிழந்து, குண்டு பட்டு, பிணமாகாமல் வெளியேற முடியவில்லை. கிழக்குக் கல்கத்தாவின் ஒரு தெருவில் அந்தப் பக்கத்திலேயே பிறந்து வளர்ந்த ஒரு வாலிபனின் சவத்தை ஒரு ரிக்ஷாவில் போட்டுக் கொண்டு சில இளைஞர்கள் பாண்டு வாத்தியத்துடன் நடனமாடியவாறு ஊர்வலம் போனார்கள் துர்க்கா பூஜை

www.tamilarangam.net



ஊர்வலம் போல.

புரட்சியுணர்வு மிக்க கல்கத்தாவாசிகளுக்கு அது இயற்கைக்கு மாறானதாகத் தோன்றவில்லை.

இந்த நிகழ்ச்சிகளுக்குப் பதினைந்துமாதங்களுக்குப் பிறகு கல்கத்தாவின் எழுத்தாளர்கள்-கலைஞர்கள்-அறிவு ஜீவிகள் கிழக்கு வங்காளத்தின் விடுதலைப் போருக்கு ஆதரவாக மேற்கு வங்காளத்தையே உலுக்கிவிட்டனர். அவர்களது சிந்தனை தான் சரியாக இருக்கவேண்டும். சுஜாதா போன்ற தாய்களின் சிந்தனையில் ஏதோ தவறு இருக்க வேண்டும். மேற்கு வங்காளத்து வாலிபர்கள் நகரத்தின் ஒரு பகுதியிலிருந்து வேறொரு பகுதிக்குச் செல்ல முடியாத நிலை பற்றி விழிப்புணர்ச்சியுள்ளவர்கள் கவலைப் படாததால் அந்த நிலை சரிதான் என்பதில் ஐயமில்லை.

மேற்கு வங்காள இளைஞர்களின் உயிருக்கு ஆபத்து என்பது அப்படியொன்றும் முக்கியமான விஷயமல்ல. அது முக்கியமாக இருந்திருந்தால் ஊர்வல நகரமான கல்கத்தாவின் விழிப்புணர்ச்சி மிக்க எழுத்தாளர்கள்-கலைஞர்கள்-அறிவு ஜீவிகள் இது பற்றி ஆர்ப்பாட்டம் செய்திருக்க மாட்டார்களா?

சமூவின் உடம்பில் இருபத்து மூன்று குண்டுக்காயங்கள் இருந்தன, விஜித்தின் உடலில் பதினாறு, லால்ட்டுவின் நாடி நரம்புகளை வெளியே எடுத்து அவற்றிலேயே அவனுடைய உடம்பைக்கட்டியிருந்தார்கள். இதில் அரக்கத்தனம் எதுவுமில்லை!

இருந்திருந்தால், கல்க்த்தாவின் கவிகளும் எழுத்தாளர்களும் கிழக்கு வங்காளத்தில் நிகழ்ந்த அக்கிரமங்களுக் கெதிராகக் கொதித்தெழுந்தாற் போல் மேற்கு வங்கத்தில் நிகழ்ந்த அநியாயங்களையும் எதிர்த்திருப்பார்கள். அவர்கள் அப்படிச் செய்யாததிலிருந்தே அவர்களது நோக்குத்தான் சரி என்று தெரிகிறது. சுஜாதாவின் நோக்கில்தான் ஏதோ கோளாறு இருக்கிறது.

கவிகள் - எழுத்தாளர்கள் - அறிவு ஜீவிகள்-கலைஞர்கள் இவர்கள்தாமே சமூகத்தின் மதிப்புக்குரிய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



குரல்கள், நாட்டின் பிரதிநிதிகள்!

சுஜாதா யார்? வெறும் தாய் தான்!

இதே பிரச்னையை நினைத்து நினைத்துக் குமுறும் ஆயிரக்கணக்கான மகளிர் யார்? அவர்களும் வெறும் தாய்மார்கள் தாம்!

ப்ரதீ நீலச்சட்டையணிந்து கொண்டு தன் வழக்கப்படி தன் தலைமுடியின் இரு பக்கத்தையும் கையால் தடவி நேராக்கிக்கொண்டு புறப்பட்ட போது, சுஜாதா ''எங்கே போறே?'' என்று அவனைக் கேட்டார்.

ப்ரதீ ஒரு வினாடி திடுக்கிட்டு நின்றான். பிறகு சிரித்துக் கொண்டு சொன்னான், ''அலிப்பூருக்குப் போயிக்கிட்டிருக்கேன். ரொம்ப நேரமாயிருச்சுன்னா ரணுவோட வீட்டிலே தங்கிடுவேன். நீ கவலைப்படாதே.''

அப்போதே ப்ரதீக்குத் தன் தோழர்களுக்கு நேர்ந்துள்ள ஆபத்தைப்பற்றித் தெரியும். அவர்களுக்குச் செய்தி சொல்ல அனுப்பப்பட்டவன் சொல்லத் தவறிவிட்டான். ஆகவே சமுவும் தோழர்களும் குடியிருப்புக்குத் திரும்பி வந்திருப்பார்கள்.

செய்தி சொல்லச் சென்றவன் அதைத் தெரிவிக்காத தோடு அவர்களைக் குடியிருப்புவாசிகளிடம் காட்டிக் கொடுத்து விட்டான் என்று அதுவரையில் ப்ரதீக்குத் தெரியாது. ஆகவே அவன் உடனே போய்த் தன் தோழர்களை எச்சரித்து அவர்களை ஒரு பாதுகாப்பான இடத்துக்கு அனுப்பிவிடலாமென்று நினைத்தான். இதைச் செய்ய முடியும் என்ற முழு நம்பிக்கை இல்லாவிட்டாலும் முயற்சி செய்து பார்க்கலாமே!

இந்த நிலையில் அவன் மிகவும் சாதாரணமாக, ''கவலைப்படாதே அம்மா!'' என்று சொன்னதை நம்பிக் கவலையில்லாமல் இருந்து விட்டார் சுஜாதா.

ரணுவின் வீடு பாதுகாப்பானது தான். ரணுவும் ப்ரதீயும் பள்ளித்தோழர்கள். ரணு புரட்சிக்காரன் என்று பெயர்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பெற்றிருந்தான். ஆனால் அவனது புரட்சி வேறு வகையானது. அவன் பள்ளி மாணவனாயிருந்த போதே பாப் இசை கற்றுக்கொண்டு ஒரு பாப் இசைக்குழுவில் சேர்ந்து காபரே நிகழ்ச்சிகளில் பாடுவான். அவனுக்கு சமூகக்கட்டுப்பாடுகளில் நம்பிக்கையில்லை. ஹிப்பிகளுடன் சேர்ந்து போதை மருந்துகள் சாப்பிடுவான். எனினும் அவனோடு தங்கினால் ப்ரதீக்கு ஆபத்து இருக்காது.

''சரி, போயிட்டு வா. வெளியே போறபோது ஹேமைக் கூப்பிட்டு வாசல் கதவைத் தாழ்ப்பாள் போடச் சொல்லு.''

''சரி.''

மாடிப்படிகளில் இறங்கிக் கொண்டிருந்த ப்ரதீ சட்டென்று நின்றான். சுஜாதா அறையிலிருந்து வெளியேவந்து வராந்தாவில் நின்றிருந்தார். அவர் குனிந்து பார்த்த போது ப்ரதீ தன் பக்கம் பார்த்துக்கொண்டிருப்பது தெரிந்தது. தாயை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான் ப்ரதீ.

குழந்தைக்கு ஆபத்து நேர்வதற்கு முன் தாயின் மனம் அதை எப்படியோ உணர்ந்து கொண்டு விடும் என்று சொல்கிறார்களே, அது பொய். அது உண்மையாக இருந்தால் சுஜாதாவுக்கு அந்த நிமிடத்தில் கலக்கம் ஏற்பட்டிருக்க வேண்டும்; ஏன் ஏற்படவில்லை?

எந்தவிதக் கவலையோ கலக்கமோ ஏற்படவில்லை அவருக்கு.

பிற்பாடு சுஜாதாவுக்குத் தெரிந்தது, சுமார் ஒன்றரை வருடங்களாக ப்ரதீக்கும் ரணுவுக்கும் தொடர்பு ஏதும் இல்லையென்று. அவர்களிருவருக்கும் பொதுவான தோழர்கள் யாருமில்லை.

ஆகவே ப்ரதீ அவரிடம் உண்மை சொல்லவில்லை.

உறக்கத்தில் சுஜாதாவின் உடம்பு அமைதிநிலையில் இருக்கும், அறிவு விழித்திருக்கும். எவ்வளவோ தடவைகள் அவர் தம் கனவில் மாடி வராந்தாவில் நின்று

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கொண்டிருக்கிறார், ப்ரதீ கீழேயிருந்து அவரைப் பார்த்துக் கொண்டு இருந்திருக்கிறான். கனவில் அவருக்குத் தெரியும், ப்ரதீ ரணுவின் வீட்டுக்குப் போகமாட்டான், சமூவையும் மற்ற தோழர்களையும் எச்சரிக்க சமூவின் வீட்டுக்குப் போகப் போகிறான் என்று. ஆகையால் அவர் அவனிடம் ஓடிப்போய் அவன் கையைப் பிடித்துக்கொண்டு, ''ப்ரதீ, போகாதே, திரும்பி வந்து விடு!'' என்று சொல்ல விரும்புகிறார்.

ஆனால் சொல்ல இயலவில்லை அவரால். கனவில் அவரது கால்கள் கல்லாக இறுகி நிற்கின்றன; ப்ரதீ அவரைப் பார்த்துக் கொண்டே நின்று கொண்டிருக்கிறான்...அதன் பிறகு அவனது கழுத்தில், வயிற்றில், நீலச்சட்டையில் மூன்று துப்பாக்கிக்குண்டுகளின் கறைகள் தெளிவாகத் தெரிகின்றன. முகத்தின் தோற்றம் மாறிக்கொண்டு வருகிறது, தலையின் பின் பக்கத்திலிருந்து தோள்பட்டை வரை நீளமாகக் கத்தி கிழித்த கோடு தெரிகிறது. அந்தச் சமயத்தில் சுஜாதாவின் கனவு கலைகிறது. உடனே அவரை அதுவரை ஆட் கொண்டிருந்த மாயையும் மறைந்துவிடுகிறது.

அன்று ப்ரதீ போன பிறகு அவருக்கு எந்த விதக் கவலையும் தோன்றவில்லை. அவர் வழக்கம்போல் இரவில் திவ்யநாத்துக்கு மாத்திரை எடுத்துக் கொடுத்தார், சுமன் அழுதபோது அவனை வெளியே கூட்டிக்கொண்டு வந்து சமாதானப்படுத்தினார்; மறுநாள் ப்ரதீயின் பிறந்தநாள் என்பதை ஹேமுக்கு ஞாபகப்படுத்தி, ''நாளைக்குப் பாயசம் பண்ணனும், ஒரு லிட்டர் பால் எக்ஸ்ட்ரா வாங்கு'' என்று சொன்னார்.

எல்லாம் சாதாரண, அன்றாட நிகழ்ச்சிகள்.

சுஜாதாவுக்குத் தெரியுமா-அன்றிரவு பன்னிரண்டு மணிக்கு சமூவின் வீட்டுக்கு முன்னால் அந்தக் குடியிருப்பின் கண்ணியமான மனிதர்களெல்லோரும் கூட்டமாகக் கூடி ''அவங்களை வெளியே அனுப்பு!'' என்று கத்தினார் களென்று?

சுஜாதா முதல் முதலில் சமூவின் வீட்டுக்குச் சென்று

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அந்த வீட்டு அறையில் உட்கார்ந்திருந்த போது அது ஒரு சராசரிக் குடும்பம், குடும்பத்து மனிதர்களும் சாதாரணமானவர்கள் என்று அவருக்குத் தோன்றியது.

அவர் தம் அதிகப் படிப்பு, தெளிவாகச் சிந்திக்கும் திறன், சிந்தனையைத் திறம்பட வெளிப்படுத்தும் லாகவம் இவற்றோடு சிந்திக்கும் விஷயங்களைத்தான் சமூவின் அம்மாவும் தன் அற்பக் கல்வியறிவு, சாதாரண சிந்தனைத்திறன், குறைந்த வெளிப்பாட்டுத் திறமை இவற்றோடு சிந்திக்கிறாள் என்று புரிந்தது அவருக்கு.

சுஜாதாவின் மனதில் எழுந்த எண்ணத்தையே வெளிப்படுத்தி அழுது அரற்றினாள் சமூவின் அம்மா - ''அவனை ஏம்மா அடிச்சுக் கொன்னாங்க? எம்பிள்ளையோட கையையோ காலையோ மட்டும் வெட்டி உசிரோட விட்டிருக்கக் கூடாதா? அவன் உசிரோடே இருக்காங்கற திருப்தியாவது இருந்திருக்குமே எனக்கு! அவனை ஜெயில்லே போட்டிருந்தாலும் பரவாயில்லேம்மா. நா அவனைப் பாக்க முடியாட்டியும் பொளச்சிருக்கானேன்னு ஆறுதலாயிருந்திருப்பேனே!...நா என்ன குத்தம் செஞ்சேன், சொல்லுங்க!''

சமூவின் அக்கா தன் தாயைத் தேற்ற முயற்சித்தாள் - ''அளாதேம்மா! அவன் தான் ஒன் நெஞ்சைக் காலாலே ஒதச்சுட்டுப் போயிட்டானே! நீ அளுகறதாலே திரும்பிவரப்போறானா? எங்களுக்காக மனசைத் தைரியப் படுத்திக்க!''

''நானுந்தான் மனசுக்குச் சொல்றேன், அளுது ஒரு பிரயோசனமும் இல்லேன்னு...அது கேக்கமாட்டேங்குதே!''

''அளுது அளுது உசிரைக் கரைக்கறதாலே என்ன லாபம்?''

''நீங்கல்லாம் சொல்றது சரிதாம்மா. நா அளுகறதுக்குன்னே பொறந்திருக்கேன். என் துக்கத்தைப் ப்ாத்து நரி நாய் கூட அளும். எவ்வளவு வருசம் முன்னாலே

www.tamilarangam.net



கலியாணம் ஆச்சு எனக்கு! கொஞ்சந்தான் படிச்சிருந்தான் ஒன் அப்பன். வீட்டுக்குப் பெரிய புள்ளேங்கறதாலே பொறுப்பு எல்லாம் அவன் தலையிலேதான். கிராமத்திலேயாவது கொஞ்சம் நிலம் நீச்சு இருந்தது. இங்கே அதுவும் இல்லே. பித்தலாட்டம் பண்ணிப் பொளைக்கவும் தெரியாது...''

அவளுடைய கொச்சையான பேச்சை நன்றாகப் புரிந்து கொள்ள முடிந்தது சுஜாதாவால்.

''எம் புருஷன் புள்ளேங்களைப் படிக்கவச்சான். இந்தக் காலத்துலே படிப்பு இல்லாமே ஒண்ணும் நடக்காதேம்மா! சமூவோட படிப்புக்கு அதிகம் செலவு செய்ய நேரல்லே. அவனுக்கு காலர்சிப் பணம் கிடைச்சது. காலேசிலே சேந்தான்...யாரு அவனை இந்த வளியிலே இளுத்துக்கிட்டுப் போனாங்களோ தெரியல்லே. நா எவ்வளவோ தடவை கேட்டிருக்கேன், 'சமூ, எங்கேடா போறே? என்னடா செய்யறே?'ன்னு. 'பயப்படாதேம்மா, நா கெட்ட காரியம் எதுவும் செய்யமாட்டேன்'னு அவன் சொல்லுவான்...அப்போ எனக்குப் புரியல்லே...''

''பெரியம்மா, டீ குடிக்கறீங்களா?'' சமூவின் அக்கா சுஜாதாவைக் கேட்டாள்.

''கொஞ்சங் கொடு.''

''அப்பறம் சமூ காலேசை விட்டுவிட்டு டியூசன் சொல்லிக் கொடுக்க ஆரம்பிச்சான், டைப் கத்துக்கத் தொடங்கினான்... சமூவுக்கு அடுத்த தம்பியை என் அக்கா கூட்டிக்கிட்டுப் போயிட்டா. ஆனா நாங்க ரெண்டு பேர் இருக்கோமே. டியூசன்லே சம்பாதிச்சு இவ்வளவு வயித்தை நெரப்ப முடியுமா சொல்லும்மா!''

சமூவின் அக்கா டீ கொண்டுவந்தாள். இந்த மாதிரி கோப்பையில் சுஜாதா ஒரு போதும் டீ குடித்ததில்லை.

''எல்லாம் என் அதிஸ்டம்! புள்ளெ படிப்பை முடிச்சு ஏதாவது ஒரு வேலை பாத்துக்கிட்டு அப்பா அம்மாவைக் காப்பாத்திக்கிட்டு அக்காளுக்கும் ஒரு கலியாணம் செஞ்சு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வச்சிருக்கக் கூடாது? ...ஹூம், எம் பொண்ணோட வகுட்டிலே சிந்தூரப் பொட்டு விளுமா அம்மா என்னிக் காவது?''

''இப்படியெல்லாம் கவலைப்படாதீங்க. எல்லாம் நல்லபடியா நடக்கும். ஒங்க பொண்ணுக்குக் கலியாணம் நிச்சயம் நடக்கும்!''

சுஜாதா உள்ளார்ந்த முறையில்தான் அப்படிப் பேசினார். ஆனால் சமூவின் அம்மா அதைத் தவறாக எடுத்துக் கொண்டிருக்கலாம். அப்படி எடுத்துக்கொண்டிருந்தாலும் சமூவின் அம்மாவைக் குற்றம் சொல்ல முடியாது. குடும்பத்தைக் காப்பாற்றத்தக்க ஆள் இல்லை, கையில் காசு இல்லை; இந்த நிலையில் பெண்ணின் கலியாணம் நடக்கும் என்று ஆறுதல் சொல்வது வெந்த புண்ணில் வேல் பாய்ச்சியது போல் தானே!

ஆனால் சமூவின் அம்மா எரிச்சல்பட வில்லை. சுஜாதாவில் கையைப் பற்றிக்கொண்டு ''ஒங்க வாக்கு பலிக்கட்டும், அம்மா!'' என்று சொன்னாள்.

பிறகு பழையபடி புலம்பத் தொடங்கினாள், ''அவங்க நாலு பேரும் ஏன் தான் இங்கே வந்தாங்க? வெளியிலேயே இருந்திருக்கக் கூடாதா? இங்கே இருந்தவங்களை எச்சரிக்க ஒங்க புள்ளே ஏன் வந்தான்?...ஒங்களுக்காவது ஆறுதல் சொல்ல இன்னோரு புள்ளே இருக்கான். எனக்கு யரர் இருக்கான், சொல்லுங்க!...சின்ன வயசிலே சமூவுக்கு டைபாயிடு வந்து சாகக் கெடந்தான். அவனை எவ்வளவு கஸ்டப்பட்டு அப்ப காப்பாத்தினேன்! அவன் பொளச்சது இந்த மாதிரி சாகறதுக்கா!''

ப்ரதீ பத்தாம் வகுப்பில் படித்துக் கொண்டிருந்த போது அவனுக்கு மஞ்சள் காமாலை வந்தது. மிகக் குறைவான மசாலா கலந்த உணவு தான் சாப்பிடலாம். அவன் சாப்பிடக்கூடாத பதார்த்தங்களை சுஜாதாவும் சாப்பிடவில்லை. கோழி இறைச்சி தவிர வேறெந்த இறைச்சியும் அவன் சாப்பிடக்கூடாது என்று மருத்துவர்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


சொன்னார். அப்போது இறைச்சியுணவை ஒதுக்கிய சுஜாதா பிறகு அதை ஒரேயடியாக விட்டுவிட்டார்....

''மத்த பசங்களும் பக்கத்திலேயே வசிக்கறவங்களா?'' சுஜாதா சமூவின் அம்மாவைக் கேட்டார்.

''எல்லோரும் அக்கம் பக்கத்திலே வசிக்கறவங்கதான்.... விஜித்தோட அம்மாவை அவளோட அண்ணன் கான்பூருக்குக் கூட்டிக்கிட்டுப் போயிட்டான். பார்த்தாவோட அம்மா இருக்கறதும் இல்லாததும் ஒண்ணு தான். ஏற்கனவே சீக்காளி, இந்த அதிர்ச்சியை எப்படித் தாங்குவா? படுத்த படுக்கையாக் கெடக்கா. ஒரு புள்ளே செத்துப் போயிட்டான், இன்னொருத்தன் ஓடிப்போயிட்டான். அவன் திரும்பிவந்தா அவனைக் கொன்னு போட்டுடுவாங்களாம்...''

''பார்த்தாவுக்கு அந்த ஒரு தம்பி தானா?''

''ஆமாம்மா. பார்த்தாவோட அம்மா படுக்கையைவிட்டு எளுந்திருக்கறதில்லே, குளிக்கறதில்லே, சாப்பிடறதில்லே, 'என் ரெண்டு புள்ளேங்களையும் கொண்டு வந்து கொடு'ன்னு பொலம்பிக்கிட்டிருக்கா. பைத்தியமாயிட்டா அவ....பொம்பளையோட உசிரு ஆமையோட உசிரு மாதிரி, லேசிலே போகாது. அவளுக்கு சாவு வந்தா அதை அதிருஸ்டம்னு சொல்லணும்.''

''இன்னொரு பையன் இருந்தானே!''

''லால்ட்டு வா? அவன் அம்மாவைத் தவிக்கவிட்டுப் போகல்லே. அவ முன்னாலேயே செத்துப் போயிட்டா. லால்ட்டு பொறந்தி மொதலே அதிஸ்டங்கெட்டவன். அவனோட அப்பன் கிள வயசிலே மறு கலியாணம் பண்ணிக்கிட்டான். லால்ட்டு கோவிச்சுக்கிட்டு அக்கா வீட்டுக்குப் போயிட்டான். அவன் மாதிரி தங்கமான பையனை இந்தப்பக்கத்திலே பாக்கமுடியாது. படிப்பிலே கெட்டிக்காரன், கட்டுக்கொலையாத ஓடம்பு, பொதுக்காரியம் எல்லாத்திலேயும் முன்னாலே வந்து

www.tamilarangam.net



நிப்பான்...''

''அவன் வீடு கிட்டே தானா?''

''ரெண்டு தெரு தள்ளி அவன் வீடு...லால்ட்டு -பார்த்தா-விஜித்-சமு எல்லாரும் ஒரே மாதிரி கொணம். அவங்க இருந்தா இந்தப் பிராந்தியத்திலே யாரும் கெடுதல் பண்ணித் தப்பிச்சுக்க முடியாது... லால்ட்டுதான் பாக்கி எல்லாப் பசங்களோட மனசையெல்லாம் மாத்தி இந்த வளியிலே கூட்டிக்கிட்டுப் போனான். கடைசிலே அவனும் செத்துப் போயிட்டான்.''

சவக்கிடங்கில் சில பிணங்களைப் பார்த்திருந்தார் சுஜாதா. மயானத்தில் சிலர் தலையைத் தரையில் மோதிக் கொண்டு அழுவதைப் பார்த்தார். அப்போது அவருக்குத் தோன்றவில்லை - அந்தச் சவங்களுடன், ஓலமிடும் மனிதர்களுடன் அவருக்கு ஓர் உள்ளார்ந்த தொடர்பு உண்டு என்று. மற்ற சவங்களோடு ஒரு சவமாகப் படுத்திருந்த போது மட்டுமின்றி உயிரோடிருக்கும் போதும் ப்ரதீ அவர்களோடு ஒன்றியிருந்தானென்று இப்போது அவருக்குப் புரிந்தது.

ப்ரதீ தனக்காக அமைத்துக்கொண்ட வாழ்க்கையில் இந்த இளைஞர்கள் தான் அவனுக்கு மிகவும் நெருக்கமானவர்கள், அவனுடைய குடும்பத்தார் அல்ல. அவனுடைய பிறப்பு காரணமாக அவனுக்கு ஏற்பட்டிருந்த குடும்ப உறவுகள் வெறும் பெயர்கள் மட்டுமே.

தன் கொள்கைகள், நம்பிக்கைகள், லட்சியங்கள் இவற்றின் அடிப்படையில் தன்னை உருவாக்கிக் கொண்டிருந்தான் ப்ரதீ. அந்த ப்ரதீயை எவ்வளவு தான் நேசித்தாலும், ப்ரதீ தாயை எவ்வளவு தான் நேசித்தாலும், அவனை சுஜாதாவுக்குத் தெரியாது. அவருக்குத் தெரியாத அந்த ப்ரதீ அவனுடைய இந்தத் தோழர்களுக்கு மிகவும் நெருக்கமானவன்.

இந்தத் தோழர்கள் வாழ்வில் மட்டுமின்றி, சாவிலும் ப்ரதீயோடு இணைந்துவிட்டார்கள். ஆகவே இவர்களது சாவுக்காக வருந்தும் இந்த மனிதர்களுடன் ஒன்றிவிட்டார்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சுஜாதா.

ப்ரதீ இறந்தபின் ஓராண்டுவரை - அதாவது சுஜாதா சமூவின் அம்மாவைச் சந்திக்கும் வரையில் - அவர்தம் சோகத்தின் கைதியாகத் தனிமையில் உழன்று கொண்டிருந்தார்.

சமூவின் அம்மாவின் தங்கு தடையற்ற, 'நெஞ்சைப் பிளக்கும் சோகக் குமுறலைக் கேட்டு, அவன் மூலம் ப்ரதீயின் தோழர்களின் வரலாற்றைக் கேட்டு சுஜாதாவுக்குத் தோன்றியது - ப்ரதீ அவரைத் தனியே விட்டுச் செல்லவில்லையென்று. அவன் அவரை இவர்களுடன் ஒரே சோகப்பிணைப்பில் பிணைத்து விட்டிருந்தான்.

ஆனால், மேல்தட்டு வர்க்கத்தைச் சேர்ந்த, பணக்கார சுஜாதா இந்த ஏழை மக்களுடன் எப்படி உறவு கொண்டாட முடியும்? இவர்கள் அவரைத் தங்களில் ஒருவராக ஏற்றுக் கொள்வார்களா?

சமூவின் அம்மா சொன்னாள், ''லால்ட்டு வேலை வேலைன்னு அலைஞ்சு பைத்தியமாயிட்டான். ஆனா வேலை கெடைக்கல்லே. அதிலேருந்து அவன் மனசிலே ஒரு வெறி, ஒரு கோவம்...''

விம்மியழும் சமூவின் அம்மாவின் கையைத் தம் கையால் தடவிக் கொடுத்து அவளுக்கு ஆறுதல் சொல்ல முயன்றார் சுஜாதா.

இந்த ஓராண்டில் சமூவின் குடும்பம் இன்னும் வறுமை நிலைக்குத் தள்ளப்பட்டிருப்பது தெளிவாகத் தெரிந்தது. சமூவின் அம்மா அணிந்திருந்த கிழிசல் துணியைப் பார்த்தால் அடுத்த தடவை சுஜாதா வரும்போது அவரைப் பார்க்க அவளால் வெளியே வர முடியாது என்று தோன்றியது- அந்தத் துணியில் அவ்வளவு கிழிசல்கள், அத்தனை ஒட்டுகள்.

சமூவின் வீட்டுக் கூரையின் ஒரு பகுதி சரிந்திருந்தது. ஒரு தடிக்கம்பால் அதற்கு முட்டுக் கொடுத்திருந்தார்கள். முன்பு அறையிலிருந்த மரபெஞ்சியைக் காணோம். அதற்குப்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பதிலாக நான்கு பக்கங்களிலும் செங்கல்லை அடுக்கிவைத்து அதன் மேல் ஒரு பலகை போடப்பட்டிருந்தது. இப்போதெல்லாம் வராந்தாவில் சமையல் நடப்பதில்லை போலும். அறைக்குள்ளேயே ஒரு மூலையில் ஒரு சிறிய அடுப்பு, ஒரு பானை, சில பாத்திரங்கள் வைக்கப்பட்டிருந்தன.

சமூவின் அம்மாவின் முகத்தில் முன்பைவிட அதிகச் சோர்வு, தளர்ச்சி. சீரழிவுக்குத் தன்னை முற்றிலும் அர்ப்பணித்து விட்ட வெறுமையின் அழுத்தமான கறை, நடைபாதையில் அநாதையாகக் கிடக்கும் பிச்சைக்காரன், சாக்கடையில் அமுங்கிக் கிடக்கும் பூனைக்குட்டி, சிலிர்த்த ரோமங்களுடன் காக்கைக் குஞ்சு இவற்றில் இப்படித்தான் சாவு நிழலிடும்.

சமூவின் தமக்கையின் முகத்திலோ கோபம், வெறுப்பு. இந்த ஓராண்டில் அவள் பல்லைக்கடித்துக் கொண்டு வறுமையோடு போரிட்டுக்கொண்டிருக்கிறாள், அதனால் இப்படி எரிந்து கருகிப் போய்ச் சாம்பலாகிவிட்டாள்.

சுஜாதா அந்த அறையை ஏக்கத்தோடு பார்த்தார். இனி அவர் இங்கே வர நேராது என்று அவரது மனம் சொல்லியது. இனி அவர் இங்கு வந்து உட்கார்ந்து கொண்டு சமூவின் அம்மா சோகத்தில் தனிமைப்பட்டு விடவில்லையென்று அவளுக்கு ஆறுதல் சொல்ல வாய்ப்பு இருக்காது. அடுத்த ஆண்டு ஜனவரி பதினேழாம் தேதி சுஜாதா என்ன செய்யப்போகிறார்? சென்ற ஜனவரி முதல் இந்த ஜனவரி வரை ஓராண்டுக்காலம் தாம் போய் உட்காரத்தக்க ஓர் இடம் இருக்கிறது என்ற நம்பிக்கை, ஆறுதல் இருந்தது அவருக்கு. ஆனால் இன்று சமூவின் அக்கா அவரை மௌனமாகப் புறக்கணித்து விட்டு வெளியேறுகிறாள். இங்கு சுஜாதா வருவது தனக்குப் பிடிக்க வில்லை என்பதைச் சொல்லாமல் சொல்கிறாள்.

ஆகவேதான் சுஜாதா அந்த அறையை, சமூவின்

www.tamilarangam.net



அம்மாவை ஏக்கத்தோடு பார்த்தார். இந்த அறையில் தான் ப்ரதீ தன் வாழ்க்கையின் கடைசிச் சில மணிநேரத்தைக் கழித்திருக்கிறான், சமூவின் விரித்த பாயில் படுத்துக் கொண்டிருக்கிறான். அவனது இறுதிக்காலத்தில் சிறிது நேரத்துக்கு அவனோடிருக்கும் பாக்கியம் கிடைத்திருக்கிறது சமூவின் அம்மாவுக்கு.

சமூவின் அம்மா சொன்னாள், ''நீங்க வருத்தப்படறீங்க, அதனாலே வந்துக்கிட்டிருக்கீங்க...நா கண்ணிருந்தும் குருடு, காலிருந்தும் நொண்டி...ஒரு எடத்துக்கும் போக முடியாது எனக்கு...எம் பொண்ணு சொல்றா, அவளுக்கு யாரும் வேலை கொடுக்க மாட்டாங்களாம். நெசந்தானா அம்மா?''

எது நிசம், எது பொய் என்று சுஜாதாவுக்கு எப்படித் தெரியும்? நம்பிக்கையிழந்து கிளர்ச்சி செய்தவர்கள் இப்போது உயிரோடில்லை. ஆனால் அவர்களுடைய குடும்பங்கள் இருக்கின்றன. கிளர்ச்சிக்காரர்கள் விஷயத்தில் ஓர் எழுதப்படாத, ஆனால் உறுதியான, சட்டம் ஒன்று செயற்பட்டு வந்தது. அவர்களுடைய குடும்பங்கள் விஷயத்திலும் அது மாதிரி ஏதாவது சட்டம் இருந்ததோ?

கிளர்ச்சி மும்முரமாயிருந்த அந்த இரண்டரையாண்டுக் காலத்தில் - பராநகர், காசிப்பூர் பகுதிகள் 'தூய்மை' யாக்கப்படும் வரையில் - கிளர்ச்சிக்காரர்கள் விஷயத்தில் மௌனம் கடைப்பிடிக்கும் கொள்கை எல்லோராலும் கடைப்பிடிக்கப்பட்டு வந்தது. நாட்டு நடவடிக்கைகள், டோக்கியோவுக்கு யானை ஏற்றுமதி, மெட்ரோ தியேட்டரில் திரைப்பட விழா, மைதானத்தில் கலைஞர்- எழுத்தாளர் கூட்டம்- ரவீந்திரசதனில் ரவீந்திரர் பிறந்தநாள் விழா - இவற்றுக்கெல்லாம் பின்னால் ஒரு திட்டமிடப்பட்ட மனப்போக்கு செயற்பட்டது.

கவலைப்படத் தேவையில்லை, ஏனென்றால் முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சியெதுவும் நடக்கவில்லை. ஒரு சில ஆயிரம் இளைஞர்கள் இப்போது இல்லைதான்,

www.tamilarangam.net



ஆனால் இது ஒன்னும் பெரிய விஷயமல்ல. வேறெந்தத் தாய்க்காவது இந்த எண்ணம் தோன்றியதோ இல்லையோ, சுஜாதாவுக்கு அப்போதே தோன்றியது - இப்போதும் தோன்றுகிறது - மேற்கு வங்காளத்தில் மட்டுந்தான் இளைஞர்கள் விரட்டப்படுகிறார்கள், பயமுறுத்தப்படுகிறார்கள், கொல்லப்படுகிறார்கள் என்று.

ஆனால் மிகவும் முக்கியமான நிகழ்ச்சிகள் திரைமறைவில் நேர்ந்து கொண்டுதானிருந்தன. அவற்றை நிகழ்த்தியவர்களின் மனவேதனை, நம்பிக்கை, சாவின் முன்னிலையிலும் உறுதி இவற்றையெல்லாம் அன்று நாடும் அரசாங்கமும் மறுத்தன.

இவ்வாறு மறுத்தவர்கள் நாடெங்கும் அமைதியாக, இயல்பாக இருப்பதாகச் செய்யப்பட்ட பாசாங்கை இயல்பாகவே ஏற்றுக் கொண்டார்களே என்பது தான் சுஜாதாவுக்கு இப்போது மிகவும் பயமளிக்கும் விஷயம். இந்தப் போலியான இயல்புத்தன்மை எவ்வளவு பயங்கரமானது, விலங்குத்தன்மை கொண்டது, வன்முறை நிறைந்தது என்பதை உள்ளூற உணர்ந்திருந்தார் சுஜாதா. ப்ரதீ போன்றவர்கள் சிறையில் மடிந்தார்கள், தெருவில் சுடப்பட்டுக் கொல்லப்பட்டார்கள், கருப்புப் போலீஸ் வண்டியால் துரத்தப்பட்டார்கள், வெறிபிடித்த மக்களால் அடித்துக் கொல்லப்பட்டார்கள். ஆனால் சமூகத்தின் மனச்சாட்சிக்குக் காவலர்களாகத் தங்களை அழைத்துக் கொண்ட எவரும் இந்த நிகழ்ச்சிகளைப் பற்றி வாய் திறக்கவில்லை. எல்லாரும் மௌனம் சாதித்தார்கள்.

அவர்களது இந்த இயல்புக்கு மாறான நடத்தை சுஜாதாவுக்குப் பயங்கரமாகத் தோன்றியது. அவர்கள் தங்களை விவேகிகளாக, அனுதாபம் மிக்கவர்களாக நினைத்துக் கொள்வதைப் பார்க்க அவருக்குப் பயம் ஏற்பட்டது. அவர்கள் மிகவும் தொலை நோக்குக் கொண்டவர்களாயிருந்தார்கள். ஆனால் அருகில் அவர்களுடைய பார்வைக்கெதிரில் நடக்கும் நிகழ்ச்சிகளை அவர்களால் தெளிவாகப் பார்க்க இயலவில்லை.

www.tamilarangam.net



ஒரு சில ஆயிரம் இளைஞர்களை முற்றிலும் புறக்கணித்து விடு! புறக்கணித்தால் அவர்கள் மாயமாக மறைந்துவிடுவார்கள். சிறைகளில் இடம் இல்லையா? ஆயிரம் ஆயிரம் வாலிபர்களைப் பற்றித் தகவல் இல்லையா? அவர்களைப் புறக்கணி! அந்தப் புறக்கணிப்பிலேயே அவர்கள் அழிந்துவிடுவார்கள்!

சரி, ஆனால் அவர்களுடைய குடும்பங்கள் என்னாவது? அவற்றையும் புறக்கணித்தே அழித்து விடுவது என்ற கொள்கை அமுலுக்கு வந்திருக்கிறதா? சமூவின் அம்மாவுக்கு என்ன பதில் சொல்வதென்று புரியவில்லை சுஜாதாவுக்கு. அவர் சொன்னார், ''எனக்குத் தெரியாதே!...இதோ பாருங்க, நான் வேலை பார்க்கறேனே!''

''நீங்க எங்கே, எம் பொண்ணு எங்கேம்மா! நீங்க பெரிய மனுசங்க... பாருங்களேன், செத்துப் போனவங்களோட பேரெல்லாம் பேப்பர்லே வந்தது, ஒங்க புள்ளயோட பேரு வரல்லியே!...எங்களுக்குத் தெரிஞ்சவங்க யாருமில்லே, பணங்காசுமில்லே...''

தமக்கும் சமூவின் அம்மாவுக்குமிடையேயிருந்த வேற்றுமை அவளுடைய மனதில் தோன்றத்தான் செய்யும் என்று சுஜாதாவுக்குத் தெரியும். ஒரு பெரிய சோகம், கொடிய அதிர்ச்சி அவர்களிருவரையும் காண்ட்டாபுகூரிலும் மயானத்திலும் ஒன்றாக்கியது உண்மை தான். ஆனால் இந்த ஒற்றுமை நீண்டகாலம் நிலைக்கத்தக்கதல்ல. காலம் சோகத்தைவிட வலிமை வாய்ந்தது. சோகத்தை ஓர் ஆற்றின் கரைக்கு ஒப்பிட்டால் காலம் என்பது வற்றாத ஆறு. காலம் சோகத்தின் மேல் மண்ணைப் பரப்பிப் பரப்பி அதை மூடிமறைத்துவிடும்.

அதன் பிறகு இயற்கையின் வலிமை மிக்க விதிப்படி, சோகத்தைப் புதைத்த மண்ணுக்குள்ளிருந்து சிறு சிறு முளைகள் வெளிப்படும்- நம்பிக்கை, துக்கம், சிந்தனை, வெறுப்பின் முளைகள்.

அந்த முளை மேலே மேலே வளர்ந்து

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வானத்தைப்பிடிக்கும்.

காலத்தின் வலிமை அளவற்றது. அதைப் பற்றி நினைத்தால் சுஜாதாவுக்குப் பயம் ஏற்படும்- ஒருநாள் ப்ரதீயின் முகங்கூட அவரது உணர்வில் கொஞ்சங் கொஞ்சமாக மங்கிப் போய்பழைய போட்டோ போல் உருவழிந்து போய்விடுமோ என்று. பிற்காலத்தில் அவர் ஒரு நாள் ப்ரதீயைப் பற்றி சாதாரணமாகப் பேசலாம், எப்போதாவது சற்று அழலாம்.

காலத்தால் எதுவும் செய்ய முடியும். இரண்டாண்டுகளுக்கு முன் துக்கம் சுஜாதாவையும் சமூவின் அம்மாவையும் ஒன்றாக்கிவிட்டது. அப்படி அவர்களை ஒன்றாக்கிய காரணி காலப் போக்கில் அழிந்து போய் விட்டது. காலங்கழிந்த காரணத்தால் இப்போது சமூவின் அம்மாவுக்கு சுஜாதா வேறு வர்க்கத்தைச் சேர்ந்தவராகத் தோன்றத் தொடங்கிவிட்டார்.

''ஒங்க பொண்ணு என்ன படிச்சிருக்கா?'' சுஜாதா கேட்டார்.

''பி.ஏ. படிச்சிக்கிட்டிருந்தா. பஸ்ட் பார்ட்டு பாஸ் பண்ணிட்டா. செகண் பார்ட்டு எழுத முடியல்லே. அதுக்குள்ளே இதெல்லாம் நடந்து போயிருச்சு...டைப் கத்துக்கறா. ஆனா அதுக்குக் கூட ஒழுங்காப் போறதில்லே. உடுத்திக்கிட்டு வெளியே போறதுக்கு லாயக்காப் பொடவை இல்லே, ரவிக்கை இல்லே, காலுக்குச் செருப்பு இல்லே, டைப்புகிளாசுக்கு எப்படிப் போறதுங்கறா....ஒனக்காக என் வாழ்க்கை பாழாயிடுச்சுன்னு கத்தறா...ஆனா இது கோவத்துலே பேசற வார்த்தை தாம்மா.... உண்மையிலே இவ கடமை தெரிஞ்ச பொண்ணுதான்.''

''சமூவோட அக்காங்கறதுக்காக அவளுக்கு வேலை கிடைக்கிறது கஷ்டமாயிருக்கும்னு எனக்குத் தோணல்லே. நான் முயற்சிபண்ணிப்பார்க்கறேன். ஏதாவது வாய்ப்பு வந்தா சொல்றேன்.''

''அப்படியா சொல்றீங்க? இவளுக்கு ஒரு நல்ல ட்யூசன் கெடைச்சிருந்தது. மாசம் நாப்பது ரூவா

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கொடுத்தாங்க. ஆனா ஒரு நா அந்தப் பையனோட அப்பா இவகிட்டே 'ஒன் தம்பி அந்தக் கிளர்ச்சியிலே சேர்ந்தவனாமே? நா ஒன்னை வேலைக்கு வச்சுக்க முடியாது'ன்னு சொல்லிட்டாரே அம்மா!''

''ஆனா எல்லாரும் ஒரே மாதிரி இருக்க மாட்டாங்களே!''

''என்னவோ பாருங்க, அம்மா! ஒரு நல்ல காரியம் செஞ்சுட்டா. சின்னப்பசங்க ரெண்டு பேரையும் ஒரு சர்க்கார் விடுதியிலே சேர்த்துட்டா அப்பா இல்லாத அநாதைன்னு....''

''நல்ல காரியந்தான்.''

''இவ என்ன சொல்லறா தெரியுமாம்மா?...ப்ரதீயோட அம்மா இங்கே ஏன் வந்துக்கிட்டிருக்காங்கன்னு பல பேர் கேக்கறாங்களாம். பசங்களைக் கொன்னு போட்டவங்களிலே ஒருத்தன் இவளைக் கூப்பிட்டு மெரட்டினானாம்- 'ப்ரதீயோட அம்மாவுக்கும் ஒன்னோட அம்மாவுக்கும் என்ன ஒறவு? எலிவளைக்குள்ளே யானை ஏன் கால் வைக்குது?' அப்படீன்னு. அதிலேருந்து பயந்துகிட்டு இருக்கா இவ... இவ ராத்திரிலே ரொம்ப நேரங்களிச்சு வீட்டுக்கு வரா, டியுசன் சொல்லிக்குடுத்துட்டு. சாமான், காய்கறி வாங்க வெளியே போறா...என்ன ஆகுமோ இவளுக்கு! அந்தப் பாவிங்க எதுக்கும் துணிஞ்சவங்க!இப்போ இந்தக் குடியிருப்பிலே எல்லாரும் அவங்க கட்சி. அவங்க செஞ்ச காரியத்துக்குத் தண்டனை எதுவும் கிடைக்கல்லே. அவங்க நெஞ்சை நிமிர்த்திக்கிட்டு நடமாடறாங்க. 'ஒன் தம்பிக்கு தெவசம் பண்ணல்லியா? பண்ணினா நாங்க வந்து விருந்துச் சாப்பாடு சாப்பிட்டுப் போவோமே!'ன்னு எம் பொண்ணை நையாண்டி செய்யறாங்க... அவங்க பிசாசுகள்! தெருக்கோடியிலே டீக்கடையிலே ஒக்காந்துக்கிட்டு அரட்டையடிப்பாங்க.''

சுஜாதா அந்தக் குடியிருப்பை நெருங்கியதும் டாக்சியிலிருந்து இறங்கி ஒரு சைக்கிள் ரிக்ஷாவில்

www.tamilarangam.net



குடியிருப்புக்குள் வருவார். வரும்போது வலப் பக்கம் இடப் பக்கம் பார்ப்பதில்லை. டீக்கடையில் உட்கார்ந்திருப்பவர்களில் ப்ரதீயைத் தாக்கிக் கொன்றவர்களும் இருக்கிறார்களா? அவர்கள் பயமில்லாமல் நடமாடுகிறார்கள், சமூவின் அக்காவைக் கேலி செய்கிறார்கள்! இது உண்மையில் ஒரு நகரந்தானா? இங்கு இந்த மாதிரி நிகழ்ச்சிகளும் நடக்கின்றன, பண்பாட்டு விழாக்களும் ரவீந்திரஜயந்தியும் நடக்கின்றன- என்ன ஆச்சரியம்!

கொடியையும் குழுவையும் மாற்றிக் கொண்டுவிட்டால் கொலையாளிகளும் தண்டனையிலிருந்து பாதுகாப்பு பெற்றுவிடுகிறார்கள். மறுபக்கத்தில் சிறையின் சுவர்கள் மேலும் மேலும் உயர்த்தப்படுகின்றன, ஒவ்வொரு சுவர் மேலும் காவல் கோபுரம் கட்டப்படுகிறது. இவையெல்லாம் ஒருங்கே நிகழ்கின்றன. இன்னும் எவ்வளவு நாள் இப்படி?

''என் நெஞ்சோட எலும்பு கயண்டு விளுந்துடுச்சு அப்பா! என் நெஞ்சிலே எரியற நெருப்பு பாடையிலே தான் அணையும்!'' என்று சொன்னாள் சமூவின் அம்மா.

சமூவின் அம்மாவைப்போல் தாமும் வாய்விட்டு அழுது அரற்றினால் கொஞ்சம் ஆறுதல் கிடைக்கும் என்று அவளிடம் சொல்லத் தோன்றியது சுஜாதாவுக்கு. ஆனால் அவர் ப்ரதீக்காகத் தம் நெஞ்சைக் கல்லாக்கிக் கொண்டிருக்கிறார், அவரால் அழக்கூட முடியவில்லை என்று சொன்னால் சமூவின் அம்மா அதை இயற்கைக்கு விரோதமாக அல்லவா நினைப்பாள்! ப்ரதீயின் மரணம் பற்றிய செய்தி கேட்டதும் அதை அமுக்கிவைக்க முயன்றவர்களின் முன்னால் அவரால் அழ இயலவில்லை; அவரது தொண்டை அடைத்துக் கொண்டது.

அந்த நாள்.....ஒரு கெட்ட கனவு மாதிரி....

இரவு பன்னிரண்டு மணி கூட ஆகவில்லை. அவர்கள் சமூவின் வீட்டைச் சூழ்ந்து கொண்டுவிட்டார்கள். நேரமாக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஆகக் கூட்டம் வலுப்பதைக் கண்டு அழத்தொடங்கிய சமூவின் அம்மா கையால் வாயைப் பொத்திக் கொண்டாள்.

''என்ன பண்ணறது இப்போ?... பின்பக்கம் வளியா ஓடிப்போகலாமான்னு பாக்கறேன்'' என்று பரிதாபமாகச் சொன்னார் சமூவின் அப்பா.

''பிரயோசனமில்லே அப்பா'' என்றான் சமூ. ''அவங்க அந்தப் பக்கமும் நின்னுக்கிட்டிருக்காங்க....''

''அவங்களை வெளியே வெரட்டு!'' தணிந்த குரலில் மிரட்டல் கேட்டது.

''பாபுவோட கொரல் மாதிரி இருக்கே!'' சமூவின் அப்பா சொன்னார்.

''வெளியே வெரட்டு அவங்களை!''

''வெளியே வரல்லேன்னா வீட்டுக்கு நெருப்பு வச்சிடுவோம்!...சமூ, வெளியே வாடா!''

''ஒன் அப்பனுக்குப் பொறந்திருந்தா வெளியே வா!''

சமூ தோழர்களிடம் சொன்னான், ''நா மொதல்லே வெளியே போனா அவங்க என்னைப் பிடிச்சுக்குவாங்க. அந்தச் சந்தடியிலே ஒங்களிலே ஒருத்தனாவது தப்பியோட முடியாதா?''

''வாங்கடா வெளியே!''

''பிரயோசனமில்லே, சமூ!'' ப்ரதீ சொன்னான். ''நீ மட்டும் ஏன் தனியாப் போகணும்? எல்லோருமா வெளியே போவோம்!''

கெட்ட கனவு....

படுத்திருந்த ப்ரதீ எழுந்து நின்று ஜன்னல் வழியே கத்தினான், ''திட்டாதீங்க....நாங்க வெளியிலே வரோம்.....''

''சமூ....போகாதேடா!.....''

www.tamilarangam.net



''அளாதேம்மா....அப்பா, நீ அம்மாவைப் பாத்துக்க. நாங்க வெளியே போறோம், இல்லாட்டி வீட்டுக்கு நெருப்பு வச்சுடுவாங்க....''

விஜித் பைஜாமாவைக் கெட்டியாகக் கட்டிக்கொண்டான், கையால் தலை முடியைக் கோதிக் கொண்டான்.

பார்த்தா எப்போதும் அதிகம் பேசுபவனல்ல. அவன் இப்போது சொன்னான், ''விஜித், கிளம்பு.''

பார்த்தா, விஜித் இருவரிடமும் கத்தி இருந்தது. சமூவும் ப்ரதீயும் ஆயுதமெதுவும் வைத்திருக்கவில்லை.

நால்வரும் கை கோர்த்துக் கொண்டு கோஷங்களை முழங்கியவாறே கதவைத் திறந்தார்கள்.

''ஒனக்கு முன்னாலே நா செத்துப்போறேன்'' என்று சொல்லிக்கொண்டே முன்னாலே வந்த சமூவின் அப்பாவை சமூ பிடித்துப் பின்னே தள்ளினான்.

பின்னர் நால்வரும் கோஷங்களை எழுப்பிக்கொண்டே வெளியே வந்த போது நல்ல இருட்டு. அந்த இருட்டில் சில முகங்கள் தெளிவின்றித் தெரிந்தன. அந்த முகங்களில் அட்டகாசச் சிரிப்பு, பக்கத்து வீடுகளில் விளக்குகள் அணைந்தன, ஜன்னல் கதவுகள் மூடப்பட்டன, ஜன்னல் வழியே வெளியே பார்த்துக் கொண்டிருந்தவர்கள் தலையை உள்ளே இழுத்துக் கொண்டனர். கூட்டத்தில் சிலர் வாயால் விசில் ஒலி எழுப்பினார்கள். விஜித் கோஷம் எழுப்பிக் கொண்டே கையில் உயர்த்திய கத்தியுடன் ஓடி வந்தான். ''ஐயோ, குத்தறானே!'' என்று யாரோ கத்தினார்கள்.

''டேய் குத்திறியா!....கொல்லு தடியங்களை!''

இப்போது மூன்று குரல்களில் கோஷம். இதற்கு முன்னாலேயே விஜித்தின் கழுத்தில் சுருக்கு விழுந்து விட்டது...

''.....ஜிந்தாபாத்!.....வாழ்க!.....ஜிந்தாபாத்!''

www.tamilarangam.net



ஒரே அமளி.

கோஷங்கள் ஓய்ந்துவிட்டன திடீரென்று. கொலைகாரர்கள் ஓடினார்கள்.... டும், டும்! துப்பாக்கிக் குண்டுகளின் ஒலி....காற்றில் வெடி மருந்தின் நெடி...

''ஐயா சமூ!'' என்று ஓலமிட்டுக்கொண்டே கீழே விழுந்தார் சமூவின் அப்பா.

சமூவின் அம்மாவுக்கு எதுவுமே தெரியாது. அவள் மயங்கி விழுந்துவிட்டாள். இருட்டு, இருட்டு, இருட்டு....

சுஜாதாவால் அழ இயலாது என்பது சமூவின் அம்மாவுக்கு எப்படித் தெரியும்? அவருடைய வீட்டில் ப்ரதீயின் பெயரே உச்சரிக்கப்படுவதில்லை என்ற விஷயம் எப்படிப்புரியும்? ப்ரதீயின் பெயர் செய்திப்பத்திரிகைகளில் வராமலிருப்பதற்காக அவனுடைய தந்தையும் அண்ணனும் எவ்வளவு பாடுபட்டார்கள் என்பது தான் தெரியுமா?

சமூவின் அப்பா தம்மை எப்படியாவது காத்துக் கொள்ள வேண்டும், பிள்ளைக்கு ஆபத்து வந்தாலும் சரி என்று நினைக்கவில்லை. ஒரு தகப்பன் அப்படி நினைக்கலாம் என்பது கூட அவருக்குத் தோன்றாது. அதிகப்படிப்பில்லாத, நிறைய முதல் இல்லாமல் சிறிய பெட்டிக்கடை வைத்திருக்கும் சமூவின் அப்பா போன்றவர்களுக்குத் தான் பிள்ளையைக்காப்பாற்ற தங்களையே தியாகம் செய்யத் துணிவிருக்கும். சமூவின் அப்பாவும் திவ்யநாத்தும் ஒரே ஊரில் வெவ்வேறு துருவங்களில் வசிப்பவர்கள்.

போலீசில் புகார் செய்தால் தம் பிள்ளையையும் மற்றவர்களையும் காப்பாற்றிவிடலாம் என்று நினைத்தார் சமூவின் அப்பா. அவர் மூச்சிறைக்க ஸ்டேஷனுக்கு ஓடினார்.

அந்தக்காலத்தில் போலீஸ் ஸ்டேஷன்களில் இரவில் கூட நிறைய விளக்குகள் எரிந்து கொண்டிருக்கும்.

''சீக்கிரம் வாங்க சார்! அடிபட்டவங்களை ஆசுபத்திரிக்குத் தூக்கிக்கிட்டுப் போனாப் பொளச்சுக்குவாங்க சார்! ஒங்க காலைத் தொட்டுக் கும்பிடறேன் சார்!''

www.tamilarangam.net



ஆனால் போலீஸ் இன்ஸ்பெக்டர் வயதில் முதிர்ந்தவரல்ல எனினும் அனுபவத்தில் முதிர்ந்தவர். சமூவின் அப்பா தாக்கியவர்களின் பெயர்களைச் சொன்ன போது அவர் அதிர்ச்சியடைந்தார். சமூவின் அப்பா ஏழை, செல்வாக்கற்றவர், மண்புழு மாதிரி. அவர் போன்றவர்களை யாரும் மிதித்துக் கொண்டு போகலாம்.....

''நா அவங்களைக்கண்ணாலே பார்த்தேன். அவங்க கொரலை அடையாளங் கண்டுக்கிட்டேன்...வாங்க சார்!''

''இல்லே, நீங்க ஒண்ணும் கேக்கல்லே....சரி சரி, வண்டி பின்னாலே வரும் போங்க!''

ஸ்டேஷனில் சமூவின் அப்பாவுக்கு அறிமுகமான ஒருவரைப் பார்த்து அவரது காலில் விழுந்து கெஞ்சினார்.

சிறிது நேரத்தில் ஒரு வண்டி வந்தது. சமூவின் அப்பா அதில் ஏறிக்கொண்டார். வண்டி குடியிருப்பை நெருங்கியதும் அவர் பைத்தியம் போல் கத்தினார், ''சமூ, எங்கே இருக்கே? கொரல் கொடு! சமூ!....''

என்ன ஆச்சரியம்! வண்டி குடியிருப்புக்குள் நுழையவில்லை, சற்றுத் திரும்பி ஒரு கால் பந்து மைதானத்தில் நின்றது. அதன் பிரகாசமான ஒளி குடியிருப்பின் மேலே விழுந்த போது அங்கே கூடியிருந்தவர்கள் சிதறியோடி மறைந்துவிட்டார்கள். அவர்கள் அப்படி ஓடிப்போகப் போதிய அவகாசம் தந்துவிட்டு வண்டி மெதுவாகக் குடியிருப்புக்குள் நுழைந்தது. அதன் ஒளி முதலில் விஜித்தின்மேல் விழுந்தது, பிறகு மற்றவர்கள் மேல். ''சமூ!'' என்று கத்திக்கொண்டே கீழே விழுந்தார் சமூவின் அப்பா. அவர் மறுபடி தலைநிமிர்ந்த போது போலீசார் சமூவின் உடலைத் தூக்கி வண்டிக்குள் போட்டுக் கொண்டிருந்தார்கள். சமூவின் தலை எதிலோ இடித்தது. ''ஐயோ, தலை இடிக்குது!....பார்த்து, பார்த்து!......'' என்று கத்திக் கொண்டே நினைவிழந்தார் சமூவின் அப்பா.

அப்போது மணி மூன்றே கால். அன்று போல் இவ்வளவு விரைவாகப் போலீஸ் வண்டி வந்ததில்லை ஒரு நாளும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



எல்லாம் முடிந்த பிறகு சமூவின் அப்பா மறுபடி போலீஸ் ஸ்டேஷனுக்குப் போனார். தம் புகாரை அங்கு பதிவு செய்யவேயில்லை என்று தெரிந்து கொண்டார். இது பற்றிப் புகார் செய்யத் தலைமைப் போலீஸ் அலுவலகத்துக்குப் போனார். பலன் இல்லை. ''அட கடவுளே! இந்த நாட்டிலே நீதி, நியாயம் ஒண்ணும் இல்லியா!'' என்று கத்திக்கொண்டு அவர் தரையில் தலையை மோதிக் கொண்டார். அவருடைய மைத்துனனின் பிள்ளை அவரை வீட்டுக்குக் கூட்டிக்கொண்டு போனான்.

சுஜாதா ப்ரதீயைப் பற்றிச் சொன்னால் சமூவின் அம்மா அதைப் புரிந்து கொள்வாளா?

ப்ரதீ ஒருவன் தான் சுஜாதாவின் மடியில் தலையை வைத்துக்கொண்டு படுப்பான். அவருடைய தோளில் கையை வைத்து ''அம்மா, என் முதுகிலே கொஞ்சம் சோப்பு தேய்ச்சு விடு'' என்பான். ''இன்னிக்கு மறுபடி ஹோம் எனக்கு ஆறிப்போன டீயைக் கொடுத்திருக்கா....இன்னிக்கு நீ வங்கியிலேருந்து வந்தப்பறம் நாம ரெண்டு பேரும் சினிமாவுக்குப் போவோமா?..... இந்த நோட்சை இரவல் வாங்கிட்டு வந்திருக்கேன், இன்னிக்கே திருப்பிக் கொடுக்கணும், இதைக் கொஞ்சம் காப்பி பண்ணித் தா'' என்றெல்லாம் ப்ரதீ சொல்லுவான் என்று சுஜாதா சமூவின் அம்மாவிடம் சொன்னால், 'இதெல்லாம் எல்லாப் பிள்ளைகளும் அம்மா கிட்டே சொல்றது தானே, இதிலே தனியாக் குறிப்பிடும்படியா என்ன இருக்கு' என்று தானே அவள் நினைப்பாள்!

தாம் வேர்கள் அறுபட்ட, மண்ணோடு தொடர்பற்ற வாழ்க்கை நடத்தும் ஒரு சமூகச் சூழ்நிலையில் வாழ்வதாக சுஜாதா சொல்லலாம். அந்தச் சமூகத்தில் நிர்வாணமாக உடம்பைக் காட்டுவதில் வெட்கப்படத் தேவையில்லை. இயல்பாக உணர்ச்சிகளை வெளிப்படுத்துவதே வெட்கத்துக்குரியது; அந்த சமூகத்தில் அம்மா- பிள்ளை, அப்பா- பிள்ளை, கணவன்- மனைவி உறவுகள் கசந்து போனால் அவர்கள் ஒருவரை யொருவர் தாக்கிக்கொள்ள

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மாட்டார்கள், வாய் திறந்து அழமாட்டார்கள், பரஸ்பரம் நாசூக்காக, 'கண்ணியமாக' நடந்து கொள்வார்கள் என்று சுஜாதா சொன்னால் அவர் பேசுவது வங்காளியில் தானென்றாலும் அதை சமூவின் அம்மாவால் புரிந்து கொள்ள முடியுமா?

தம் பிள்ளை ப்ரதீயைப் புரிந்து கொள்வதற்காகத்தான் தாம் அங்கு வருவதாக சுஜாதா சொன்னால் அதுவும் புரியாது சமூவின் அம்மாவுக்கு.

ஒரு சில புத்தகங்களைப் படித்தோ ஒரு சில கோஷங்களைக் கேட்டோ ப்ரதீ மாறிவிடவில்லை. ஏழைப்பெற்றோர்களின் பிள்ளை சமூ, அதிருஷ்டங்கெட்ட, அவமானத்துக்குள்ளான லால்ட்டு, இன்னும் இவர்கள் போன்ற பிற மனிதர்களின் துன்பத்தை அவன் உணர்வு பூர்வமாகப் புரிந்து கொண்ட பின்தான் மாறத் தொடங்கினான். வாழ்க்கை அவனை மாறச் செய்தது. ஆகையால் தான் அவன் தனக்காகத் திட்டமிடப்பட்டிருந்த வாழ்க்கையைத் தியாகம் செய்தான். அந்த வாழ்க்கையில் அவன் உள்ளூர்ப்படிப்பை முடித்துவிட்டு மேற் படிப்புக்கு வெளிநாடு போயிருக்கலாம், திரும்பிவந்து பெரிய வேலை பார்த்திருக்கலாம், அதிக முயற்சியின்றி சமூகத்தில் உயர்ந்த நிலையை அடைந்திருக்கலாம்.

இதெல்லாம் சமூவின் அம்மாவுக்குப் புரியாதே?

சமூவின் அம்மா சொன்னாள், ''ஒங்க புள்ளையோட மொகம் இப்பக் கூட என் கண்ணுக்கு முன்னாலே தெரியுதும்மா....பசங்க எல்லாரும் கெட்டவங்க இல்லே, அவங்களுக்கு ஒரு வெறி....சமூ சின்ன வயசிலேருந்தே சொல்லுவான், 'நமக்கு வாழ உரிமையில்லியா? நாம ஏன் இப்படிப் பிச்சைக்காரங்களா அலையணும்...'' ஆனா ஒங்க பையனுக்கு ஒரு கஸ்டமும் இல்லியேம்மா, அவன் ஏம்மா இப்படி வந்து செத்துப் போனான்?......அவன் எந்த வளியிலே போயிக்கிட்டிருக்கான்னு ஒங்களுக்குத் தெரியாதா? நீங்க ஏன் அவனை எச்சரிக்கல்லே?''

www.tamilarangam.net



தான் தன் தாய்மையில் வெற்றிபெற்றவள் என்று சமூவின் அம்மாவுக்குத் தெரியாது. சமூ என்ன செய்கிறான், எந்த வழியில் நடக்கிறான் என்று அவளுக்குத் தெரிந்திருந்தது. ஆனால் சுஜாதாவுக்கு- நிமிர்ந்த தலை, கண்ணியத்தோற்றம், மணிக்கட்டில் கடிகாரம், உயர்ந்த தரக் கைத்தறிப் புடைவை எல்லாம் இருந்தும் - அவர் ஆயிரக் கணக்கான தாய்மார்களுக்கு முன்னால் தோல்வியுற்றவர், காரணம் தம் பிள்ளை என்ன செய்து கொண்டிருக்கிறான் என்பது அவருக்குத் தெரியவில்லை.

என்ன நேர்ந்தாலும் சுஜாதா பொய் பேசமாட்டார். இது ப்ரதீக்குத் தெரியும்.

''ப்ரதீ என்ன செய்யறான்னு எனக்குத் தெரியாது!'' சுஜாதா சொல்லிவிட்டு எழுந்தார்.

''மறுபடி வாங்க...ஒங்களோடே பேசிக்கிட்டிருந்தா மனசுக்கு ஆறுதலாயிருக்கு.''

தாம் இனி மறுபடி அங்கு வரமாட்டோம் என்று சுஜாதாவுக்குத் தெரியும்.

''நான் வரேன்'' என்று சொல்லியவாறு சுஜாதா சமூவின் அம்மாவின் தோளைத் தொட்டார், ''ஒங்ககிட்டே நான் ரொம்பக் கடமைப்பட்டிருக்கேன்.''

''அப்படியெல்லாம் சொல்லாதீங்க! ஒங்களுக்கும் துக்கம்; எனக்கும் துக்கம். ஒருத்தர் மத்தவரோட வேதனையைப் புரிஞ்சுக்கறோம்.''

இறுதியாக விடைபெறும் சமயத்தில் மதிப்புமிக்க ஏதாவதொன்றை சமூவின் அம்மாவுக்குக் கொடுத்துச் செல்லவிரும்பினார் சுஜாதா. அவர் தாமே தமக்காக அமைத்துக்கொண்ட சிறையிலிருந்து ஏதோ கொஞ்சம் எடுத்துக் கொடுக்க வேண்டும். ஆகவே அவர் இதுவரை சொல்லியிராத ஒரு செய்தியை இப்போது சொன்னார். ''ப்ரதீ செத்துப் போனானே அன்னிக்கு மறுநாள் அவனோட பொறந்த நாள். அந்தப் பதினேழாந்தேதி அவனுக்கு இருபது வயசு முடிஞ்சு இருபத்தொண்ணு தொடங்கியிருக்கும்....''

www.tamilarangam.net

# மாலை

அந்த வீடு சுஜாதாவின் வீட்டுக்கு அருகில் தான். அவர் போகும் போது, வரும் போது அதைப் பல தடவை பார்த்திருக்கிறார், அதற்குள் நுழைந்ததில்லை; அது யாருடைய வீடு என்றும் அவருக்குத் தெரியாது. பழங்காலத்து இரண்டடுக்குக் கட்டிடம்; முன்பக்கம் நீண்ட வராந்தா, வேலைப்பாடு செய்யப்பட்ட முகப்பு. வீட்டின் முகப்பில் 'பூர்வ கங்கா நகர்' என்ற பெயர் பதிக்கப் பட்டிருந்தது. வீட்டுக்காரரின் பூர்வீகக் கிராமத்தின் பெயராயிருக்கலாம். இந்த இருபதாண்டுகளில் அந்த வீட்டின் தோற்றமும் கல்கத்தாவைப் போலவே பழசாகியிருப்பதைக் கவனித்தார் சுஜாதா. சுவரில் ஜன்னலுக்குக் கீழே சற்று அதிகப் பிரசங்கித்தனமாகப் பதிக்கப் பெற்றிருந்தது ஒரு பள்பளப்பான, எனாமல் நிற 'ஏர் கூலர்'. காரை யுதிர்ந்த சுவர். ஒரு புடைவையைக் கிழித்து ஜன்னலுக்குத் திரை போடப்பட்டிருக்கிறது. கீழ்த்தளத்து அறைகளில் ஒரு லாண்ட்ரி, ஒரு ஹோமியோபதி மருந்துக்கடை, ரேடியோ மராமத்துக்கடை... மொத்தத்தில் அந்த வீட்டை வாரிசுரிமை யாகப் பெற்ற பங்காளிகளில் ஒருவரின் வறுமையையும் இன்னொருவரின் செழுமையையும் பறைசாற்றிக் கொண்டிருந்தது அந்த வீடு.

இருட்டு ரேழியைத் தாண்டிப் பொது முற்றத்துக்கு அருகில் ஒரு பெரிய அறை. இது வீட்டின் பின் பகுதி. முன்பக்கம் ஒரு சீதா மரம். அறையின் சுவர்களிலும் விதானத்திலும் காரை பெயர்ந்திருக்கிறது, தரையிலும் அங்கங்கே சிமெண்ட் பெயர்ந்திருக்கும் நிலை. ஓர் அகலமான மரபெஞ்சு. அலமாரியில் பயன்படுத்தப் படாத சட்ட புத்தகங்கள். அலமாரிக்குக் கீழே துருப்பிடித்திருக்கிறது.

சுஜாதா பெஞ்சியில் அமர்ந்திருந்தார்- நந்தினி அவருக்கு முன்னால் ஒரு மோடாவின் மேல்.

''அநிந்தியா தான் காட்டிக்கொடுத்துட்டான்'' என்று மறுபடியும் சொன்னாள் நந்தினி.

www.tamilarangam.net



இதே வாக்கியத்தை அவள் முன்பும் சொல்லியிருக்கிறாள். இப்போது மறுபடி சொல்லும் போது அவளுடைய கண்களில் ஒரு சிறிது வியப்பு நகர்ந்து செல்லும் மேகம் போல் சிறிது நேரத்துக்கு நிழலிட்டு மறைந்தது- தான் காட்டிக்கொடுப்பதால் சமூவும் மற்றவர்களும் சாக நேரிடும் என்று தெரிந்தும் அவன் இப்படிச் செய்ய ஏன் துணிந்தான் என்று புரியாததால் ஏற்பட்ட வியப்பு.

''எனக்கு இதெல்லாம் ஒன்றும் தெரியாது நந்தினி.''

''உங்களுக்கு இதெல்லாம் தெரியாது தான். பேப்பரில் படிப்பதெல்லாம் உங்களுக்கு வெறும் நிகழ்ச்சிகள். இவை ஏன் நிகழ்கின்றன, எப்படி நிகழ்கின்றன என்று தெரியாவிட்டாலும் உங்களுக்குக் கவலையில்லை. இப்படி மேம்போக்கா இருந்தது தப்புன்னு இப்போ தெரியுது உங்களுக்கு.''

சுஜாதா பதில் சொல்லவில்லை.

''அநிந்தியா காட்டிக் கொடுத்துட்டான். ப்ரதீ முட்டாள் தனமா அவனை நம்பிட்டான். நிதூ தான் அவனை ப்ரதீ கிட்டே கூட்டிக்கிட்டு வந்தான்.''

நிதூ ப்ரதீயின் நண்பன். நீதூவால் அறிமுகப்படுத்தப்பட்டவனை நம்பலாம் என்று ப்ரதீ நினைத்திருக்கலாம். அநிந்தியா நம்பத்தக்கவனல்ல என்று நீதூவுக்குத் தெரியுமா?

சுஜாதா யோசித்துப் பார்த்தார்.

வெகு காலம் சிறையில் தனியறையில் அடைக்கப்பட்டிருந்தால் மனிதமனம் எளிதில் உணர்ச்சி வசப்பட்டு விடுகிறது. தனிச்சிறையில் மனிதன் மிகவும் தனிமைப்படுகிறான். அவனுக்கு நாற்புறமும் சுவர், சுவரில் ஒரு சிறு ஓட்டை, கம்பிக் கதவு. அவனுடைய உணர்வு மருத்துவரின் அறுவைக்கத்தி போல், அல்லது துப்பாக்கிச் சனியன் போல் கூர்மையாகி சிறைக்கு வெளியே யார் தன்னை நினைவு வைத்துக்கொண்டிருக்கிறார்கள் என்று துளைத்துப்

www.tamilarangam.net



பார்த்துக்கொண்டிருக்கும். இடையிடையே அந்த அறைக் கதவு திறக்கும். கைதி வேறோர் அறைக்குக் கொண்டு வரப்படுவான். ஆனால் இந்த அறையும் வெளியுலகத்தைச் சேர்ந்ததல்ல. இந்த அறை வேறு வகையானது, ஒலியை வெளியே சிதறவிடாதது. இதற்காக இதன் கதவுகள் ஜன்னல்கள் எல்லாம் ரப்பரால் லைனிங் செய்யப்பட்டிருக்கும். இந்த அறையில் பிறக்கும் முனகல், ஓலம், அடி உதைகளின் ஒலி, விசாரணை செய்பவர்களின் உறுமல், கர்ஜனை எல்லாம் அறைக்குள்ளேயே அடைபட்டிருக்கும். விசாரணை செய்யப்படுபவனின் கண்ணுக்கு முன்னால் ஓர் ஆயிரம் வாட் விளக்கு எரிந்து கொண்டிருக்கும். விசாரணை செய்பவன் இருளில் அமர்ந்திருப்பான். அவன் சிகரெட்பிடிப்பவனாக இருந்தாலும் இல்லாவிட்டாலும் அவனுடைய கையில் சிகரெட் புகைந்து கொண்டிருக்கும். அவன் மிகவும் நாகரீகமாக, கண்ணியமான குரலில் ''நீங்க சாட்டர்ஜியோட ஃப்ரண்டா?'' என்று கேட்கலாம். ஆனால் அவனே சிலசமயம் விசாரணை செய்யப்படுபவனின் முகத்தில் சிகரெட் நெருப்பை வைத்து அழுத்தலாம். சிகரெட் நெருப்பால் தோலின் மேற்பாகம் மட்டுந்தான் பொசுங்கும். அந்தப்புண் களிம்பு தடவினால் ஆறிவிடும். ஆனால் இளம் உள்ளத்தின் ஆழத்தில் புண் ஆறாது, ஒவ்வொரு சிகரெட் சூடும் ரணமாக நிலைத்து நிற்கும். கைதி மறுபடியும் தன் சிறையறைக்குக் கொண்டு செல்லப்படுவான். மறுபடி தனிமை.

நெடுங்காலம் தனிமைப்படுத்தப் பட்டிருப்பவனின் உணர்வு தீவிரமாக, மருத்துவரின் கத்தி அல்லது துப்பாக்கிச் சனியன் போல் கூர்மையாக இருக்கும். ஆகவே சுஜாதா என்ன நினைக்கிறார் என்று நந்தினிக்குப் புரிந்துவிட்டது.

''நிதூ தெரிந்து தான் அநிந்தியாவை அழைத்துவந்தானா, தெரியாமல் அழைத்துவந்தானா என்பது இனி தெரியவே வராது...அவனுக்கு என்ன ஆச்சுன்னு தெரியுமா?'' நந்தினி கேட்டாள்.

www.tamilarangam.net



''தெரியாது.''

''நிதூ பல பெயர்கள் வச்சிக்கிட்டிருந்தான். ப்ரதீயும் அவன் சகாக்களும் இறந்து போனப்பறம் போலீஸ் இன்னும் பல பேரைப் பிடிச்சுது. நிதூ தங்கியிருந்த பகுதியிலே அவனுக்குத் தீபுன்னு பேர். அவன் தலைமறைவாயிட்டான். ரொம்ப தூரம் போகல்லே. தொழிற்சாலைப் பகுதியிலே ஒளிஞ்சுக்கிட்டிருந்தான். அந்த ஊர்ப் போலீஸ் வேறொரு கேசிலே அவனை அரெஸ்ட் பண்ணிச்சு. அந்தச் சமயத்திலே அவனோட பகுதியைச் சேர்ந்த போலீஸ் ஆபிசர் தற்செயலா அங்கே போனவன் அவனை அடையாளங் கண்டு பிடிச்சுட்டான். சில காகிதங்களும் எங்களைக் காட்டிக் கொடுத்திடுச்சு. எங்களோட முகாம்களோட விலாசங்கள், சிகிச்சைக்கான ஏற்பாடுகள், எங்க வேலைத் திட்டம், அச்சடிக்கப்பட்ட காகிதங்கள் போலீசுக்குக் கிடைச்சு, மேலும் துப்புத்துலக்கப் போன ஆபிசர் ஜீப்பை நிறுத்திட்டுச் சாப்பிடவும் வெல்லம் வாங்கிக்கிட்டுப் போகவும் அந்த ஊர் போலீஸ் ஸ்டேஷன்லே நுழைஞ்சிருக்கான்...''

''வெல்லமா?''

''ஆமா...அந்த ஊர் வெல்லம் ரொம்பப் பிரபலம். அவனுக்காக ரெண்டு கட்டி வெல்லம் வாங்கிவச்சிருந்தாங்க... அவன் உள்ளே நுழைஞ்சதும் நிதூவைப் பார்த்து, 'திபூ, நீ இங்கே எப்படி வந்தே?'ன்னு கேட்டிருக்கான். நிதூ ஏற்கனவே நிறைய அடி, உதை வாங்கிப் பயந்து போயிருந்தான். உடனே ஆபிசர் அவனை ஜீப்பிலே போட்டுக்கிட்டு வந்துட்டான். நிதூ தான் குடியிருந்த பகுதியிலே ரொம்ப சாதுவாயிருந்திருக்கான். அதனாலே யாரும் தன்னைக் கண்டு பிடிக்க முடியாதுன்னு நினைச்சுக்கிட்டிருந்தான். ஆனாத் தப்ப முடியல்லே. அவனைப் போலீஸ் அடிச்சே கொன்னாங்க. அந்தப் பகுதி ஜனங்க - பெண்டுகள் உள்பட - கிளர்ச்சி பண்ணினாங்க. அவங்க மேலே கண்ணீர்ப்புகை குண்டு வீசினது...''

''இதெல்லாம் செய்திப் பத்திரிகையிலே வந்ததா?''

www.tamilarangam.net



''இல்லே.''

''அப்புறம்?''

''நிதூ இப்போ இல்லே. அவனுக்கு அநிந்தியாவைப் பத்தின உண்மை தெரியுமா தெரியாதான்னு இனிமே கண்டு பிடிக்க முடியாது. ஆனா எனக்கு என்ன தோணுதுன்னா...''

''என்ன?''

''அவனுக்குத் தெரிஞ்சிருப்பது தான் உசிதம்.''

''யாருக்கு? நிதூவுக்கா?''

''இல்லே...ப்ரதீக்குத்தான்.''

''என்ன தெரிஞ்சிருக்கணும்?''

''எங்க செயல்திட்டம் மாதிரி வேறே சிலபேருக்கு வேற திட்டம் இருந்ததுன்னு.''

''என்ன திட்டம்?''

''எங்களைக் காட்டிக் கொடுக்கற திட்டம்...'' நந்தினியின் குரல் அமைதியாக, உணர்ச்சியற்றதாக இருந்தது.

இப்போது சுஜாதாவுக்குப் புரிந்தது - நந்தினியின் கண்களில் சற்றுமுன் தோன்றிய வியப்பு அநிந்தியாவின் வஞ்சகத்துக்காக அல்ல, ப்ரதீ போன்றவர்களின் அசட்டு நம்பிக்கைக்காக. எல்லாவிதமான நிலையான ஏற்பாட்டிலும் உறுதியான நம்பிக்கையின்மை அவர்களிடம் இருந்தது. ஆனால் சிலர் திட்டமிட்டு அவர்களைக் காட்டிக்கொடுக்கலாம் என்று அவர்கள் நினைத்துப் பார்க்கவில்லையே என்பதுதான் நந்தினிக்கு வியப்பு.

சுஜாதா நந்தினியின் மெலிந்த, கருத்த, சோர்ந்த முகத்தைப் பார்த்தார், கண்களுக்குக் கீழே படர்ந்து நிலைத்துவிட்ட கருநிழலைப் பார்த்தார். மலைச்சரிவில் இப்படித்தான் எப்போதும் நிழல் படிந்திருக்கும்- எப்போதும் நிழலான, யாருமறியாத பிரதேசம்!

www.tamilarangam.net



ஒருநாளும் நந்தினியை அறிந்துகொள்ள முடியாது, புரிந்து கொள்ள முடியாது என்று தோன்றியது சுஜாதாவுக்கு. இது அவருக்கு ஒரு பெரு நஷ்டம் என்று தோன்றியது. ப்ரதீயால் நேசிக்கப்பட்ட ஒரு பெண்ணைத் தம்மால் புரிந்து கொள்ள இயலவில்லை, அவள் எப்போதும் தமக்கு அன்னியளாகவே இருப்பாள் என்ற நினைவு அவருக்குத் துன்பமளித்தது. இனி அவரால் சமூவின் அம்மாவிடமும் போக முடியாது. நந்தினி, ப்ரதீ ஆகியோரின் நம்பிக்கைகளை, அனுபவங்களை அவரால் பகிர்ந்து கொள்ள இயலாது. இதுவரை தாம் கொண்டிருந்த ஈடுபாடுகளில் எவை அர்த்தமற்றவை, எவை அர்த்தமுள்ளவை என்று யார் அவருக்குச் சொல்வார்கள்? அவர் தம் குறைகளை இப்படித்தான் உணர்ந்து கொள்ள வேண்டும் என்று தான் அன்று ப்ரதீ நீலச்சட்டையணிந்து கொண்டு வெளியே போனானா? இதற்காகத்தான் அவன் மாடிப்படிகளுக்குக் கீழே நின்று கொண்டு அவரை நிமிர்ந்து பார்த்தானா?

அந்தக் கணம் சுஜாதாவுக்கு மறுபடி கிடைத்தால் அவர் படியிறங்கிக் கீழே வருவார்; அவனை - தம் பிள்ளையை - இறுகக் கட்டிக் கொள்வார்; சொல்லுவார், ''ப்ரதீ, நான் எல்லாம் புரிஞ்சுக்க முயற்சி செய்யறேன். நீ வெளியே போகாதே! கல்கத்தாவிலே இருபது வயசு இளைஞன் ஒரு பகுதியிலேருந்து இன்னொரு பகுதிக்குப் போகக்கூடாத காலம் இது. நீ போகாதே!''

காலம் போய்க்கொண்டே இருக்கிறது. போன காலம் திரும்பி வருவதில்லை. இரக்கமற்ற, விதிபோல் கொடூரமான, கொலைகாரக் காலம். காலம் கங்கை, சோகம் அதன் கரை. காலப்போக்கில் சோகக்கரையில் மண் சேர்ந்து சோகத்தை அமுக்கிவிடும். பிறகு அந்த மண்ணுக்குள்ளிருந்து புதிய முளைகளின் விரல்கள் கிளம்பிவரும். அவை வானத்தை நோக்கி வளரும்- நம்பிக்கை, வேதனை, மகிழ்ச்சி, ஏக்கத்தின் முளைகள்.

''எல்லாம், எல்லாரும் மோசம் செய்யறாங்க....''

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சுஜாதாவின் சிந்தனைச் சுவரைக் கடந்து கொண்டு நந்தினியின் குரல் வந்தது.

''உலகத்திலே காட்டிக் கொடுக்கற குணம் இருக்குன்னு எனக்குத் தெரியாத போது ரொம்ப நம்பிக்கை இருந்தது எனக்கு. ஆனா அந்த நம்பிக்கைக்கு அஸ்திவாரம் இல்லே. அதனாலே நான் சந்தேகப்படத் தொடங்கின போது கொஞ்சங் கொஞ்சமா விஷயங்கள் விளங்கிச்சு. இப்போ நான் எங்கேயிருக்கேன்னு எனக்கு நல்லாத் தெரியுது...''

''அதனாலே ஒனக்கு ஏதாவது லாபம் ஏற்பட்டதா?''

''ஆமா...இப்போ புரியுது எனக்கு...அப்போ ரொம்ப சாதாரணமா, இயற்கையா எங்களுக்குத் தோணிச்சு, ஒரு யுகம் முடியப்போகுது, நாங்க ஒரு புது யுகத்தைக் கொண்டு வரப் போறோம்னு. நானும் ப்ரதீயும் எவ்வளவு நாள் பேசிக்கிட்டே சாம்பஜார்லேருந்து பவானிபூர் வரைக்கும் நடந்தே வந்திருக்கோம்! அப்போ நாங்க பார்த்த காட்சிகள்-மனிசங்க, வீடுகள், தெருவிளக்குகள் - நடைபாதையிலே சிவப்பு ரோஜாப்பூ விக்கறவன், தெரு ஓரத்திலே தொங்கற தோரணம், பஸ் ஸ்டாப்பிலே ஒட்டியிருக்கற நோட்டீஸ், மனிசங்க முகத்திலே சிரிப்பு, தெருப்பக்கத்துக் கடையிலே ஒரு சிறு பத்திரிகையிலே கவிதை, மைதானத்துக் கூட்டத்திலே மக்களோட கரவொலி, இந்திப் பாட்டு - இதையெல்லாம் பார்த்து, கேட்டு எங்களுக்கு ஏற்பட்ட உற்சாகத்தைச் சொல்லி மாளாது. மகிழ்ச்சியிலே வெடிச்சுப் போற மாதிரி இருக்கும் எங்களுக்கு. எல்லாத்திலேயும் விசுவாசம், நம்பிக்கை இருந்தது...அந்த மனநிலை இனிமேல் எங்களுக்கு வராது, ஒரு நாளும் அது திரும்பக் கிடைக்காது. எல்லாம் போச்சு! ஒரு யுகம் நிசமாவே முடிஞ்சு போச்சு! அந்த யுகத்து 'நான்' செத்துப் போயிட்டேன்!''

''ஏன் நந்தினி? ப்ரதீ இல்லேன்னா?''

''ப்ரதீ மட்டும்னு இல்லே...இன்னும் எவ்வளவோ இல்லே இப்போ...ஜெயில்லே தனியறையிலே உக்காந்துக்கிட்டு யோசிச்சு யோசிச்சு நானே முடிஞ்சு

www.tamilarangam.net



போயிட்டேன்.''

''அப்படிச் சொல்லாதே நந்தினி!''

''என் அம்மாவும் உங்க மாதிரி தான் சொல்றாங்க. அவங்களுக்குப் புரியாது...உங்களுக்குந்தான்.''

''கொஞ்சங்கூடப் புரியாதா?''

''எப்படிப் புரியும்?....நீங்க எங்க மாதிரி நம்பினிங்களா எல்லாத்தையும்?''

இல்லை. சுஜாதா அப்படி நம்பவில்லை - பாதசாரியின் சிரிப்பில் காற்றில், மிதந்து வரும் பாட்டொலியில், சிவப்பு ரோஜாவில், பிரகாசமான விளக்கொளியில், தொங்கும் தோரணத்தில் நம்பிக்கை வைக்கவில்லை. அவருக்கு நம்பிக்கை எதில் இருந்தது?

''காட்டிக்கொடுத்தல் எப்படி நிகழ்ந்ததுன்னு இப்போ புரியுது...அந்தக் காரியம் இப்பவும் தொடருது...''

''இப்பவுமா?''

''ஆமா...இல்லேன்னா ஏன் ஜெயிலுக்கு ஜெயில் சுவரை இன்னும் உயரே எழுப்பறாங்க, காவல் கோபுரம் கட்டறாங்க? ஆயிரக்கணக்கான இளைஞர்கள் ஜெயில்லே இருக்காங்க, ஆனா அவங்களைப் பத்தி யாரும் ஏன் பேசறதில்லே? பேசறவங்க தங்கள் தங்களோட கட்சியை நினைவிலே வச்சுக்கிட்டு ஏன் பேசறாங்க? நிசமாவே வேலை செய்ய விரும்பற எங்களுக்குக் காகிதம் ஏன் கிடைக்கல்லே, அச்சகம் கிடைக்கல்லே, மத்தவங்களுக்கு வேண்டியமட்டும் இதெல்லாம் கிடைக்குது? அப்போ பாங்க்ளாதேஷ், பாங்க்ளாதேஷ்னு ஆர்ப்பாட்டம் பண்ணின கவிகள் ஏன் இப்போ அழுதுக்கிட்டே கவிதை எழுதிக்கிட்டு இருக்காங்க?...ஏன் இப்பவும் போலீஸ் ரெய்டு, ஜெயில்லே துப்பாக்கிச்சூடு?....எல்லாம் காட்டிக்கொடுக்கற வேலை!''

''இப்பவுமா?''

www.tamilarangam.net



''இப்பவுந்தான்!... பேப்பர்லே வரல்லேன்னா இதெல்லாம் நடக்கல்லேன்னு அர்த்தமா? இப்பவும் துப்பாக்கிச் சூடு நடக்கறதில்லையா?... என்ன முடிஞ்சுபோச்சு?...ஒண்ணும் முடியல்லே. பதினாறு வயசிலேருந்து இருபத்தி நாலு வயசு வரையிலே ஒரு தலைமுறை காணாமே போயிடுச்சு, போயிக்கிட்டிருக்கு....''

சுஜாதா தாம் சாதாரணமாகச் செய்யாத ஒரு காரியத்தை இப்போது செய்தார். அவர் எப்போதும் உணர்ச்சிவசப்பட்டுக் காரியம் செய்பவரல்ல. வாழ்க்கையில் இயற்கையாக விரும்பத் தக்க விஷயங்களில் கூட ஆர்வங் காட்டும் துணிவில்லை அவருக்கு. இளம் வயதில் அவர் வெளியே வீசும் புயலைப் பார்க்க ஜன்னலுக்கருகில் போய் நின்றால் கூட திவ்யநாத் அவரைத் திட்டுவார். இளம் வயதில் திணிக்கப்பட்ட கட்டுப்பாடுகளை மீறுவது கடினம். அப்படியும் இப்போது சுஜாதா நந்தினியின் கையில் தம் கையை வைத்தார். இந்தக் கணம் இனி திரும்ப வராது என்று அவருக்குத் தோன்றிவிட்டது. காலத்தைப் போல ஓடுகாலி வேறு யார் இருக்க முடியும்? நீலச்சட்டையணிந்த ப்ரதீ மாடிப்படிக்குக் கீழே நின்று கொண்டு அவரை நிமிர்ந்து பார்த்த அந்தக்கணம் இனி ஒருபோதும் திரும்பாது. அவரது உள்ளத்தின் ஆழத்தில் வெறுமை, அளவிட இயலாத சோகம்...இனி நந்தினியின் அண்மை அவருக்குக் கிடைக்காது!

ஆகவே தான் சுஜாதா நந்தினியின் கையில் தம் கையை வைத்தார். நந்தினி அவருடைய கையை உதறிவிட்டு அவரை அவருடைய வழக்கமான வாழ்க்கைச் சுற்றுக்குள் தள்ளிவிடுவாளோ? சமூவின் அக்கா போல அவளும் அவரை ஏற்றுக் கொள்ள மறுப்பாளோ? இப்படி நினைக்கும் போதே பயமாயிருந்தது அவருக்கு. இனிமேல் அவர் வெளியுலகில் திவ்யநாத் - ஜோதி – தூலி - நீபா - வினி - வங்கியில் சக ஊழியர்கள் இவர்களிடமிருந்தும், அகவெளியில் ப்ரதீ - சமூவின் அம்மா - நந்தினி ஆகியோரிடமிருந்தும் அன்னியப்பட்டுத் தனிமைச் சிறையில் துன்புற்றுத் தவிக்க



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வேண்டியது தான்! இனிமேல் அவர் என்றைக்கும் தனியாள் தான். இனி யாரும் கதவைத் திறந்து கொண்டு வந்து அவரது தனிமையைப் போக்கி, ''நீங்க ப்ரதீ சாட்டர்ஜியோட அம்மா தானே?'' என்று கேட்கமாட்டார்கள்!

ஆனால் நந்தினி அவருடைய கையை உதறித்தள்ளவில்லை. அவள் சிறிது நேரம் பேசாமலிருந்தாள். பிறகு தயக்கத்தோடு, அரை மனதோடு அவருடைய கையைத் தடவிக் கொடுத்தாள்.

சுஜாதா தம் கையை எடுத்துக்கொண்டார். நந்தினி தன் கையால் அவரைத் தடவிக் கொடுத்ததற்காக அவருக்கு அவள் பால் நன்றி தோன்றியது.

''நான் ப்ரதீயைக் காதலிச்சேன்'' நந்தினி சொன்னாள்.

''ப்ரதீ ஒன்னைப் பத்தி எங்கிட்டே சொல்லியிருக்கான்.''

''அப்படியா?''

''ஆமா, ஜனவரி பதினாறாம் தேதி...''

''ஆச்சரியமா இருக்கு.''

''என்ன?''

''ஒங்க கிட்டே சொல்லல்லியா?''

''இல்லையே.''

''சொல்றதுன்னா ஒங்ககிட்டே தான் சொல்லுவான்னு நினைச்சேன். ப்ரதீக்கு வீட்டிலே ஒங்களைத் தவிர வேறே யார்கிட்டேயும் நம்பிக்கையில்லே...''

''அப்படியா!''

''ஏன் ஆச்சரியப்படறீங்க?''

''ப்ரதீ யாரோடேயுமே ரொம்ப நெருக்கமாப் பழகறவனில்லே....''

''இதிலே ஆச்சரியப்பட ஒண்ணுமில்லே..அப்பா,

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அண்ணன், அக்கா ஒறவுக்காக அவங்களை நேசிக்கணும்னு கட்டாயமா?''

''நான் ப்ரதீயை எவ்வளவு குறைவாப் புரிஞ்சுக்கிட்டிருந்தேன்னு இப்போ தெரியுது எனக்கு...''

''புரிஞ்சுக்க முயற்சி செஞ்சீங்களா?''

சுஜாதா தலையாட்டினார் 'இல்லை'யென்று. அவர் எந்த நிலையிலும் பொய் சொல்பவரல்ல. இது ப்ரதீக்குத் தெரியும்.

''நீங்க - உங்க தலைமுறையே - இப்படித்தான். ஒங்களுக்கு அன்பு தேவை, மற்றவர்களின் கீழ்ப்படிதல், நம்பிக்கை தேவை... இதையெல்லாம் நீங்க ஏன் எதிர்பார்க்கறீங்க, எப்படி எதிர்பார்க்கறீங்க?''

''எதிர்பார்க்கக் கூடாதா?''

''கூடாது. எதிர்பார்க்கற உரிமையை நீங்க இழந்துட்டீங்க...ஆனா எவ்வளவு பேருக்கு அவங்க அப்பா அம்மாவோடே வேறே விதமான உறவு, நெருக்கம் இருந்தது! அந்த்து, தீபு, சஞ்சயன் இவங்களோட வாழ்க்கை எவ்வளவு மகிழ்ச்சியா இருந்தது! அப்படியும் அவங்க இந்த இயக்கத்திலே வந்து சேர்ந்தாங்க...ஏன் வந்தாங்க? யாருக்குத் தெரியும்?''

''நீதான் சொல்லேன், நந்தினி.''

''ப்ரதீயையே எடுத்துக்கங்க. அவனுக்கும் அவன் அப்பாவுக்கும் இடையிலே எந்தத் தொடர்பும் இல்லே. அப்பா முன்வந்து அவனை நெருங்கியிருக்கலாம், இணக்கமான தொடர்பை ஏற்படுத்திக்கிட்டு இருக்கலாம். அவர் அப்படி செய்யல்லே....அவர் ஒங்களையும் தரைவிரிப்பு மாதிரி உபயோகிச்சுக்கிட்டாராம், ப்ரதீ சொல்லியிருக்கான்.''

''ப்ரதீயா அப்படிச் சொன்னான்?''

''இல்லாட்டி எனக்கு எப்படித் தெரியும், சொல்லுங்க!''

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சுஜாதாவின் முகம் சிவந்துவிட்டது, பிறகு இயற்கை நிறத்துக்கு வந்தது.

ப்ரதீக்கு எல்லாம் புரிந்திருந்தது. அதனால் தான் அவன் தன் தாயை அவ்வளவு நேசித்தான். அவன் சிறு பையனாயிருந்த போது அவர் மௌனமாக அழுது கொண்டிருப்பதைப் பார்த்து, ''அழாதேம்மா, நான் பெரியவனானப்பறம் ஒனக்கு ஒரு நல்ல புடவை வாங்கித் தரேன், புலியும் வேட்டைக்காரனும் படம் போட்ட புடவை...'' என்று சொல்லி அவரைத் தேற்றினான்.

'அப்பா லஞ்சங் கொடுத்துத் தம் தொழிலுக்கு வாடிக்கைக்காரர்களைச் சேர்க்கிறார்' என்பான் அவன். 'இவர் செத்துப்போனா இவரோட தொழில்லே உள்ள யாரும் வருத்தப்பட மாட்டாங்க' என்று சொல்வான். ஒங்க மாதிரி ஒரு மனைவி, நாலு குழந்தைகள் இருந்தும் அவர் பொம்பளைங்க பின்னாலே...ஒரு டைபிஸ்ட் பொண்ணைத் தனியா ஒரு ஃபிளாட்டிலே குடிவச்சுக்கிட்டு... இதுக்காக அவன் தன் அப்பாவைத் திட்டியிருக்கான் ஒரு தடவை... ஒங்களுக்குத் தெரியுமா?''

''எப்போ?''

''நவம்பர் மாசம்...அவன் இறந்துபோறதுக்கு ரெண்டு மாசம் முன்னாலே...''

ப்ரதீ இறப்பதற்குச் சில மாதங்கள் முன்பிருந்தே தம் அப்பாவோடு ஏன் பேசுவதில்லை, திவ்யநாத்தும் ஏன் அவன் பெயரைக் கூட உச்சரிப்பதில்லை என்று இப்போது சுஜாதாவுக்குப் புரிந்தது. ''ஒன்னோட சின்னப் பிள்ளை வீட்டிலேதான் இருக்கானா?'' என்று கூடக் கேட்பதில்லை அவர் முன்போல.

''ப்ரதீயின் அண்ணனுக்கும் அக்காமாருக்கும் தங்கள் தந்தையைப் பத்தி ரொம்பப் பெருமை. அவர்களை மனிதர்களாகவே கருதுவதில்லை ப்ரதீ. பெரியக்கா செக்ஸ்வெறி பிடித்தவள், சின்னக்கா நாகரீகமில்லாதவள்,

www.tamilarangam.net



அண்ணன் வெறும் தரகன் அப்படீன்னு அவன் என்கிட்டே சொல்லியிருக்கான். ஆனால் அவன் ஒங்களை ரொம்ப நேசிச்சான், அதனால்தான் அவன் வீட்டை விட்டுப் போகவில்லே...''

''எங்கே போகல்லே?''

''அவன் ரொம்பநாள் முன்னாலேயே வீட்டை விட்டுப் போயிருக்கணும். ஒங்களுக்காகத்தான் இவ்வளவு நாள் போகாமே இருந்தான்....ஆனால் கடைசியிலே முடிவு செஞ்சிருந்தோம், ஜனவரி பத்தொம்பதாம் தேதி நானும் அவனும் மத்தவங்களும் போயிடறதாயிருந்தோம்...''

''எங்கே?'

''எங்க தலைமை அலுவலகத்துக்கு...''

''ப்ரதீ வீட்டைவிட்டு வெளியேற நினைச்சிருந்தானா?''

''ஆமா... உசிரோடே இருந்திருந்தா வெளியேறியிருப்பான். அநிந்தியா எங்களைக் காட்டிக் கொடுக்காமே இருந்திருந்தா...ப்ரதீக்குத் தன் வீட்டார் மேலேயே நம்பிக்கையில்லே...''

''ஆனால் சமூவோட அப்பா ப்ரதீயோட அப்பா மாதிரி இல்லியே!''

''சமூவுக்கு வேறேவிதமான எரிச்சல். அவனுக்குக் கோபம் வந்தா,'என் அப்பாவைத்தான் மொதல்லே கொல்லணும்!'னு கத்துவான். அவர் எல்லார்கிட்டேயும் பணிஞ்சு போறார்னு அவனுக்குக் கோபம். மீன் விக்கறவனிலேருந்து தெருப் போக்கிரி வரையிலே எல்லாரும் அவர் கடையிலே சாமான் வாங்கிக்கிட்டுப் பணம் கொடுக்க மாட்டாங்க. அவர் இந்த அநியாயத்தைப் பொறுத்துக்கிட்டுச் சும்மா இருப்பார். இது சமூவுக்குப் பிடிக்காது...அந்த்து, தீபு, சஞ்சயன் இவங்க எல்லாரும் அவங்க அப்பாக்களை மதிக்கறவங்கதான். அவங்க ஏன் கிளர்ச்சிக்காரங்களா ஆனாங்கன்னு சொல்லமுடியாது.

www.tamilarangam.net



அவங்களை ஒரு குறிப்பிட்ட வரையறைக்குள்ளே அடக்க முடியாது...''

''ப்ரதீ என்னைப் பத்தி வேறே என்ன சொல்லியிருக்கான்?''

''எவ்வளவோ சொல்லியிருக்கான். எப்போதும் சொல்லமாட்டான், சிலசமயம்....பாருங்க, ப்ரதீ ஜனவரி பதினஞ்சாம் தேதியே தலைமை அலுவலகத்துக்குப் போறதா முடிவாயிருந்தது. ப்ரதீ அதைப் பத்தொம்பதாந் தேதிக்கு மாத்தினான். இதுக்குக் காரணம் என்னன்னு எனக்கு மட்டுந்தான் தெரியும். அவனோட பொறந்த நாள் ஒங்களுக்கு எவ்வளவு முக்கியம்னு எனக்குத் தெரியும். அவனுக்கு இதிலெல்லாம் நம்பிக்கையில்லே. இருந்தாலும் ஒங்களுக்காக...நான் இதை யார் கிட்டேயும் சொல்லல்லே, ஆனா அவனை நல்லாத் திட்டினேன்.''

''அவன் என்ன சொன்னான்?''

''சும்மா சிரிச்சான். அவன் சரியான பதில் சொல்ல முடியாட்டி சிரிச்சுடுவான். 'நான் உம்மாதிரி தைரியசாலி இல்லே' அப்படீன்னு சொன்னான்.''

''வேறே என்ன சொல்லியிருக்கான் என்னைப்பத்தி?''

''நீங்க ரொம்ப நல்லவங்கன்னு சொல்லியிருக்கான். நீங்களும் அவனைப் புரிஞ்சுக்கல்லேன்னாலும் ஒங்களோட நடத்தையை அவனாலே விளக்க முடியும்னான். ஒங்க மேலே அவனுக்கு ஒரு கோபமும் இல்லே. அவனுக்கு நேஷனல் ஸ்காலர்ஷிப் கிடைச்ச போது வேலைகீலை பார்க்கற எண்ணம் இருந்தது. வேலை கிடைச்சுட்டா ஒங்களைக் கூட்டிக்கிட்டுப் போய்த் தனிக்குடித்தனம் வைக்கப் போறதாச் சொல்லிக்கிட்டிருந்தான். அப்பறம் அதைப்பத்திப் பேசறதை விட்டுட்டான்.''

அப்படியானால் சுஜாதா அவனிடம் கொண்டிருந்த நேசமும் அவனுடைய சாவுக்கு ஒரு மறைமுகக் காரணமாகிவிட்டதா? அவருக்கு மன வருத்தம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஏற்படக்கூடாதென்றுதானே அவன் அன்று கல்கத்தாவில் இருந்திருக்கிறான்! இல்லாவிட்டால் வெளியே போயிருப்பானே!

சிறையில் தனியறையில் அடைத்துவைக்கப் பட்டிருந்தால் மனிதமனம் கூர்மையாக, ஊடுருவ வல்லதாக ஆகிவிடும்-பிணக்கிடங்கு மருத்துவரின் கத்திபோல. சுஜாதாவின் எண்ண ஓட்டத்தைப் புரிந்து கொண்டவள் போல் நந்தினி சொன்னாள், ''அனாவசியமா ஒங்கமேலேயே குத்தஞ் சாட்டிக்காதீங்க!...ப்ரதீ தலைமை அலுவலகத்துக்குப் போய்ச்சேர்ந்திருந்தாக் கூட இறந்து போயிருப்பான்...அநிந்தியா மட்டும் காட்டிக் கொடுக்காமே இருந்திருந்தால்....''

''இருந்தாலும்...''

''அநிந்தியா காட்டிக் கொடுத்தாங்கறது தான் முக்கியம். நாங்க ஒரு குழுவிலேருந்தும் பிரிஞ்சு வந்தவங்க இல்லே. நேரடியா இயக்கத்துக்கு வந்தவங்க. அநிந்தியா வேறொரு குழுவிலேருந்து பிரிஞ்சுவந்தான்-ஏதோ ஒரு திட்டத்தோடு. சமூவும் அவன் தோழர்களும் அன்னிக்குக் குடியிருப்புக்குத் திரும்பறதுன்னு மொதல்லே முடிவாயிருந்தது. பிற்பாடு அந்த முடிவிலே மாற்றம் ஏற்பட்டது...நாங்க எல்லாரும் இயக்கத்தோட இந்தக் குறைகளுக்காக கஷ்ட நஷ்டத்துக்கு உள்ளாகியிருக்கோம். இந்த மாதிரி ரகசிய இயக்கங்களிலே ஒவ்வொருத்தரும் மத்தவங்களை நம்பித்தான் ஆகணும்...குடியிருப்புக்குத் திரும்பிப் போக வேண்டாம்னு சமூவையும் தோழர்களையும் அநிந்தியா எச்சரிக்கை செஞ்சுட்டு அந்தச் செய்தியை ப்ரதீக்குச் சொல்லணும்னு ஏற்பாடு...''

''அதுக்காகத்தான் ப்ரதீ வீட்டிலே காத்திருந்திருக்கான்.''

''ஆமா... ஆனா அநிந்தியா சமூவையும் மத்தவங்களையும் எச்சரிக்கை செய்யல்லே. அவன் குடியிருப்புக்குப் போய் அவங்க அங்கே வந்திருக்கற

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



விஷயத்தை மத்தவங்களுக்குச் சொல்லிட்டுக் கல்கத்தாவுக்கு வெளியே போயிட்டான். நான் சாயங்காலம் லால்ட்டுவைச் சந்திக்கறதா இருந்தது. அவங்க குடியிருப்புக்குப் போயிட்ட விஷயம் தெரிஞ்சதும் நான் இந்தச் செய்தியை ப்ரதீக்குச் சொன்னேன். அவன் மேலேயிருந்து மறுஉத்தரவுக்குக் காத்திருக்காமே தானே குடியிருப்புக்குப் போயிட்டான் சமூவையும் மத்தவங்களையும் உஷார்ப்படுத்த.''

''அவன் போனது ஒனக்கு எப்போ தெரியும்?''

''எனக்கு விடியற்காலையிலே தெரிஞ்சது. பார்த்தாவோட தம்பி அன்னிக்கு ராத்திரியே ஓடிப்போனானே, அவன்தான் எனக்குச் சொன்னான்.''

''நீ அப்போ...''

''அன்னிக்குக் காலையிலேயே நான் அரெஸ்ட் ஆயிட்டேன்.''

''அன்னிக்குக் காலையிலேயா?''

''ஆமா. அநிந்தியா எங்க குழு முழுவதையும் காட்டிக் கொடுத்துட்டான்.''

''இப்போ அநிந்தியா எங்கே இருக்கான்?''

''வெளியே...''

''வெளியேன்னா?''

''இந்த மாநிலத்துக்கு வெளியே...''

''அப்பறம்?''

''அப்பறம் நான் ஜெயிலுக்குப் போனேன்..அப்போ எனக்குத் தோணும்....''

''என்ன?''

''அநிந்தியாவைக் கொன்னுடணும்னு; ஆனால் இப்போ அப்படித் தோணறதில்லே...''

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



''ஏன்?''

''நான் மாறிடல்லே...ஆனா இப்போ எனக்குத் தோணுது, அநிந்தியா மட்டுமில்லே, எல்லாத்தையுமே வேறே விதமா எதிர்த்துப் போராடணும்னு...''

''மறுபடியும் போராட்டமா?''

''ஏன் கூடாது?''

''அப்படீன்னா...''

''ஒங்களுக்குப் புரியாதும்மா...எங்க நிலை ஒங்களுக்குப் புரியாது. அந்த ஜெயில், சித்திரவதை, விசாரணை...அவங்க நம்ம மனோபலத்தை, உறுதியை நசுக்கப் பாக்கறாங்க. இவ்வளவு நடந்த பிறகு நான் என்னிக்கும் ஒங்க மாதிரி இயல்பா நினைக்கமுடியாது, இருக்க முடியாது...ப்ரதீ உயிரோட இருந்திருந்தா நாங்க ஒரு வேளை கலியாணம் பண்ணிக்கிட்டிருப்போம், பண்ணிக்காமேயும் இருந்திருக்கலாம். அது வேறே பல விஷயங்களைப் பொருத்தது. என்ன நடந்திருக்குமோ, சொல்ல முடியாது. இந்த மாதிரி அனுபவத்துக்கப்பறம் பலவிஷயங்களிலே ஈடுபாடு இல்லாமே போயிடுது....''

''நீ ப்ரதீயை ரொம்ப நேசிச்சியா?''

''அப்போ அப்படித்தான் தோணிச்சு. இப்பவும் அப்படித்தான் தோணுது. ஆனா நாளாக ஆக எல்லாம் மறந்து போயிடும்னு சொல்றாங்க. முகத்தோட நினைவு கூட மங்கிப் போயிடுமாம். நினைச்சாலே பயமாயிருக்கு.''

''நிசந்தான்.''

''ஒங்களுக்குக் கூடவா?''

''ஆமா.''

''அவனை மறந்துடுவேனான்னு தெரியல்லே, அல்லது நினைவு மங்கிடுமான்னு தெரியாது. ஆனா ப்ரதீ ஒருத்தன் மட்டுமில்லே....எவ்வளவு பேர் செத்துப்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



போனாங்க! எதுக்காக?...நான் ஜெயில்லேயிருந்து வெளியே வந்ததும் எனக்கு ரொம்ப வேதனையாயிருந்தது என்ன தெரியுமா?''

''என்ன?''

''எல்லாம் இயற்கையா, வழக்கப்படி நடக்குதுங்கற மாதிரி சூழ்நிலை. எல்லாம் அமைதி, எனக்கு நெஞ்சு வெடிக்கும் போலே ஆயிடுச்சு.''

''இப்போ எல்லாம் அமைதியாகத்தானே இருக்கு, நந்தினி!''

''இல்லே!'' நந்தினி கத்தினாள்.

சுஜாதா திகைத்தார்.

''இல்லே, அமைதியாயிடல்லே! அப்பவும் ஆகல்லே, இப்பவும் ஆயிடல்லே. எல்லாம் அமைதியாயிடுச்சுன்னு சொல்லாதீங்க! என்ன இருந்தாலும் நீங்க ப்ரதீயோட அம்மா. எல்லாம் அமைதியாயிடுச்சுன்னு நீங்க நம்பறது சரியில்லே. இந்த மாதிரி நம்பிக்கை எப்படித்தான் வருது?''

''ஒண்ணும் அமைதி ஆகல்லியா?''

''இல்லே....அவங்க ஏன் செத்துப்போனாங்க? என்ன முடிஞ்சுபோயிருக்கு? ஜனங்க எல்லாரும் சௌக்கியமா இருக்காங்களா? அரசியல் விளையாட்டு முடிஞ்சு போச்சா? முன்னாலே இருந்ததை விட இன்னும் நல்ல ஒலகத்திலே வாழ்ந்துக்கிட்டிருக்கோமா?''

''இல்லே.''

''ஆயிரம் ஆயிரம் இளைஞர்கள் விசாரணை யில்லாமே ஜெயில்லே இருக்காங்க. அப்படியும் எல்லாம் அமைதியாயிடுச்சுன்னு சொல்லுவீங்களா?....உம், எல்லோரும் அப்படித்தான் எனக்குப் போதிக்கறாங்க. நான் கலியாணம் பண்ணிக்கிட்டுக் குடும்பம் நடத்தணும்னு என் அம்மா சொல்றா...''

www.tamilarangam.net



''நீ எப்படி விடுதலையானே?''

''என் உடல்நிலை கெட்டுப் போச்சுன்னு விடுதலை பண்ணிட்டாங்க. இல்லாட்டி வெளியே விட்டிருக்க மாட்டாங்க. எனக்குச் சாக இஷ்டமில்லே. நான் ஜெயில்லேயே இருந்திருந்தா சரியான சிகிச்சை நடந்திருக்காது. இப்பவும் நான் கண்காணிப்பிலே தான் இருக்கேன்.''

''ஒன் ஒடம்புக்கு என்ன?''

''நீங்க கவனிக்கல்லியா? என் கண் கெட்டுப் போயிடுச்சு. சேர்ந்தாப்பலே நாற்பத்தெட்டு மணி நேரம், எழுபத்திரண்டு மணி நேரம் ரொம்பப் பிரகாசமான வெளிச்சத்தைப் பார்த்துப் பார்த்துக் கண் நரம்பு கெட்டுப் போச்சு. என் வலது கண் குருடுன்னு தான் சொல்லணும்.''

''அப்படியா?...இப்போ நீ என்ன செய்யப் போறே?''

''தெரியல்லே....முதல்லே கண்ணுக்குச் சிகிச்சை பண்ணிக்கணும். அப்பறம் என்ன பண்ணுவேன்னு தெரியல்லே....என்ன ஆனாலும் அம்மா சொல்றபடி சந்தீப்பைக் கலியாணம் பண்ணிக்கமாட்டேன்!''

''சந்தீப் யாரு?''

''நல்ல வேலைபார்க்குற இளைஞன்...இப்பல்லாம் என் மாதிரி பெண்களைக் கலியாணம் செஞ்சுக்கிறது ஒரு ஃபேஷன் போலே இருக்கு - தீமான் ராய் கவிதை எழுதற மாதிரி. இல்லாட்டி அவன் ஏன் என்னைக் கலியாணம் பண்ணிக்க விரும்பறான்னு புரியல்லே எனக்கு.''

''பின்னே என்ன தான் பண்ணப் போறே?''

''ஒண்ணும் புரியல்லே. எல்லாம் குழப்பமா இருக்கு எனக்கு. கடந்த சில வருஷ அனுபவத்துக்கப்பறம் நான் சாதார்ண ஒலக வாழ்க்கைக்குத் தகுதியில்லாதவளாயிட்டேன்னு தோணுது. உங்களுக்கெல்லாம் சாதாரணமாகத் தோண்றது எனக்கு இயற்கைக்கு மாறாகத்

www.tamilarangam.net



தோணுது. என்ன செய்யறது சொல்லுங்க?''

''நான் சொல்ல என்ன இருக்கு?''

''என் சிநேகிதங்க யாருமே உசிரோட இல்லே. அவங்களைப் பத்திப் பேசக்கூட எனக்கு ஒரு தோழன் அல்லது தோழி இல்லே.''

''ஒன் வீட்டிலே யாரு இருக்காங்க?''

''இது என் வீடு இல்லே, ஒறவுக்காரங்க வீடு. என் அம்மா கல்கத்தாவிலே இல்லே.''

''ஒன் ஒறவுக்காரங்களோடே....''

''அவங்களுக்கும் நான் ஒரு பிரச்னை தான்...ஒரு சமயம் நீங்க கேள்விப் படலாம்...''

''என்ன?''

நந்தினி சிரித்தாள். ஒளிமயமான சிரிப்பு. ''என்னை அவங்க மறுபடியும் பிடிச்சுக்கிட்டுப் போயிட்டாங்கன்னு...''

இனியும் சுஜாதாவால் அங்கே உட்கார்ந்திருக்க இயலாது. அந்திநேரமாகிவிட்டது. குளிர்காலத்தில் சீக்கிரமே இருட்டி விடுகிறது. அவர் வீடு திரும்ப வேண்டும். ஆனால் கால்கள் எழுந்திருக்க மறுத்தன.

''சரி, நான் புறப்படறேன்.''

''மறுபடி ஒங்களைப் பார்க்க மாட்டேன்னு தோணுது....''

''ஏன்? எங்கேயாவது போகப் போறியா?''

''இல்லே, இங்கே தான் இருப்பேன். ஆனா நாம மறுபடி சந்திச்சு என்ன பிரயோசனம்?''

நந்தினி சொல்வது உண்மை தான். சுஜாதாவின் வாழ்க்கையும் நந்தினியின் வாழ்க்கையும் இணைகோடுகள். அவை ஒன்றோடொன்று சேரும் வாய்ப்பு இல்லை.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



''நான் ஒனக்கு ஒரு சாமான் கொடுக்க விரும்பறேன்.''

''என்ன?''

''இதை வச்சுக்க''- சுஜாதா நந்தினியிடம் ப்ரதீயின் போட்டோவைக் கொடுத்தார். இவ்வளவு நாள் அது எப்போதும் அவருடைய கைப்பையில் இருந்தது.

நந்தினி போட்டோவை வாங்கிக் கொண்டு சொன்னாள், ''என் கிட்டேயும் நிறையப் படங்கள் இருந்தது. இப்போ இல்லே.''

''என்கிட்டே இன்னும் இருக்கு. இந்தப் படம் காலேஜிலே யாரோ எடுத்தது.''

''தெரியும். அநிந்தியா தான் இந்த போட்டோ எடுத்தான்.''

''வரேன் நந்தினி. நல்லா இரு. எப்பவாவது என்னாலே ஏதாவது ஆகணும்னா எனக்குத் தெரிவி.''

''சரி'' நந்தினி சிரித்துக்கொண்டு சொன்னாள்.

ஆனால் சுஜாதாவுக்குத் தெரியும், நந்தினி இனி ஒரு போதும் தம்மைச் சந்திக்க மாட்டாள் என்று; நந்தினிக்கும் அது தெரியும். இருவரும் முற்றிலும் அன்னியர்களாகிவிடுவார்கள். இருந்தாலும் சுஜாதாவின் உலகம் முன்போல் இருக்காது. ப்ரதீ அன்று அந்தி நேரத்தில் நீலச்சட்டை அணிந்து கொண்டு ஏன் வெளியே போனான், ஏன் ஆயிரத்து எண்பத்தி நான்கு ஆனான் என்பதற்கான விளக்கத்தைச் சிறுசிறு துண்டுகளாகப் பொறுக்கியிருந்தார் அவர். இந்தத் துண்டுகளை ஒன்றோடொன்று பொருத்திப் பார்ப்பதிலேயே அவருடைய மிச்ச வாழ்க்கை கழிந்து விடும்.

''ஒங்களைக் கொஞ்சம் வெளியே கொண்டு வந்துவிடறேன்....வெளியே வெளிச்சம் இல்லே.''

நந்தினி தடவித்தடவிக் கொண்டு முன்னேறினாள். அதைப் பார்த்த சுஜாதாவுக்கு அவளுடைய இரண்டு கண்களுமே கெட்டுப் போய்விட்டன என்று தோன்றியது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



''வெளியே கொஞ்ச தூரம் வரியா?''

''இல்லே, நான் வீட்டுக்கு வெளியே வரக் கூடாதுன்னு உத்தரவு, நான் வீட்டிலேயே வைக்கப்பட்டிருக்கற காவல் கைதி. அதைத் தவிர என்னாலே தனியா நடமாட முடியாது.''

''அப்படீன்னா வேண்டாம்.''

சுஜாதா நந்தினியின் நெற்றியை, முகத்தைக் கையால் தடவிக் கொடுத்தார். அவளை இழுத்துத் தன் மார்போடு அணைத்துக் கொள்ளத் தீவிர விருப்பம் ஏற்பட்டது அவருக்கு. ப்ரதீயை இறுகக் கட்டி அணைத்துக்கொள்ளாத குறையை இப்படித் தீர்த்துக்கொள்ள ஓர் இயல்பான, துடிப்புமிக்க ஏக்கம். இந்த விருப்பத்தைத் தான் சமூவின் அம்மா மயானத்தில் வெளியிட்டு அலறினாள்- ''அவனை என் நெஞ்சுகிட்டே கொண்டு வா! நான் அவனை அணைச்சுக்கிட்டேன்னா அப்பறம் அளமாட்டேன்!.....''

நந்தினி சொன்னாள், ''ஒரு நாள் நானும் ப்ரதீயும் நடந்துக்கிட்டே ஒங்க வீட்டு வரையிலே வந்தோம். ஒரு நாள் என்னை ஒங்களுக்கு அறிமுகப்படுத்திவைக்கறேன்னு ப்ரதீ சொன்னான். ரொம்ப நாளைக்கு முந்தி நடந்த நிகழ்ச்சி....''

சுஜாதா தலையசைத்தார். ரொம்ப நாள் முன்னால் அல்ல, நந்தினி, நாலு வருஷம் முன்னாலே தான்.... ஆனா ஒருவித்திலே ரொம்பநாள்னு தான் சொல்லணும். ஒரு நாளின் இறுதியில், மாலையில் அம்மாவைப் பார்க்க இயல்பாகப் போகும் காலம் மறைந்துபோய்ப் பல ஒளி வருடங்கள் ஆகிவிட்டன.

''சரி, நான் வரேன்!''

நந்தினி ஒன்றும் பேசவில்லை. அவள் பின்பக்கம் திரும்பிச் சுவர் மேலே கையை வைத்தாள். பிறகு மெதுவாக உள்ளே நடந்து போனாள். அவளது ஒவ்வொரு காலடியும் அவளை சுஜாதாவிடமிருந்து வெகு தொலைவுக்குக் கொண்டு சென்றது.

ரஸ்தாவில் நடக்கத் தொடங்கினார் சுஜாதா........

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# முன்னிரவு

குளிர் கால மாதலால் முன்னதாகவே இருட்டிவிட்டது. வெளியே நல்ல இருட்டாயிருந்ததால் சுஜாதாவின் வீட்டு விளக்குகள் இன்னும் பிரகாசமாக ஒளிர்ந்தன. கடந்த சில நாட்களாக சுஜாதா வங்கியிலிருந்து வந்ததும் தினம் சிறிது, சிறிதாக ஜன்னல் கண்ணாடிகளை ஈரத் துணியால் துடைத்துக் கொண்டுவந்திருக்கிறார். ஆகையால் விளக்கு வெளிச்சம் இன்னும் பிரகாசமாகத் தெரிகிறது. சில நாட்களுக்கு முன் மழை பெய்திருந்தது. நேற்றுக் கூடச் சிறிது மழை பெய்தது. அதனால் சில பூச்சிகள் இந்தக் குளிரிலும் வெளியிலிருந்து ஜன்னல் கண்ணாடிகளில் மோதுகின்றன, வெளிச்சத்தைச் சுற்றிப் பறக்கின்றன. இதெல்லாம் இயற்கையான நிகழ்ச்சிகள் தாம். ஆனால் இத்தகைய சாதாரண நிகழ்ச்சிகள் கூட நந்தினிக்கு எப்போதும் இயற்கைக்கு மாறானவையாகத் தோன்றிக் கொண்டிருக்கும்.

நந்தினி ஒரு சால்வையைப் போர்த்திக் கொண்டிருந்தாள். ப்ரதீக்குக் குளிர்காலத்தில் ஒரு பழைய, கிழிந்த சால்வையைப் போர்த்திக் கொள்ளப் பிடிக்கும்.

திவ்யநாத் சுஜாதாவுக்காகக் கவலைப் பட்டுக்கொண்டு வெகு நேரமாக உள்ளுக்கும் வாசலுக்குமாக நடந்து கொண்டிருந்திருப்பார் போலும். சுஜாதாவைப் பார்த்ததும் அவர் கடந்த இரண்டு ஆண்டுகளாகப் பயிற்சி செய்திருந்த நிதானத்தைக் கைவிட்டுப் பழைய திவ்யநாத் போல உரக்கக் கத்தினார், ''இப்பவாவது வீட்டுக்குத் திரும்பணும்னு தோணித்தே, ரொம்ப நல்லாயிருக்கு!''

சுஜாதா பதில் பேசவில்லை. ப்ரதீ எப்போது திவ்யநாத்தையும் அவருடைய டைபிஸ்ட் காதலியையும் ஒன்றாகப் பார்த்தான் என்று மனதில் கணக்குப் போட்டுப் பார்த்துக்கொண்டார். அன்று முதல் ப்ரதீ தன் ஸ்காலர்ஷிப்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பணத்தை வீட்டுக்குக் கொடுக்கத் தொடங்கிவிட்டான்.

தமக்காகத் தான் ப்ரதீ வீட்டை விட்டு வெளியேற வில்லை என்று இப்போது புரிந்தது சுஜாதாவுக்கு.

'ப்ரதீ, நீ ஏன் என்னிடம் எதுவும் சொல்ல வில்லை? என் மேல் உன் பரிவு வேறுவிதமாக மாறிவிட்டதா?'

சுஜாதா வராந்தாவைக் கடந்து டிராயிங் ரூமில் நுழைந்தார். அங்கே கண்ணாடிச் சாடிகளில் மலர்கள், எங்கும் பிரகாசமான வெளிச்சம். இரத்தச் சிவப்பு ரோஜாக்கள். சிவப்பு ரோஜாக்களில் நம்பிக்கை வைத்திருந்தவர்கள் எப்போதோ தங்கள் நம்பிக்கையைக் கைவிட்டுவிட்டார்கள். ஆனாலும் இந்தப் பூக்களின் சிவப்பு ஒரு மோசடிதான், காட்டிக்கொடுத்தல் தான். இந்தப்பூக்களும் நந்தினியையும் ப்ரதீயையும் மோசம் செய்கின்றன.

சுஜாதா தலையை ஆட்டிக்கொண்டார்.

பெரிய மேஜை கீழ்ப்புறத்து வராந்தாவில் போடப்பட்டிருந்தது. ப்ரதீ பள்ளியில் படித்துக் கொண்டிருந்த போது மழைகாலத்தில் இந்த மேஜையில் டேபிள் டென்னிஸ் விளையாடியிருக்கிறான் தன் தோழர்களுடன். ஒரு தடவை இந்த வராந்தாவில் ப்ரதீயும் அவன் நண்பர்களும் ரவீந்திர ஜயந்தி கொண்டாடியிருக்கிறார்கள். ப்ரதீயின் தோழன் பாப்லு படுசுட்டி. அந்தச் சிறுவயசிலேயே அவன் எழுதினான்- ''ரவீந்திரர் ரொம்ப ஏழை. அதனால் அவர் எட்டாங்கிளாசிலேயே படிப்பை விட்டுவிட்டுப் பாட்டு எழுதிப் பணம் சம்பாதித்தார்'' என்று! ப்ரதீ ரவீந்திரரின் 'வீரபுருஷ்' கவிதையை ஒப்பித்தான்...

அதற்குப் பிறகு பல ஒளிவருடங்கள் கழிந்துவிட்டன!...

மேஜையின் மேல் பளிச்சென்று வெள்ளை விரிப்பு.

ஒரு சமயம் ப்ரதீயின் ஷூ மோதியதில் மேஜையின் ஒரு கால் சிறிது பழுதாகிவிட்டது...

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



'விருந்துக்குத் தயாராக ஸ்பூன், முள், கிண்ணம், ஒயின் கோப்பை, தண்ணீர், தட்டு, கண்ணாடி டம்ளர், துடைத்துக்கொள்ளத் துணி எல்லாம் மேஜையின் மேல் அழகாக வைக்கப்பட்டிருந்தன. இவற்றில் எதிலும் ப்ரதீ இல்லை. ப்ரதீ பிறந்து வளர்ந்த இந்த வீட்டில் அவனை இப்போது தேடிக் கண்டுபிடிப்பது கடினம்.

மேஜையின் மேல் கருப்புப் பின்புலத்தில் சிவப்பு நிறத்திலும் தங்கநிறத்திலும் செர்ரிமலர்கள் தீட்டப்பட்ட கோப்பைகள் இருப்பதைக் கவனித்தார் சுஜாதா. அவை நீபாவின் கோப்பைகள். அப்படியானால் நீபாவும் வந்திருக்கிறாள்.

அவர் சாப்பாட்டு அறைக்குள் நுழைந்தார். அங்கே அட்டைப் பெட்டிகளில் சந்தேஷ், ரசகுல்லா, தயிர்ச்சட்டிகள். அட்டைப் பெட்டிகளில் 'வால்டார்ப்', 'சாபிர்' என்று தின்பண்டக் கடைகளின் பெயர்கள் அச்சிடப்பட்டிருந்தன. பக்கத்து மேஜைமேல் சாஸ், வினிகர், சாலட், கடுகு, உப்பு, மிளகுப்பொடிக் கிண்ணங்கள். வினி கண்ணாடிக் கிண்ணத்தில் வினிகரில் பச்சை மிளகாய்த் துண்டுகளை ஊறவைத்திருந்தாள்.

''ஹேம்!''

ஹேம் ஓடிவந்தாள்.

''ஒரு டம்ளர் எலுமிச்சம் பழ சர்பத் கொண்டுவா.''

ஹேம் வெளியே போனாள். திவ்யநாத் உள்ளே நுழைந்தார்.

நடு வயதைக்கடந்த, சிற்றின்ப ஈடுபாடு கொண்ட, சதைப்பற்று வாய்ந்த தோற்றம். இப்போதுதான் முதல் தடவையாக சுஜாதாவுக்குத் தோன்றியது - கழுத்து வரை தொங்கும் முடியும் ஸ்நோ தடவப்பட்ட முகமும் பார்க்க அருவருப்பாயிருக்கிறதென்று. இவர் ஏன் கைவேலைப்பாடுகள் மிக்க ஜிப்பாவும் கரை போட்ட சால்வையும் அணியவேண்டும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



என்று தோன்றியது. திவ்யநாத் அன்றைக்காகவே புதிய ஷூ வாங்கியிருந்தார், அவர் அணிந்திருந்த பனியனும் விலையுயர்ந்தது.

''நீ என்ன தான் நினைச்சுக்கிட்டிருக்கே?... இன்னிக்குக் குறைஞ்சது ஐம்பது விருந்தாளிங்க வருவாங்க, தெரியுமா?''

''தெரியும்.''

''அப்படீன்னா?''

''எல்லா ஏற்பாடும் செஞ்சிருந்தோம். நீபாவும் வந்துட்டா. நீங்களும் வீட்டிலே தான் இருந்தீங்க. அனாவசியாமாப் பேசாதீங்க!''

''அனாவசியமாப் பேசறேனா? நீ என்ன நினைச்சுக்கிட்டிருக்கே?''

''நீங்க இப்பவே இங்கேயிருந்து போயிடுங்க. இல்லாட்டி... நான் இந்த வீட்டிலேருந்து வெளியேறிடுவேன்..... திரும்பிவர மாட்டேன்!'' நிறுத்தி நிறுத்தி அழுத்தமாகப் பேசினார் சுஜாதா. நினைக்க நினைக்க அருவருப்பாயிருந்தது அவருக்கு.... திவ்யநாத்தும் அந்த டைபிஸ்ட் பெண்ணும்... திவ்யநாத்தும் சுஜாதாவின் தூரத்து உறவு நாத்தியும்..... திவ்யநாத்தும் அவருடைய இன்னொரு உறவுக்காரியும்....

கன்னத்தில் அறைவிழுந்தாற் போலிருந்தது திவ்யநாத்துக்கு. அவரது முப்பத்து நான்கு ஆண்டுக்கால இல்லற வாழ்க்கையில் சுஜாதா ஒரு நாளும் அவரிடம் இப்படிப் பேசியதில்லை.

''நீ நாள் பூரா எங்கேயிருந்தேன்னு கூட நான் கேட்கக் கூடாதா?''

''கூடாது.''

''என்ன!''

''நீங்க முப்பத்திரண்டு வருஷமா எங்கே முன்னிரவு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நேரத்தைக் கழிக்கறீங்க, பத்து வருஷமா யாரோடே டூர் போறீங்க, அந்த முன்னாள் டைபிஸ்ட் குடியிருக்கற வீட்டுக்கு நீங்க ஏன் வாடகை கொடுக்கறீங்க, இதையெல்லாம் நான் ஒரு நாளும் ஒங்களைக் கேட்டதில்லே. நீங்களும் என்னை ஒண்ணும் கேக்கக் கூடாது!''

''அடே!''

''சின்ன வயசிலே எனக்கு ஒண்ணும் புரியல்லே. பின்னாலே ஒங்க அம்மா ஒங்களோட ஒவ்வொரு பாவச்செயலையும் மூடிமூடி மறைச்சபோது ஒங்களை அதைப்பத்திக் கேக்கவே பிடிக்கல்லே எனக்கு. அதுக்கப்பறம் இந்த விஷயத்திலே அக்கறையில்லாமே போச்சு. நீங்க குடும்பத்துக்குத் தெரியாமே பொழுது கழிக்கற மாதிரி நான் செய்யல்லே....இன்னும் கேக்கணுமா?''

''நீ இன்னிக்கு.....''

''ஆமா...அப்படித்தான்....போங்க!''

''சரி, போறேன்.''

''போங்க!'' - சுஜாதாவின் குரல் கட்டளையாக ஒலித்தது. கழுத்தைத் தடவிக்கொண்டே வெளியேறினார் திவ்யநாத்.

இனிமேல் சுஜாதா இந்த வீட்டில் - ப்ரதீ இல்லாத வீட்டில் - இருக்கப்போவதில்லை. ப்ரதீ உயிரோடிருந்த போது அவர் ஒரு நாளாவது இந்த மாதிரி தைரியமாகப் பேசியிருந்தால்! பேசிவிட்டு ப்ரதீயைக் கூட்டிக் கொண்டு வீட்டைவிட்டு வெளியேறியிருந்தால்! அப்படியும் ப்ரதீயை அவனுடைய கிளர்ச்சி வழியிலிருந்து திரும்பமுடியாமல் போயிருக்கலாம். இருந்தாலும் அவரால் அவனுடன் இன்னும் நெருங்கிவந்திருக்க முடிந்திருக்குமே! தன் தாய் எப்படிப்பட்டவள் என்று ப்ரதீ தெரிந்து கொண்டிருப்பானே! இதைத் தெரிந்து கொள்ளாமலே போய்விட்டானே அவன்!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஹேம் சர்பத் கொண்டு வந்து கொடுத்தாள். சுஜாதா அதை ஒரே மடக்கில் குடித்துவிட்டார். பிறகு சொன்னார், ''ஹேம், எனக்கு வெந்நீர் வேணும். குளிக்கப் போறேன்.....நீ மேலே வெந்நீர் எடுத்துக்கிட்டு வரவேண்டாம். நாத்து இருக்கானோல்லியோ?''

''நாத்து ஐஸ் வாங்க வெளியே போயிருக்கான்.''

''ஏன், ஃப்ரிட்ஜிலே ஐஸ் உறையல்லியா?''

''இல்லே...மெசின் கெட்டுப் போச்சு. மெக்கானிக் வந்து பார்த்துட்டுப் போயிருக்கான். ரிப்பேர் பண்ண அறுவது ரூவா ஆகுமாம். அதுவும் உடனே ரிப்பேர் பண்ண முடியாதாம்.''

''அப்போ தண்ணி வேண்டாம்....''

''அப்பறம் குளிச்சுக்கங்க...''

''சரி.''

''நாள் பூரா ஏதாவது சாப்பிட்டீங்களா?''

''இல்லே...சாப்பிடத் தோணல்லே.''

''இப்ப மேலே போறீங்களா?''

''ஆமா.''

''ஏதாவது சாப்பிடறீங்களா?''

''வேண்டாம்....நீபா எப்போ வந்தா?''

''காலையிலே...இங்கே தான் சாப்பிட்டா.''

''அவ பொண்ணைக் கூட்டிக்கிட்டு வந்திருக்காளா?''

''இல்லே....பொண்ணோட ஸ்கூல்லே ஏதோ விழாவாம்.''

''வீட்டை அலங்காரம் பண்ணினது யாரு?''

''ஒங்க மருமகதான்.''

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



''கப், தட்டு எல்லாத்தையும் எடுத்து வச்சது யாரு?''

''சின்னம்மா...நீங்க காலையிலே வெளியே போனப்பறம் சின்னம்மா வந்து என்னைத் திட்டினா. நான் வேலை ஒண்ணும் செய்யறதில்லையாம், சும்மா ஒக்காந்துக்கிட்டுச் சாப்பிடறேனாம், சின்ன அய்யா பேரைச் சொல்லிச் சொல்லி ஒங்க மனசை எளக்கி எனக்கு வேண்டியதையெல்லாம் சாதிச்சுக்கறேனாம்...''

''ஏன் திட்டினா?''

''வெந்நீர் ரொம்ப கொதிச்சுப் போச்சு. நான் சரியானபடி கவனிக்கல்லியாம்... அப்பறம் எதையோ அரைக்கச் சொல்லியிருந்தா...மொகத்துக்குத் தடவிக்கணுமாம்...நான் மறந்து போயிட்டேன்.''

''அப்பறம்?''

''அப்பறம் வீட்டைத் தொடைச்சு சுத்தம் பண்ண ஆரம்பிச்சா. அப்போ ஒங்கமருமக 'நான் தான் இருக்கேனே, நீ என் கிட்டே இந்தப் பொறுப்பைக்கொடுத்துட்டுச் சும்மா இருக்கக் கூடாதா?'ன்னு கேட்டா. ஒடனே ரெண்டு பேருக்கும் சண்டை. இங்கிலீசிலே ஏதோ பேசிக்கிட்டாங்க...''

''நீ ஏன் அதையெல்லாம் கேட்டுக்கிட்டிருந்தே?''

''நான் கேக்கப் போனேனா? நல்லாயிருக்கே நீங்க சொல்றது! அவங்க போட்ட சத்தம் தெருவிலே கூடக் கேட்டிருக்கும்.''

''அப்பறம்?''

''அப்பறம் சின்னம்மா போய்ப் பெரியம்மாவுக்கு போன் பண்ணினா. பெரியம்மா வந்து ஒங்க மருமகளை சமாதானம் பண்ணினா. அப்பறம் ஒங்க மருமக எல்லா வேலையையும் செஞ்சு முடிச்சா. அதுக்கப்பறம் மூணுபேரும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பேசிக்கிட்டே சாப்பிட்டாங்க. ரொம்ப சாதாரணமாப் பேசிக்கிட்டிருந்தாங்க. அப்பறம் மூணு பேருமா முடியலங்காரம் பண்ணிக்க எங்கேயோ போயிட்டு சந்தோசமாத் திரும்பி வந்தாங்க...''

''தூலியோட சிநேகிதி தலை பின்னிவிட வரல்லியா?''

''இல்லே.''

''சரி, நீ போ.''

ஹேம் போய்விட்டாள். சுஜாதா அறையிலிருந்து வெளியே வந்தார். கிராதியைப் பிடித்துக் கொண்டு மெதுவாக மாடியேறினார். உடம்பில் வலி. ப்ரதீ பிறப்பதற்கு முதல் நாளும் இப்படித்தான் மிகவும் வலித்தது...மற்ற குழந்தைகள் பிறந்த போது நடந்த நிகழ்ச்சிகள் நினைவுக்கு வராமல் ப்ரதீ பற்றிய நிகழ்ச்சிகள் மட்டும் ஞாபகம் வருவது ஏன்? ப்ரதீ அவருடைய உள்ளத்தில் ஒரு பொறுக்க வொண்ணா வேதனையாக வாழ்ந்து கொண்டிருப்பதாலா? மாடிப்படியில் இந்த இடத்தில் அன்று ப்ரதீ....

அடிவயிற்றில் வலி.....

தூலியின் கலியாணத்துக்குப் பிறகு அறுவை சிகிச்சை செய்து கொள்ள எண்ணியிருந்தார் அவர். ஆனால் அதற்கு முன்னேயே செய்து கொள்ள வேண்டும் போலிருக்கிறது. எப்படியாவது இன்றைப் பொழுதை நல்லவிதமாகக் கழித்துவிட்டால் போதும். நாளைக்கு என்ன செய்வது என்பதை நாளை பார்த்துக் கொள்ளலாம்.

இன்றைக்குக் கலியாண நிச்சய விழாவை வைத்துக் கொள்வதில் அவருக்குச் சிறிதும் இஷ்டமில்லை. ஆனால் அவருடைய விருப்பத்தை யார் கேட்கிறார்கள்! டோனி தபாடியாவின் அம்மாவின் குருசாமியார் அமெரிக்காவில் இருக்கிறார். அவர் தாம் இந்தத் தேதியை முடிவு செய்தார். டோனி தன் தாயின் விருப்பத்தை மீற மாட்டான். காரணம் அவளுடைய பணத்தை வைத்துக் கொண்டுதான்

www.tamilarangam.net



அவனுடைய தொழில் நடைபெறுகிறது.

தம்மைப் போலவே டோனியும் அம்மா பக்தனாயிருப்பதில் திவ்யநாத்துக்கு மிகவும் மகிழ்ச்சி. டோனியின் இந்தக் குணம் ஓர் உபரித் தகுதிதான். அம்மா பக்தனில்லா விட்டாலும் டோனி நல்ல வரன்தான். டோனியின் உதவியால்தான் அவருக்கு ஷா- பென்சன் கம்பெனியின் தணிக்கை வாய்ப்புக் கிடைத்தது.

மேலும் தூலியின் காதலன் என்பதால் திவ்யநாத்துக்கு டோனியிடம் அலாதிப் பிரியம். ஏனென்றால் தூலிதான் அவருக்கு மிகவும் செல்லம். திவ்யநாத்தின் அம்மாவை அப்படி உரித்து வைத்திருக்கிறது தூலியின் தோற்றத்தில்.

திவ்யநாத்- டைபிஸ்ட் பெண் காதல் விவகாரம் தூலிக்குத் தான் முதன் முதலாகத் தெரிய வந்தது. ஆனால் அவள் இது பற்றி யாரிடமும் சொல்லவில்லை. இதற்காகத் தன் தந்தையை வெறுக்கவுமில்லை. மாறாக- இந்த விஷயம் சுஜாதாவுக்கு மிகவும் கோபமூட்டியது- அவள் அந்தப் பெண் தரும் செய்தியைத் தந்தைக்குத் தெரிவிக்கத் தொடங்கிவிட்டாள்! தூலி போனை எடுத்தால் அவளிடம் செய்தி சொல்லலாம், மற்றவர்களிடம் சொல்ல வேண்டாம் என்று திவ்யநாத்தே தம் காதலியிடம் சொல்லி வைத்திருக்க வேண்டும்.

இவ்வாறு தந்தைக்கு சேவை செய்வதன் மூலம் தூலிக்கு அவர்மேல் உரிமை ஏற்பட்டுவிட்டது. திவ்யநாத் வாரத்தில் மூன்று நாட்கள்- திங்கள், புதன், வெள்ளி- மாலையில் தம் காதலியைச் சந்திக்கப் போவார். அவர் புறப்படுவதற்கு முன் அவரது உடையலங்காரத்தைத் தூலி தான் பார்வையிடுவாள். அவர் திரும்பிவந்ததும் அவள் தான் அவருக்கு சூப்பும் சிக்கன் சாலடும் எடுத்துக் கொண்டு மாடிக்கு வருவாள். இதில் அவளுக்கு ஒரு விசேஷ கர்வம், திருப்தி- அவளுடைய பாட்டிக்கு இருந்த மாதிரி. தன் தந்தைதான் சரியான ஆண்பிள்ளை, கலியாணம் செய்து கொண்டால், இந்த மாதிரி ஆண் பிள்ளையைத்தான் கல்யாணம் செய்து கொள்ள வேண்டும் என்று சொல்வாள் அவள்.

www.tamilarangam.net



பெண்டாட்டியின் சேலைத்தலைப்பைப் பிடித்துக் கொண்டு அலைகிற பயங்கொள்ளி என்று தன் அண்ணனை ஏசுவாள்.

திவ்யநாத்தின் காதல் விவகாரம் ஜோதியின் மாமனார் வீட்டார் மூலம் அவனுக்குத் தெரியவந்த போது தூலிதான் அவனிடம் சொன்னாள், ''பிறத்தியாரைக் குத்தம் சொல்றது சுலபந்தான் அண்ணா. ஆனால் இந்த மாதிரி வடிகால் தேடறவங்களோட வாழ்க்கையிலே ஏதாவதொரு துக்கம் நிச்சயம் இருக்கும். அப்பாவோட வாழ்க்கையிலேயும் இருக்குன்னு தான் தெரியுமே!...நம்ம தாத்தா ஒரு போதும் மாலை நேரத்தை வீட்டிலே கழிச்சதில்லேன்னு பாட்டி சொல்லியிருக்காளே! அதனாலே தாத்தா மட்டமாயிடுவாரா?''

ப்ரதீ ஒன்றும் சொல்லவில்லை. தூலி இருந்தால் அவன் அவளோடு மேஜையில் அமர்ந்து சாப்பிடமாட்டான். அவளோடு பேசவும் மாட்டான். ப்ரதீக்கு எல்லாம் தெரிந்திருந்தது என்று இப்போது புரிகிறது. இந்த விஷயத்தால் மிகவும் பாதிக்கப்பட்ட சுஜாதாவே பேசாமலிருக்கும் போது தான் இது பற்றிப் பேச்சை எடுக்கக்கூடாது என்று அவன் நினைத்திருக்கலாம். ஆனால் சுஜாதாவிடமும் அவனுக்கு ஈடுபாடு குறைந்திருக்க வேண்டும்; இல்லாவிட்டால் அவன் வீட்டை விட்டு வெளியேற ஏன் விரும்பினான்? தாம் ஏன் மௌனமாக எல்லாவற்றையும் பொறுத்துக்கொண்டிருந்தார் என்பதை அவர் ஒரு நாளும் ப்ரதீக்குத் தெரிவிக்க இயலாது. ப்ரதீ வளர்ந்து பெரியவனாகட்டும், படிப்பை முடிக்கட்டும், அதன் பிறகு அவனோடு தாமும் வெளியேறிவிடலாம் என்று அவர் நினைத்திருந்ததை அறியாமலேயே ப்ரதீ போய்விட்டான். இதை அறிந்திருந்தால் அவன் தன் வழியை மாற்றிக் கொண்டிருப்பானா? மாட்டான். மாட்டான் என்று சுஜாதாவுக்குத் தெரிந்திருந்ததால்தான் அவன் அவருடைய நேசத்துக்குரியவனாயிருந்தான். சிறு வயதிலிருந்தே ப்ரதீக்குத் தன் தாயின் வேதனை ஓரளவு புரிந்திருந்தது. அதனால் தான் அவன் அவரிடம் அடிக்கடி, ''அம்மா, நான்

www.tamilarangam.net



பெரியவனானப்பறம் ஒன்னை ஒரு கண்ணாடி வீட்டிலே கொண்டு போய் வச்சுப்பேன். அங்கேயிருந்து நீ எல்லாரையும் பார்க்கலாம், ஆனா யாரும் ஒன்னைப் பார்க்க முடியாது'' என்று சொல்லுவான்.

ப்ரதீ பத்தாம் வகுப்பில் படிக்கும் போது அவனை 'எனக்கு மிகவும் பிரியமான மனிதர்' என்ற தலைப்பில் ஒரு கட்டுரை எழுதச் சொன்ன போது 'என் அம்மா' என்ற தலைப்பில் கட்டுரை எழுதினான். உடம்பில் வெட்டுப்பட்டு இரத்தம் வந்தால் பயந்துவிடுவான் அவன், ஆனால் பல்லைக் கடித்துக்கொண்டு வலியைப் பொறுத்துக் கொள்வான்.

சுஜாதா கண்களை மூடிக்கொண்டு கற்பனையில் ப்ரதீயின் முகத்தை, மூக்கின் சரிவை, புருவத்தழும்பைத் தடவிப்பார்த்தார். அவன் முகத்தில் காயம் படாத இடம் ஒன்று கூட இல்லை. அவனைக் கொன்றவர்களின் நோக்கம் சும்மா கொல்வது அல்ல, பிசாசுத்தனமான வெறியில் எவ்வளவு நேரம் முடியுமோ அவ்வளவு நேரம் சாவைத் தாமதப்படுத்துவது, அப்படிச் செய்வதன் மூலம் செத்துக்கொண்டிருப்பவனின் வேதனைத் துடிதுடிப்பைப் பார்த்து மகிழ்வது. இது அவர்களுடைய கொலைத் திட்டத்தின் முக்கியமான பகுதி.

தாங்கள் தண்டனைக் குள்ளாகாதபடி கொலை செய்வதில் கைதேர்ந்தவர்கள் அந்தக் கொலைகாரர்கள். இதைவிட பயங்கர நிலைமை வேறெந்த சமூகத்திலாவது இருக்குமா? இளைஞர்களைக் கொல்ல ஏற்பாடு செய்தவர்களை யாரும் ஏன் காட்டிக்கொடுக்கவில்லை? அவர்கள் ஏன் எவ்வித ஆபத்துமின்றி நடமாடுகிறார்கள்? ஏன் இது ஒரு புதிராக இருக்கிறது?

இப்போதும் அந்தப் பிசாசுகள் செயற்பட்டுக் கொண்டிருக்கிறார்களா? எதுவும் அமைதியாக இல்லை என்று நந்தினி சொல்கிறாளே! அவர்கள் கிளர்ச்சிக்கார இளைஞர்களுக்குப் பலவிதமாக ஆசைகாட்டுகிறார்கள், அது பலிக்க வில்லையென்றால் சித்திரவதை செய்கிறார்கள் - நகத்துக்கும் தசைக்குமிடையே ஊசியை நுழைக்கிறார்கள்,

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கண்ணுக்கு முன்னால் ஆயிரம் வாட் பல்பு எரியவிடுகிறார்கள், உடம்பின் இரகசிய உறுப்புகளில் அருவருக்கத்தக்க முறையில் கொடுமை இழைக்கிறார்கள் – இவ்வளவு செய்தும் ப்ரதீ போன்றவர்கள் சரணடைவதில்லை, உறுதியாக எதிர்த்து நிற்கிறார்கள் என்று கேள்விப்படுகிறார் சுஜாதா. பிறகு அவர்கள் சிறைக்காவலிலிருந்து போலீஸ் காவலுக்கு மாற்றப்படுகிறார்கள். பிறகு ஃபைல் மூடிவைக்கப்படுகிறது. எல்லாம் முடிந்து போய்விடுகிறது.....

அஜேய் தத்தாவின் தாய் ஒரு சமயம் சுஜாதாவிடம் தெரிவித்தாள், ஹாபூல் தத்தாவின் ஃபைலையும் மூடிவிடப் போவதாகப் போலீஸ் சொன்னதாக. ஹாபூல் என்பது அஜேய் வைத்துக்கொண்ட மாறு பெயர்.

சஞ்சீவனின் அக்கா போலீசிடம் போய்த் தன் தம்பியின் போட்டோவைக் கேட்டாளாம், அவளுடைய அம்மாவுக்குக்காட்ட. போலீசில் சொன்னார்களாம் - ''ஒரு ரீல்லே எழுபத்திரண்டு போட்டோ எடுக்கலாம். ஒங்க தம்பி நம்பர் முப்பது தான். இன்னும் ஒரு மாதங்கழிச்சு வாங்க. அதுக்குள்ளே ரீல் கம்ப்ளீட் ஆயிடும். அப்பறம் பிரிண்ட் போட்டு போட்டோ கொடுக்கறோம்.''

கிராதியைப் பிடித்துக்கொண்டு மேலே ஏறினார் சுஜாதா. சிறுவயதில் ப்ரதீ இந்தக் கிராதியின் மேல் உட்கார்ந்து கொண்டு மேலேயிருந்து சறுக்கிக் கொண்டு வருவான். ஹேம் அவனுக்காக டம்ளரில் பால் எடுத்துக்கொண்டு மாடியில் ஏறுவாள். அதற்குள் ப்ரதீ சறுக்கிக்கொண்டு கீழே வந்துவிடுவான். பிறகு மறுபடிமேலே ஏறிக் கீழே வருவான். பெரியவனான பிறகு அவன் எவ்வளவு தடவை இந்தக் கிராதியைப் பிடித்துக் கொண்டு இறங்கியிருப்பான்!

ஆனால் இப்போது இந்த வீட்டில் எங்குமே அவன் இல்லை. வேறு இடங்களில் - நடைபாதையில் – சிவப்பு ரோஜாவில் - தோரணத்தில் - தெருவிளக்கு வெளிச்சத்தில், மனிதர்களின் சிரிப்பில், சமூவின் அம்மாவின் பேச்சில்,

www.tamilarangam.net



நந்தினியின் கண்களுக்குக் கீழே நிலையாகப் படிந்து விட்ட கருமையில் - ப்ரதீயைத் தேடிக்கொண்டு எங்கெங்கு அலைவார் சுஜாதா? அவரது உடல் நிலை அதற்கு இடங் கொடுக்கவில்லையே! ப்ரதீ பரவியிருக்கும் இடங்களிலெல்லாம் அவனைத் தேடித் தேடி....

அவர் தூலியின் அறைக்குள் நுழைந்தார்.

தூலியும் நீபாவும் ஒரே மாதிரி சேலை அணிந்திருந்தார்கள் - கருநீலநிறப் பெனாரஸ் பட்டு. அதற்குமேல் ஒரு அலங்காரக் கோட்டு. திவ்யநாத் இன்றைய விழாவுக்காக இந்த சேலையும் கோட்டும் தம் இரண்டு பெண்களுக்கும் மருமகளுக்கும் பரிசளித்திருந்தார். அவற்றின் விலை தொள்ளாயிரம் ரூபாய்க்கு மேல்.

தொள்ளாயிரம் ரூபாய் இருந்தால் சமூவின் அம்மாவின் எவ்வளவோ தேவைகள் தீர்க்கப்பட்டு விடும்.

பெண்களிருவரும் சுஜாதாவைத் திரும்பிப் பார்த்தார்கள். அவர்கள் மூவரின் உருவங்களும் கண்ணாடியில் தெரிந்தன. சுஜாதா தம் மடிப்புகள் விழுந்த சேலை, சோர்ந்த முகம், பாதி நரைத்த கலைந்த முடி இவற்றைக் கண்ணாடியில் பார்த்தார்.

பெண்களிருவரும் மிக அழகாக ஒப்பனை செய்து கொண்டிருந்தார்கள். ஆனால் ஒப்பனையிலும் அவர்களது எரிச்சல், அதிருப்தி மறைந்துவிடவில்லை.

சுஜாதா தம் கைப்பையைத் திறந்து அதிலிருந்து நகைகளை எடுத்துக் கட்டிலில் போட்டார். பிறகு அவற்றிலிருந்து சில நகைகளை எடுத்து மீண்டும் கைப்பையில் வைத்துக்கொண்டார். அதன் பின் கட்டிலிலிருந்த நகைகளைச் சுட்டிக்காட்டித் தூலியிடம், ''இந்தா உன் நகைகள்'' என்றார்.

''அதையெல்லாம் ஏன் எடுத்துப் பையிலே வச்சுக்கிட்டே?'' தூலி கேட்டாள்.

www.tamilarangam.net



''நீபாவுக்கும் வினிக்கும் கொடுத்த அளவு நகை ஒனக்கும் கொடுத்திருக்கேன்.''

''பார்த்தியா அக்கா!....நான் ஒங்கிட்டே சொன்னேனில்லே?'' தூலி நீபாவிடம் சொன்னாள்.

''அம்மா, அதையும் தூலிக்கே கொடுத்துடு. நான் அதிலே பங்கு கேக்கமாட்டேன் - நிசமா!'' நீபா சொன்னாள் பெருந்தன்மை தொனிக்கும் குரலில்.

''நீ கேக்கறதுக்கு என்ன இருக்கு?''

''நீ வினிக்குக் கூடத்தான் கொடுத்திருக்கே.''

''ஆமா. ப்ரதீ இருந்தால் அவனோட மனைவிக்குந்தான் கொடுத்திருப்பேன்....ஒரு நகை சுமனுக்கும், ஒண்ணு ஓம் பொண்ணுக்கும் தரேன்.''

''மிச்ச நகையை என்ன செய்யப்போறே?''

''அது என்னிஷ்டம்!''

கோபம் கொப்புளிக்கச் சீறினாள் தூலி, ''பழைய நகைகளெல்லாம் எனக்கு எவ்வளவு பிடிக்கும்னு ஒனக்குத் தெரியும்! டோனி அந்த மாடல்லே நகைகள் பண்ணி ஏற்றுமதி பண்ணலாம்....இதெல்லாம் ஒனக்குத் தெரியும்!....''

''ஆமா, நீ சொல்லியிருக்கே, நானும் கேட்டுக்கிட்டேன்..... இப்போ என் எண்ணத்தை மாத்திக்கிட்டேன்.''

''ஏன்?''

''சும்மாத்தான்...ஓம் பாட்டி, அப்பா தந்த நகையையெல்லாம் ஒங்களுக்குக் கொடுத்தாச்சு. இந்த நகையெல்லாம் என் அப்பா கொடுத்தது, என் கிட்டேயே இருக்கட்டும்.''

''ஆகா என்ன புத்திசாலித்தனமான முடிவு!''

www.tamilarangam.net



''இதுகளை நான் வேறே சில பேருக்குக் கொடுக்கப் போறேன்.''

''அப்படீன்னா இந்த நகைகளையும் கொடுக்க வேண்டாமே எனக்கு!''

''அநாவசியமாக் கத்தாதே, தூலி! இஷ்டமிருந்தா வச்சுக்க, இல்லாட்டித் தூக்கியெறி...காலம்பறவே நிறையக் கத்திட்டே. நான் ஒன்னோடே அதிகம் பேசத் தயாரில்லே.''

''யார் சொன்னாங்க ஒனக்கு, ஹேமா?''

''ஆமா....நீ இந்த வீட்டிலே இருக்கறவரையிலே ஹேமை ஒண்ணும் சொல்லக்கூடாது! அவளுக்குச் சம்பளம் நான் கொடுக்கறேன், ஒங்க அப்பா இல்லே. ஹேம் தான் ப்ரதீயை வளர்த்து ஆளாக்கினவ, நீ இஷ்டப்பட்டா அவளோடே நல்ல முறையிலே பழகு, இல்லாட்டி அவளோடே பேச்சு வார்த்தை வச்சுக்காதே. நீ அவளைக் கீழ்த்தரமா நடத்தக்கூடாது. இன்னிக்கு - ப்ரதீயோட பொறந்த நாளிலே அவ நாள் பூரா அழுதுக்கிட்டிருந்திருக்கா...ஒன் நடத்தைக்கு மன்னிப்பே இல்லே.''

''ஓ... இன்னிக்கு ஒன் சென்டிமெண்டுக்கு முக்கியமான நாள். அதனாலே தான் நாள் முழுக்க வெளியே சுத்திக்கிட்டு இருந்தே!''

''இன்னிக்கு இந்த நிகழ்ச்சியை வச்சுக்கிட்டது சரியில்லே; ஆனா நீங்க என் வார்த்தைக்கு மதிப்புக் கொடுக்கல்லே, டோனியோடே அம்மா பேச்சைக் கேட்டீங்க....நான் திரும்பி வந்தேனேன்னு சந்தோஷப்படு.''

''என்னைப்பத்தியும் நீ நினைச்சுப் பார்க்கணும் அம்மா!'' நீபா சொன்னாள். ''நான் தினந்தினம் இங்கு வந்து பொழுதைக் கழிக்க முடியுமா?''

சுஜாதா சிரித்தார். ''நீ வருஷம் பூரா என்னைப்பத்தி எவ்வளவு நாள் நினைச்சுப்பார்த்திருக்கே, சொல்லு! நீ இந்தத்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தெரு வழியா காரோட்டிக்கிட்டுப் போறே. ஒம் புருஷன் டூர்லே போயிடறான், நீ ஊர் சுத்திக்கிட்டிருக்கே. ஜோதிக்கு டைபாய்டு வந்தது, சுமனுக்குப் பொறந்த நாள் வந்தது, ஆனா ஒனக்கு வர நேரம் கிடைக்கல்லே...உம், ஒன்னைக் குத்தம் சொல்லிப் பிரயோசனமில்லே...நீ வந்தாலும் வரலாம்னு எதிர்ப் பார்த்து நான் இங்கே காத்திருக்கணும்னு நினைக்கறியா?''

''நீ....''

''மறு பேச்சுப் பேசாதீங்க!...நான் டிரஸ் பண்ணிக்கிட்டு வரேன்....'' சுஜாதா தம் அறைக்குச் சென்று அலமாரியைத் திறந்தார். அவருடைய உடம்பின் ஒவ்வொரு நரம்பும் 'மாட்டேன், மாட்டேன்' என்று கலகம் செய்தது. ஆனால் அவர் அன்றிரவு தம் கடமையைச் செய்யத்தான் வேண்டும். இது அவருடைய தனிச்சிறை. யார் எது வேண்டுமானாலும் செய்யட்டும், அவர் தம் கடமையில் தவறக்கூடாது. இது அவரே தமக்கு அளித்துக் கொண்ட தண்டனை. இப்போது இந்தச் சிறையை உடைத்துக் கொண்டு வெளியேற முடியுமா?

அவர் வெள்ளையில் பூ வேலைப்பாடு செய்த, கருப்புக்கரை போட்ட வெள்ளைச்சேலையையும் வெள்ளை ரவிக்கையையும் எடுத்துக்கொண்டு பாத்ரூமுக்குள் நுழைந்தார். ஷவரைத் திறந்து விட்டுத் தரையில் உட்கார்ந்தார். நல்ல குளிராயிருந்தாலும் உடம்பு வலியில் குளிர் தெரியவில்லை. பனிக்கட்டி மாதிரி குளிர்ந்த தண்ணீர் கூட உடம்புக்கு இதமாகத்தானிருந்தது....

பனிக்கட்டி. பனிப்பாறை. பனிப்பாறை மேலே காயம் பட்டு அப்போது தான் இறந்து போன உடலை வைத்தால் இரத்தம் வெளியேறுவது நின்று போய்விடும். தண்ணீர் குளிர்ச்சிதான். ஆனால் ப்ரதீயின் நெற்றி, நெஞ்சு, கைபோல அவ்வளவு குளிர்ச்சியில்லை.....

இன்று அவர் நாள் முழுவதும் ப்ரதீயோடு கூட

www.tamilarangam.net



இருந்தார். ப்ரதீயின் விரல்கள் எவ்வளவு குளிர்ச்சி! பனிபோல் ஜில்லிட்ட கண்ணிமைகள் மூடியிருக்கின்றன, இமை ரோமங்கள் அடர்த்தியாக, சிவப்பு உடம்பு மங்கிப்போயிருக்கிறது, தலைமுடி பனிஉருகிய நீரில் நனைந்து குளிர்ச்சியாக, பனிபோல்.... இன்று முழுதும் அவர் ப்ரதீயோடு இருந்தார்.....இரவில் மயானத்தில்.... போலீஸ்காவல்... பிரகாசமான விளக்கு வெளிச்சம்....சுவரில் வரிசையாகப் பெயர்கள்....அலுமினியம் கதவு தடாரென்று திறக்கக் கீழே இறங்குகிறான் ப்ரதீ; மின்சாரச் சிதையில் எரிகிறான்....இன்று முழுதும் அவர் ப்ரதீயோடு இருந்தார்....சாம்பல், எலும்புகள் வாங்கிக் கொண்டார், கங்கையில் போட வேண்டும்.....அவர் இன்று முழுவதும் ப்ரதீயோடு இருந்தார்.....

அவர் ஷவரை நிறுத்தினார். நரம்பு, நெஞ்சு, இரத்தம் எல்லாம் 'மாட்டேன், மாட்டேன்!' என்று ஓலமிடுகின்றன. அவர் தலையை, உடம்பைத் துடைத்துக் கொண்டார். ஈர உடையைக் களைந்து உடம்பில் பவுடர் தடவிக் கொண்டு உடையணிந்து கொண்டார். முடியை ஈரமாகவே முடிந்து கொண்டார்.

''ஏம்மா, நீ எப்படி எப்போதும் தவறாமே ஒன் கடமையைச் செஞ்சுக்கிட்டு இருக்கே?'' ப்ரதீ அவரைக் கேட்பான்.

எப்போதும் எந்த நிலையிலும் தம் கடமையைத் தொடர்ந்து செய்யும் படி தான் பயிற்சியளிக்கப் பட்டிருந்தார் அவர். இப்படித்தான் அவர் வாழ்ந்து வந்திருக்கிறார். ஆனால் இப்போது தோன்றுகிறது - இதெல்லாம் வீண் என்று, அவர் தம்மை வீணாக்கிக்கொண்டிருக்கிறார் என்று. யாருக்குத் தான் உதவி செய்ய முடிந்திருக்கிறது அவரால்? திவ்யநாத், நீபா, தூலி எவருக்குமே அவரால் உபயோகமில்லை.

அவர் பாத்ரூமை விட்டு வெளியே வந்தார், கண்ணாடிக்கு முன்னால் போய் நின்றார். அவருடைய

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கண்களுக்குக் கீழே கருமை. இருந்துவிட்டுப் போகட்டும்...நந்தினியின் கண்களுக்கு, குருட்டுக் கண்களுக்குக் கீழே எவ்வளவு கருப்பாயிருக்கிறது. மலைக்குக் கீழே பரவியிருக்கும் மாறாத நிழல்போல.

இனி அவர் நந்தினியை, சமூவின் அம்மாவைப் பார்க்கப் போகப் போவதில்லை. எங்குதான் ப்ரதீயைத் தேடிக் கொண்டு திரிவது!...ஒரு நாள் அவரும் தேடுவதை விட்டுவிடுவாரோ?

தொல்லைகளெல்லாம் ஒரு வழியாகத் தீர்ந்த பிறகு விம்மிவிம்மியழுதார் திவ்யநாத். "ஒங்க அம்மாவைப்பாரு, அவ கண்ணிலே தண்ணீவரல்லே. இயற்கைக்கு மாறுபட்ட பெண்பிள்ளை!" என்று குழந்தைகளிடம் புகார் செய்தார் அழுது கொண்டே,

ஆம், சுஜாதா அழவில்லைதான்.

என்றாவது ஒரு நாள், எங்கேயாவது, யாரிடமாவது ப்ரதீயின் பெயரைச் சொல்லும் போது அவர் கண்ணில் நீர் வருமா?

நினைக்கவே பயமாயிருந்தது. நெஞ்சு நடுங்கியது. அன்று தான் ப்ரதீ உண்மையில் மரிப்பானோ? இப்போதும் அவன் அவரது தாங்கொணாச் சோகமாகிய சிறையில் கைதியாக அடைபட்டுக்கிடக்கவில்லையா?....இப்போதும் எல்லாம் அமைதியாகி விடவில்லை. சிறையின் சுவர்கள் மேலும் மேலும் உயரமாகக் கட்டப் படுகின்றன, புதிய புதிய காவல் கோபுரங்கள் எழுகின்றன. கைதிகளுக்காகச் சிறையின் வாயிற்கதவு கூடத் திறக்கப் படுவதில்லை. நள்ளிரவில் போலீஸ் வண்டி வருகிறது. சிறைக்குள்ளே ரேடியோ செய்தி போகிறது. பெரிய பளுதூக்கும் இயந்திரம் வருகிறது. அதன் நீண்ட கை கதவுக்கு வெளியே நீண்டு கைதியைக் கப்பென்று பிடித்துக் கொண்டு மேலெழும்பி அவனைச் சிறைக்குள் சேர்த்து விடுகிறது....

www.tamilarangam.net



துர்க்கா பூஜையின் அஷ்டமி உற்சவத்தில் வெறிபிடித்துத் திரியும் கல்கத்தா. குண்டு - கருப்புவண்டி - குண்டு - தப்பியோட முயற்சி - குண்டு....ஹாப்லுதத்தாவின் ஃபைலை மூடிவிடலாம்...குண்டு - ஃப்பைல் மூடப்படுதல் - போலீஸ் காவலில் சவஊர்வலம் - பின்னால் மனஉறுதிமிக்க, கோபத்தால் இறுகிய இளைஞர்களின் முகங்கள்....

சுஜாதா எப்படி ப்ரதீயைப் பற்றி அடிக்கடி பேசித் தன் சோகத்தை ஆற்றிக்கொள்வார், தாமும் சாதாரணநிலைக்குத் திரும்புவார்?.....

அவர் வெள்ளை சால்வையை அணிந்து கொண்டு செருப்புப் போட்டுக் கொண்டார். கொஞ்சம் தண்ணீர் குடித்தார்.

அறைக் கதவு தட்டப்பட்டது. வினி உள்ளே எட்டிப் பார்த்தாள்.

அவளது உடையலங்காரமும் நீபா, தூலி போல்தான் - அதே மாதிரி முடியலங்காரம், அதே நிறப்புடைவை, அதே மாதிரி கோட்டு......

இவர்கள் எல்லோரும் மற்றவர்களைப் போல இருக்க விரும்புகிறார்கள். ஒருவரும் நானாக இருக்க விரும்புவதில்லை. இதற்குப் பெயர்தான் ஃபேஷன்.

''அம்மா, ரெடி ஆயிட்டியா?''

''ஆமா. சுமன் என்ன செய்யறான்?''

''ஆயாகிட்டே இருக்கான், தூங்கப்போறான்.''

''சரி, கீழே போகலாம், வா.''

சுஜாதா விளக்கை அணைத்துவிட்டு அறைக்கு வெளியே வந்தார். அவருடைய ஒவ்வொரு நரம்பும், அவரது நெஞ்சும் 'மாட்டேன், மாட்டேன்' என்கின்றன. அப்படியும் அவர் படியிறங்கி வந்தார். பிடிக்காவிட்டாலும் காரியத்தைத் தொடர்ந்து செய்வது தான் கடமை. தாம் மிகவும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கடமையுணர்வு கொண்டவர் என்ற அகங்காரம் அவருக்கு உள்ளூற இருந்ததோ?

சுஜாதா நீபாவின் பெண்ணின் பிறந்த நாள் விழாவுக்குக் கிளம்பிக் கொண்டிருந்த போது ப்ரதீ ''நீ இப்போ கண் டாக்டரைப் பார்க்கப் போவது தான் இன்னும் முக்கியம்'' என்று அவரிடம் சொன்னான்.

''நான் போகல்லேன்னா நீபா ரொம்ப வருத்தப்படுவா.''

''இல்லே, வருத்தப்பட மாட்டா....வருத்தப்படுவான்னு சொல்றது வெறும் மரபுதான். நம்மோட எந்தக் காரியத்தாலும் அக்காவுக்கு இன்பமோ துன்பமோ ஏற்படாது. இது ஒனக்கு நல்லாவே தெரியும். பின்ன ஏன் டாக்டரைப் பார்க்கப் போகல்லே நீ?''

''நீயும் கூட வருவியா?''

''வரேன்.''

கண்ணில் மருந்து போட்டுக் கொண்டு தனியாகப் போவது சுஜாதாவுக்குக் கஷ்டமாயிருக்கு மென்று தான் ப்ரதீ அவரை மருத்துவரிடம் அழைத்துச் சென்று பிறகு அவரை நீபாவின் வீட்டுக்கு முன்னால் இறக்கி விட்டு விட்டுப் போனான்.

''நீ உள்ளே வரல்லியா?'' சுஜாதா கேட்டார்.

ப்ரதீ பதில் சொல்லாமல் சும்மா சிரித்தான். அவன் அன்று வேஷ்டியும் சட்டையும் அணிந்திருந்தான். சாதாரணமாக அவன் வெளியே செல்லும் போது பேண்ட் அணிவதுதான் வழக்கமென்றாலும் அவனுக்கு வேஷ்டியணிந்து கொள்ள மிகவும் பிடிக்கும். முற்றிலும் மாறிவிட்ட பிறகும் ப்ரதீ - அவன் மட்டுந்தான் - சுஜாதாவிடம் அக்கறை காட்டினான்...

ப்ரதீ இறந்து போன மறுநாள் காலையில்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



காண்ட்டாபுகூருக்குப் போன சுஜாதா வீடு திரும்ப வெகுநேரமாகிவிட்டது. போலீஸ் சவத்தைத் தம்மிடம் கொடுத்து விடும் என்று நினைத்திருந்தார் அவர். ஆனால் அப்படிக் கொடுக்காது என்று தெரியவந்த போது அவர் வியப்படையவில்லை. வியப்படைவதற்கான் திராணியே தேய்ந்து போய் விட்டது. அவர் வீடு திரும்பினார். பிறகு செய்தி வந்ததும் மறுபடி சென்றார். திவ்யநாத்தின் முயற்சிகளால் எல்லா சவங்களுமே சீக்கிரமே சோதனை செய்யப்பட்டுவிட்டன. மருத்துவர் நிர்வாணமாகக் கிடந்த சவங்களை ஃபார்மாலின் போட்டுத் துடைத்து விட்டு மின்வேகத்தில் அவற்றை அறுத்து நறுக்கிச் சோதனையை முடித்தார்.

அந்த சமயத்தில் இரவும் பகலும் சவங்களைச் சுமந்த வண்டிகள் காண்ட்டாபுகூருக்கு வந்து கொண்டேயிருக்கும்.

மாலையில் மயானத்துக்குப்போன சுஜாதா நள்ளிரவில்தான் வீடு திரும்பினார். அப்போது வீடு நிசப்தமாயிருந்தது. வீட்டிலிருந்தவர்கள் பிறருக்கு இந்த நிகழ்ச்சியை எப்படி விளக்குவது, எப்படி உண்மையை மறைப்பது என்ற கவலையில் மூழ்கியிருந்தார்கள். ஹேம் ஒருத்திமட்டுந்தான் சுஜாதாவைக் கண்டதும் சமூவின் அம்மாபோல் இயற்கையாக துக்கத்தை வெளிப்படுத்தி அழுது அரற்றினாள்- ''அம்மா, நீங்க ஏளுநாள் குளந்தையை எங்கிட்டே ஒப்படைச்சீங்க, நீங்க பொளச்சுவருவீங்கன்னு யாரும் எதிர்பார்க்கல்லே...இப்போ அந்தக் குளந்தையை எங்கே விட்டுட்டு வந்தீங்க?..... நூறு வேலையிருந்தாலும் மறக்காமே என்னோட வாதத்துக்கு மருந்து வாங்கிக்கிட்டு வருவானே!...இனிமே யாரு என்னை 'ரேசன் வாங்கிக்கிட்டு ஏன் நடந்துவரே? ஒரு ரிக்சா வச்சிக்கிட்டு வரக்கூடாது!' அப்படீன்னு அதட்டுவான்?....யாரு எனக்காக ரிக்சாவைக் கூட்டிக்கிட்டு வருவான்?''

சுஜாதா அந்த நள்ளிரவில் திரும்பி வந்த பிறகு ஹேம் தான் அவரது தலையைத் தன் மடியில் வைத்துக்கொண்டு

www.tamilarangam.net



உட்கார்ந்திருந்தாள்.

ப்ரதீ ஹேமிடம் எப்போதும் பரிவுகாட்டுவான். அப்படிப்பட்டவனை இதயமற்றவன் என்று திட்டுவார் திவ்யநாத்....

''இன்னிக்கு என்னாலே மாடிப்படியிலே எறங்க முடியல்லே, ப்ரதீ!'' என்று சொல்ல விரும்பினார் சுஜாதா. ''ஒவ்வொருவரும் தன் தன் சொந்த இயல்புக்கேற்ப வாழ வேண்டும். அதுதான் பெரிய சாதனை'' - என்று சொல்வாயே ப்ரதீ. நான் இன்று அப்படி இருக்கமுடிந்தால்...'' என்று சொல்ல ஆசை ஏற்பட்டது.

ஆனால் அவர் தம் விருப்பப்படி நடந்து கொண்டிருந்தால் ப்ரதீ பிறந்திருக்கவே மாட்டான். அவன் நல்ல சிவப்பு, பட்டுப்போன்ற மிருதுவான தலை முடி அவனுக்கு. பிறந்த பிறகு அவனுக்கு ஒரு தடவை கூட மொட்டையடிக்கவில்லை. அவனுக்குப் பூணூல் போட்ட போது கூட மொட்டையடிக்காமல் அதற்குப் பதிலாகப் பணம் தானம் செய்யப்பட்டது. சிறுவயதில் அவன் சுஜாதாவின் கையைப் பிடித்துக்கொள்ளாமல் தெருவைக் கடக்க மாட்டான்....

அவர் டிராயிங் ரூமை நெருங்கினார். அங்கே கூடியிருந்தவர்களின் சிரிப்பும் பேச்சும் அவர் காதில் விழுந்தது.

இந்த உலகம் சவங்களுக்காகவே படைக்கப் பட்டிருக்கிறதா? சாப்பிட்டு, சண்டைசச்சரவுகளில் ஈடுபட்டு, பேராசையில் வெறிபிடித்து அலையும் சவங்கள்!

மரியாதைக்குத் தகுதியற்றவர்களை ப்ரதீ மதிக்கமாட்டான். அன்பில்லாதவர்களை அவன் நேசிக்கமாட்டான்.

அவன் மரியாதை செலுத்த விரும்புகிறான், நேசிக்க விரும்புகிறான், நேசிக்கப்பட விரும்புகிறான்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அவன் இப்போதும் விரும்புகிறான்; ஏனென்றால் இப்போதும் எல்லாம் அமைதியாகிவிடவில்லை. இந்தக் காலமே அமைதியற்ற, குமுறுகின்ற, வேதனை நிறைந்த, கலகம் செய்யத் துடிக்கும் காலம்.

சுஜாதா திரையை விலக்கிக் கொண்டு அந்த அறைக்குள் நுழைந்தார்.....

தன் குருவைப்பற்றிச் சொல்லிக்கொண்டிருந்தாள் மிஸஸ் கபாடியா. அவளுக்குச் சற்றுத் தூரத்தில் நீபா கையில் ஸ்காட்ச் கோப்பையுடன் யார் யாருடனோ பேசுகிறாள், சிரிக்கிறாள் கலகலவென்று. அவளுடைய தூரத்து உறவு மைத்துனன் பொலாயிதத்தா ஒரு ஃபோர்க்கில் இறைச்சித்துண்டை எடுத்துக்கொண்டு அதை அவள் வாயில் போடுவதற்காக அவளைத் துரத்துகிறான்.

டோனியின் தங்கை நர்கிஸ் காவிநிற நைலான் துணியால் தைக்கப்பட்ட இறுக்கமான சட்டையும் பேண்ட்டும் அணிந்து கொஞ்சம் கொஞ்சம் உடம்பை ஆட்டிக்கொண்டு கழுத்தைத் திருப்பி யாருடனோ பேசிக்கொண்டிருக்கிறாள். நர்கிஸ் அந்த குருவின் சேவிகை. குருவின் உபதேசங்களை நாட்டில் பரப்புவது தான் அவள் மேற்கொண்டுள்ள பணி. அவள் கையில் இப்போது எலுமிச்சம் பழச்சாறு அடங்கிய கோப்பை. அவள் போதைப்பழக்கம் காரணமாக ஒரு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறாள். முக்கியமான நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள மட்டும் அவள் மருத்துவமனையிலிருந்து வெளியேவர அனுமதிக்கப்படுவாள். ஆனால் அவள் காவியுடையணியத் தவறுவதில்லை.

வினி அங்கே கண்ணில் படவில்லை. தூலி, நீபாவின் கணவன் அமித், டோனி, டோனியின் நண்பர்கள் ஆகியோருடன் பேசிக்கொண்டே உரக்கச்சிரித்தாள். பிறகு டோனிக்குமுன்னால் தன் கன்னத்தைக்காட்டினாள். டோனி அவளை முத்தமிட்டான். யாரோ அதை போட்டோ எடுத்தார்கள்.

www.tamilarangam.net



மிஸஸ் கபாடியாவின் கையில் மதுக்கிண்ணம். அவள் பேசுவதை சுஜாதாவும் மற்றவர்களும் கேட்டுக்கொண்டிருந்தார்கள். சுஜாதாவின் முகத்தில் புன்சிரிப்பு. ஆனால் அவரது மூளை வேலைசெய்யவில்லை, உடல் சோர்ந்திருக்கிறது.

''என் குருவைப்பார்த்த போது - நீங்க நம்பமாட்டீங்க - எனக்குள்ளே ஏதோ ஒண்ணு நெருப்பு பிடிச்சுக்கிட்ட மாதிரி இருந்தது. அப்போ பாக்கறேன் - குருவோட தலைக்குப் பின்னாலே ஒரு ஜோதி! ஒரு பெரிய விளக்கு எரியற மாதிரி.... அந்த ஜோதி மேலும் மேலும் பிரகாசமாத் தெரியுது - ஆயிரம் சூரியன் மாதிரி.....''

நந்தினி சொன்னது சுஜாதாவின் நினைவில் மிதந்தது - ''கார்ப்பெட் விரித்த தரையில் குசனைக் கட்டிப் போட்டிருந்தாங்க, அவன் முகத்துக்கு முன்னாலே ரெண்டாயிரம் வாட் பல்பு எரிஞ்சுக்கிட்டிருந்தது. குசனோட விரல்களிலேருந்து நகத்தைப் பிச்சுட்டாங்க, நரம்புக்கு நரம்பு ஊசியாலே குத்தியிருந்தாங்க. இது மாதிரி நாற்பத்தெட்டு மணிநேரம், அப்பறம் எழுபத்திரண்டு மணிநேரம். அப்பறம் 'நீ விடுதலையாயிட்டே'ன்னு சொல்லி அவனை ஒரு வண்டிலே போட்டு வீட்டுக்குக் கொண்டு வந்தாங்க. வீட்டுவாசல்லே அவனை வண்டியை விட்டு இறக்கிச் சுட்டுட்டுப் போயிட்டாங்க, அவனோட கண் பாப்பா உருகிப்போயிடுச்சு.''

ஆனால் ஆயிரம் சூரியனின் ஒளியைப்பார்த்தும் மிஸஸ் கபாடியாவின் கண்கள் பழுதாகவில்லை. அவளுடைய ஞானக்கண் திறந்து கொண்டது.

''குரு அவரோட சொந்தப் பிளேனிலே போயிக்கிட்டிருந்தார். அவர் என்னை சும்மா பார்த்தார். 'எங்கிட்டே வா, மியாமி வர்றபோது என்னைப் பாரு' அப்படீன்னார். நான் மியாமிக்கு வரப்போறேன்னு அவருக்கு எப்படித் தெரியும், சொல்லு! 'நீ வச்சுக்கிட்டு இருக்கற புஸ்தகத்திலே விவரிச்சுள்ள பொண்ணு நீதான்'னார்.

www.tamilarangam.net



என்கிட்டே இருந்த புஸ்தகம் என்ன தெரியுமா? 'பிளாக் கேர்ல் இன் ஸர்ச் ஆஃப் காட்'. நான் - அதாவது என்னோட ஆத்மா - அப்போ கருப்பு....இப்படித்தான் நான் என் கடவுளைக் கண்டுபிடிச்சேன். அப்பறம் எல்லாம் வெளிச்சம், எல்லாம் லேசாயிடுச்சு.....''

நந்தினிக்குள்ளே ஏதோ ஒன்று மரித்துப் போய் விட்டது. மரித்துப்போன மனிதன் பளுவாகிவிடுகிறான். ப்ரதீயின் கை எவ்வளவு கனமாயிருந்தது! அதுபோல் உணர்வுகள் மரத்துப்போய் விட்டால் உள்ளமும் கனத்து விடும் போலும் - சவம்போல. அந்தப் பளு காரணமாகத்தான் நந்தினி காலை இழுத்து இழுத்து நடக்கிறாளோ?...அவள் இனி ஒருபோதும் இயற்கை நிலைக்குத் திரும்ப மாட்டாள், மனைவியாக, தாயாக ஆகமாட்டாள். தெரு ஒளியை, மனிதனை, தூசியின் ஒவ்வொரு அணுவையும் நேசித்தவர்கள் ஒரு போதும் தாயாக மாட்டார்கள். குழந்தைகளின் நோழமை பிடிக்காதவர்கள், ஓர் ஆணிடமிருந்து இன்னோர் ஆணுக்குத் தங்கள் நேசத்தை மாற்றிக்கொள்பவர்கள், குடியில் தொடங்கி அபினுக்கு மாறுபவர்கள், ஊர்சுற்றிக் கொண்டு பொழுதைக் கழிப்பவர்கள் - இவர்களெல்லாம் அன்பு வறண்ட வாழ்க்கையில் குழந்தைகளைக் கொண்டு வருவார்கள் - எல்லாம் வீண், வீண்!.....

''அதிலேருந்து ஸ்வாமிஜி என் குருவாயிட்டார். நான் மட்டுமில்லே, ஒரு நாள் ஒலகத்திலே உள்ளே எல்லா ஜனங்களும் அவரோட சீடர்களாயிடுவாங்க. அமெரிக்கா அவரைக் கண்டுபிடிச்சிருக்கு - விவேகானந்தரைக் கண்டு பிடிச்ச மாதிரி. இனிமேல் இந்தியாவும் அவரைத் தெரிஞ்சுக்கும்.'

மிஸஸ் கபாடியாவின் பேச்சை வாய்பிளந்தவாறு கேட்டுக் கொண்டிருந்தார் ஜீ சுமித்ரா. அவர் சுஜாதாவிடம் போய், ''இவங்களை எனக்கு அறிமுகப்படுத்திவையுங்க, ப்ளீஸ்! எனக்கு இவரைத் தெரிஞ்சுக்கணும் போலே இருக்கு...''

www.tamilarangam.net



''மிஸஸ் கபாடியா, இவர் எங்களோட சிநேகிதர் - ஜீசுமித்ரா.''

''ஒங்களைச் சந்திச்சதிலே ரொம்ப மகிழ்ச்சி.''

மலி மித்ரா குசுகுசுவென்று சுஜாதாவிடம் சொன்னாள், ''ஒனக்கு இங்கிலீஷ் தெரியாதுன்னு நினைச்சு ஒங்கிட்டே வங்காளியிலே பேசறா....வேடிக்கைதான்! எப்படி டிரஸ் பண்ணிக்கிட்டிருக்கா பாத்தியா! சகிக்க முடியாத பொட்டை நாய்!....இவகிட்டே வைரம் இருக்குன்னு காமிச்சுக்கறா என் கிட்டே!''

'வைரம்' என்ற வார்த்தை மிஸஸ் கபாடியா காதில் விழுந்தது. அவள் சிரித்த முகத்துடன் மலியின் பக்கம் திரும்பிச் சொன்னாள், ''ஆமா, வைரம் அணியத்தான் வேணும். என் குரு சொல்லியிருக்கார். வைரம் ஆத்மாவோட குறியீடு. தூய்மைக்கு அடையாளம்...''

''ஆகா, ரொம்ப நல்லாயிருக்கு.''

''ஆனா நான் ஒன்னை மன்னிக்கமாட்டேன்.''

''ஏனோ?''

''நாய்க் கண்காட்சியிலே என்னோட ரிட்ரீவர் நாய்க்குப் பரிசு கிடைக்காமே பண்ணினதுக்காக...''

''அது நான் இல்லே, என்னோட ரோவர் நாய்...''

''ஆமா. எனக்கு எவ்வளவு கோபம் வந்தது தெரியுமா?.....'' பிறகு சுஜாதாவிடம் திரும்பி மிஸஸ் கபாடியா சொன்னாள், ''நான் சொன்னா நீ நம்பமாட்டே....இவளோட நாயைப் பார்த்து எனக்கு எவ்வளவு பொறாமை ஏற்பட்டது தெரியுமா!''

''ஒங்க குருவைப் பத்திச் சொல்லுங்க'' என்றார் ஜீசுமித்ரா.

''அவரா? அவர் கடவுள்! சர்வ வல்லமையுள்ளவர்!

www.tamilarangam.net



இந்தியாவிலே வறுமை இருக்கணும்னு அவரோட விருப்பம். அதனாலே தான் ஜனங்க இவ்வளவு கஷ்டப்படறாங்க. அவர் விரும்பற போது இந்தியா பெரிய பணக்கார நாடாயிடும்.''

''நிசமாவா?''

''நிசமாத்தான்....நான் டோனி, தூலியை நேசிக்கறதைப் பத்தி அவர் கிட்டே சொன்னதும் அவர் சமாதியிலே ஆழ்ந்துட்டார். அதிலேருந்து விழிச்சதும் சொன்னார், 'பொண்ணு ரொம்ப வருத்தத்திலே இருக்கா....அவ வீட்டிலே ஒரு கெட்ட நிழல் விழுந்திருக்கு'ன்னு.''

''அப்படியா சொன்னார்?''

''ஆமா! டோனியும் தூலியும் அமெரிக்காவுக்கு வரும் போது அவங்ககிட்டே கொஞ்சம் பூ கொடுத்து அனுப்புவாராம். அந்தப் பூக்களை வீட்டின் நாலுபக்கத்திலும் பொதைச்சு வைக்கச் சொன்னார்.''

மலி மித்ரா சுஜாதாவைக் கேட்டாள், ''சுஜாதா, நீ எப்படி இந்த சாமியார் கிட்டே உபதேசம் வாங்கிக்க முடியும்? ஒனக்குத்தான் ஏற்கனவே ஒரு குரு இருக்காரே!''

''உபதேசமா?''

''ஆமா....மிஸ்டர் சாட்டர்ஜி சொன்னாரே, ஒங்க குடும்பம் பூரா இந்த சாமியாரைக் குருவா ஏத்துக்கப் போகுதுன்னு.''

''அது எனக்குத் தெரியாதே.''

''ஒரு குரு இருக்கறபோது இன்னொருவரைக் குருவா ஏத்துக்க முடியுமா?''

''எனக்குக் குரு ஒருத்தரும் இல்லையே, மலி.''

''இல்லையா?....ரணுவும் ப்ரதீயும் ஸ்கூல்லே படிச்சுக்கிட்டிருந்த போது யார்கிட்டேயே பரீட்சை ரிசல்ட்

www.tamilarangam.net



முன்னதாகத் தெரிஞ்சுக்கறதுக்குப் போனாங்களே, அவர் யாரு?''

''அவர் என் மாமியாரோட புரோகிதர் - என் குழந்தைகளுக்கு ஜாதகம் கணிச்சுக் கொடுத்தவர்.''

அவர் பெயர் லட்சுமிதர் மிஸ்ரா. அவர் தாம் ப்ரதீயின் ஜாதகத்தையும் கணித்துக் கொடுத்தார். அதில் கண்டிருந்தது ப்ரதீக்கு நீண்ட ஆயுள், நோயற்ற, கவலையற்ற வாழ்க்கை என்று. சுஜாதா அந்த ஜாதகத்தைக் கிழித்தெறிந்துவிட்டார்.

மலிமித்ரா மிஸஸ் கபாடியாடம் சொன்னாள், ''ஒங்களுக்குத் தெரியுமா?..... சுஜாதாவோட சின்னப் பிள்ளை ப்ரதீ....''

''மிஸஸ் கபாடியா, நான் கொஞ்சம் அந்தப் பக்கம் போறேன்'' என்று சொல்லிவிட்டு அங்கிருந்து நகர்ந்தார் சுஜாதா.

மூன்று கோப்பை விஸ்கி குடித்த பிறகு மிகவும் உணர்ச்சி வசப்பட்ட நிலை மிஸஸ் கபாடியாவுக்கு. அவள் தன் கைக்குட்டையால் கண்களைத் துடைத்துக்கொண்டு, ''தெரியும்....பாவம்! இவளுக்கு மனசு எவ்வளவு கஷ்டப்படும்!....என் குரு என்ன சொல்றார் தெரியுமா?...'' என்று சொன்னாள்.

''இன்னிக்குத்தான் அவனோட நினைவு நாள்'' என்றார் ஜீசுமித்ரா.

''அப்படியா?''

மலி மித்ரா சொன்னாள், ''அந்தப் பையன் ப்ரதீ.....நான் அவனை நம்பறதேயில்லே. அன்னிக்கு அவன் வீட்டிலேருந்து போறபோது 'ராத்திரி ரணுவோட வீட்டிலே இருப்பேன்'னு சொல்லியிருக்கான். ஆனா உண்மையிலே காலேஜிலே முதல் வருஷத்திலேருந்தே ரணுவுக்கு அவனோடே தொடர்பு இல்லே. ரணுவோடே தங்கியிருப்பானாம்!....ஏதோ தான் ரணுவோட சிநேகிதன்

www.tamilarangam.net



மாதிரி!...மறுநாள் பேப்பர்லே ப்ரதீயோட பேர் வரல்லே....என் புருஷன் கிளப்புக்குப் போனார். நல்ல வேளை, எங்க ஏரியாவிலே ஒரு ப்ரபிளும் இல்லே. கிளப்புக்குப் போகத் தடையில்லே. கிளப்புக்குப் போக முடியல்லேன்னா எப்படித்தான் வாழமுடியும்!...நான் நியூஸ்பேப்பரைப் பிரிக்கறதேயில்லே, வீட்டிலே மத்தவங்களையும் படிக்க விடறதில்லே. எவ்வளவு பயங்கர நியூஸ் எல்லாம் அதிலே வந்துக்கிட்டிருந்தது அப்போ!...என் புருஷன் கிளப்பிலேருந்து சீக்கிரமாகத் திரும்பி வந்து 'சாட்டர்ஜியோட பையன் செத்துப்போயிட்டான்'னு சொன்னார்.''

''ஆகா! ஒங்களுக்கு எவ்வளவு கஷ்டமாயிருந்திருக்கும்?''

''அப்பறம் என் அண்ணன் - அவர்தான் போலீஸ் டெபுடி கமிஷனர் - எங்களுக்கு போன் பண்ணி, ப்ரதீ அங்கே வந்திருந்தானான்னு கேட்டார், நாங்க உடனே ரணுவை பம்பாய்க்கு அனுப்பிட்டோம்.''

''நீங்க பண்ணினது ரொம்ப சரி.''

''நாங்க துக்கம் விசாரிக்கப் போயிருந்தோம். சாட்டர்ஜி பாவம், ரொம்பக் கஷ்டப்பட்டுக்கிட்டிருந்தார். இந்த விஷயம் வெளியே வராமே அமுக்கி வைக்கறதுக்கு என்ன அலைச்சல் அவருக்கு!.....பார்க்கக் கஷ்டமாயிருந்தது எங்களுக்கு....இந்த சுஜாதாவுக்குக் கல் மனசு. அவ தான் பையனுக்கு ரொம்பச் செல்லங் கொடுத்துக் கெடுத்துட்டா....இல்லாட்டி இந்தக் குடும்பத்துப் பையன் இப்படி.....''

ஜீசுமித்ரா சொன்னார், ''அந்தப் பயங்கர நாட்கள்!....நீங்க அப்போ எங்கே இருந்தீங்க?''

''அமெரிக்காவிலே.'' மிஸஸ் கபாடியா சொன்னார்.

''டோனி?''

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



''அவன் இங்கேதான் இருந்தான்....மலி சொன்ன மாதிரி, அப்போ பார்க் தெரு, காமக் தெரு இந்த மாதிரி சில பகுதிகளிலே அமைதியா இருந்தது. டோனியோட சிநேகிதன் சரோஜ் பால் தான் அப்போ பாதுகாப்பு நடவடிக்கைகளுக்குத் தலைமை. ரொம்பக் கெட்டிக்காரன், தைரியசாலி. கிளர்ச்சிக்காரங்களை அவன் பிடிச்ச விதம் இருக்கே, ஆகா!....''

''நிசந்தான்.''

மலிமித்ரா சொன்னாள், ''இந்தக் கிளர்ச்சிக்காரங்க எப்படிப்பட்ட முட்டாள்கள்! சமூகத்துக்குக் கிரீடமாயிருந்தவங்களையெல்லாம் கொலை பண்ணினாங்க. இதனாலே என்ன லாபம் கிடைச்சது? கடைசியிலே இவங்களும் செத்துப்போனாங்க...என்ன விளைவுன்னா கண்ணியமான தொழிலதிபர்கள் எல்லோரும் பயந்துபோய் அவங்களோட முதலீட்டை வேறே ராஜ்யங்களுக்குக் கொண்டு போயிட்டாங்க....''

''எனக்குத் தெரியாதா?....நான் அமெரிக்காவிலேருந்து பம்பாய்க்கு வந்தேன். அங்கேயிருக்கறவங்க என்னைக் கல்கத்தாவுக்கு வர விடல்லே....பணக்காரங்களைக் கண்டாலே கல்கத்தாவிலே கிளர்ச்சிக்காரங்க கொலை செஞ்சுடறதாகச் சொன்னாங்க...நான் என்ன பண்ணினேன், தெரியுமா?''

''என்ன பண்ணினீங்க?''

மிஸஸ் கபாடியாவின் முகத்தில் கர்வம் பளபளத்தது. அவள் சொன்னாள், ''பருத்தி நூல் சேலையைக் கட்டிக்கிட்டு ரெண்டாங்கிளாசிலே ஏறி ரயில்லே வந்தேன். என் புருஷனுக்கும் பிள்ளைக்கும் நான் தேவைப்படறேன்னு சொல்லிட்டேன். எனக்குக் குருவோட ஆசிர்வாதம் இருக்கு, யாரும் என்னைக் கொல்ல முடியாது!''

www.tamilarangam.net



''சுஜாதாவைப் பார்க்க ரொம்ப அழகா இருக்கு'' ஜீசுமித்ரா சொன்னார், ''வெள்ளையுடை, துக்கத்தின் அடையாளம்....ஆகா!''

மலிமித்ரா சொன்னாள், ''இதெல்லாம் ஒரு நாடகம்...இன்னிக்கு எல்லோரும் விதவிதமான கலர்லே டிரஸ் பண்ணிக்கிட்டு வருவாங்கன்னு தெரியும் அவளுக்கு; அவங்களுக்குக் காண்ட்ராஸ்டா இருக்கணும்னு இந்தமாதிரி டிரஸ் பண்ணிக்கிட்டிருக்கா.....''

''என்ன மேக் அப் உபயோகப் படுத்தறாங்க?'' மிஸஸ் கபாடியா கேட்டாள். ''புது மாதிரியா இருக்கே!''

''மேக் அப்பா? இல்லே, சுஜாதா மேக் அப் பண்ணிக்கறதில்லே.''

''அப்படியா! ஏன்? அழகாத்தானே இருக்காங்க.....''

டோனி யாரையோ கூட்டிக்கொண்டு சுஜாதாவிடம் வந்தான். ''என்னோட அழகான மாமியார் இவங்க....அம்மா, இவர் ஒரு ஜர்னலிஸ்ட். ஒங்களைச் சந்திக்கத் துடிச்சுக்கிட்டிருக்கார்.''

டோனி வங்காளியில் தான் பேசினான். கல்கத்தாப் பையன் தானே! வங்காளி நன்றாகத் தெரியும் அவனுக்கு.

பத்திரிகைக்காரர் சொன்னார், ''பார்ட்டி ரொம்பப் பிரமாதம்....ஒங்க புடவை ரொம்ப அழகாயிருக்கு....மிஸ்டர் சாட்டர்ஜி எவ்வளவு நல்லா சம்ஸ்கிருதம் பேசறார்!....ஒங்க குடும்பம் ஒரு இலட்சிய வங்காளிக் குடும்பம்!''

''சாப்பிட்டீங்களா?''

''நிறையச் சாப்பிட்டேன். நான் ஒங்களைப் பேட்டி காணலாமா?''

''என்னையா?''

www.tamilarangam.net



''ஆமா...நான் பம்பாயிலேருந்து வெளியாகிற ஒரு மகளிர் பத்திரிகையிலே அடிக்கடி எழுதறேன்.....நீங்க ஒரு தாய், ஒரு மனைவி, தவிர ஒரு பாங்க் ஆபீசர்.....வீட்டையும் கவனிச்சுக்கிட்டு அபீசர் வேலையும்....''

''நான் ஆபீசரில்லையே!''

''பின்னே டோனி சொன்னானே!...''

''குமாஸ்தாவாத்தான் வேலையிலே சேர்ந்தேன். இருபது வருஷ சர்வீசுக்கப்பறம் இப்போ செக்ஷன் - இன் - சார்ஜ் ஆகியிருக்கேன்....''

''அப்படியா?''

''அதனாலே....''

''அதுசரி...ஆனா ஓங்க பிள்ளை கொல்லப்பட்டிருக்கான். மகனையிழந்து சோகத்தில் மூழ்கின ஒரு அம்மாங்கற முறையிலே....''

''ஸாரி, என்னை மன்னிச்சுடுங்க....''

சுஜாதா அங்கிருந்து நகர்ந்தார்....

மகளிர் பத்திரிகையில் சுஜாதாவின் போட்டோ..... 'சோகத்துக்குள்ளான ஒரு தாய் பேசுகிறார்!'....இவர்கள் ஒரு போதும் ப்ரதியை அவருடனிருக்க விடமாட்டார்கள். ஆனால் அவர் இன்று முழுவதும் ப்ரதீயோடு தான் இருந்தார்......

'என் பிள்ளை....'

பம்பாய் சமூகத்தின் மேல்தட்டுப் பெண்மணிகள், பந்தயக்குதிரைகளின் சொந்தக்காரர்கள் - தொழிலதிபர்களின் மனைவியர், திரைப்பட நடிகைகள் எல்லோரும் சுஜாதாவைப் பற்றியும் ப்ரதீயைப் பற்றியும் படிப்பார்கள்....

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சுஜாதா அமித்திடம் போனார்.

''அமித், சாப்பிட்டியா?''

''சாப்பிட்டாச்சு அம்மா.''

''ஒன் சிநேகிதங்கஎெல்லாரும்?...''

''அவங்களும் சாப்பிட்டாங்க.''

பார்ட்டியில் விஸ்கி இருந்தும் தம் மாப்பிள்ளை அமித் போதையாகாமலிருப்பது ஆச்சரியமாயிருந்தது சுஜாதாவுக்கு. அமித்தை மருமகனாகத் தேர்ந்தெடுத்தவர் திவ்யநாத் தான். நீபா தன் சிதார் ஆசிரியரோடு ஓடிப்போய்விட்டாள். திவ்யநாத் அவளைத் தேடிப் பிடித்துக் கூட்டிவந்து ஒரு மாதத்துக்குள் அவளுக்குக் கலியாணம் செய்து வைத்துவிட்டார் நிறைய செலவு செய்து. அமித் பெரிய வீட்டுச்செல்லப்பிள்ளை, பெரிய வேலை பார்க்கிறான், ஆனால் பலவீனமான மனது அவனுக்கு.

அமித்தைப் பார்க்கப் பாவமாயிருக்கும் சுஜாதாவுக்கு. முன்பெல்லாம் அவன் மது அருந்துவதில்லை. இப்போது தன்னை மறந்திருப்பதற்காகவே நிறையக் குடிக்கிறான் - அதாவது நீபா அவன் வீட்டிலேயே அவனுடைய அத்தைபிள்ளை பலாயியுடன் வாழத்தொடங்கிய பிறகுதான் அவனுக்கு இந்த மதுப்பழக்கம்.

அவன் ஏன் தன் அத்தைபிள்ளையைக் கண்டிக்கவில்லை என்பது சுஜாதாவுக்குப் புரியவில்லை.

அவன் தன் மனைவியுடன் பேசிப்பார்த்திருக்கலாம், அத்தை பிள்ளையைக் கண்டித்திருக்கலாம்; அப்படியும் நிலைமை திருந்தாவிட்டால் அவனை வீட்டை விட்டு வெளியேற்றியிருக்கலாம்.

அல்லது மனைவியிடமிருந்து மணவிலக்குப்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பெற்றிருக்கலாம். சட்டம் இருக்கிறது, கோர்ட் இருக்கிறது, இந்த மாதிரி நிலைமைக்குப் பரிகாரம் இருக்கிறது.

அமித் எதுவும் செய்வதில்லை, சும்மா குடித்துக்கொண்டேயிருப்பான். இந்த விஷயத்தைத் திவ்யநாத் சாதாரணமாக எடுத்துக்கொண்டிருக்கிறார். ஜாமாயிஷஷ்டி (மாப்பிள்ளை விருந்து)க்கு அமித், பலாயி இருவரையுமே அழைப்பார். ஆண்டுக்கொரு முறை அமித், பலாயி இருவருமே அமித்தின் குருவிடம் போவார்கள்.

அமித் தன் வீட்டின் இரண்டாம் மாடியில் ஒரு அறையில் தூங்குவான். முதல் மாடியறையொன்றில் அவர்களுடைய பெண்குழந்தையும் அதன் தாதியும் தூங்குவார்கள். அதே மாடியில் அடுத்தடுத்து இரண்டு அறைகள் நீபா, பலாயியின் படுக்கையறைகள்.

எல்லாமே பூச்சியரித்த, அழுகிப்போன புற்றுநோய்....செத்துப்போய் விட்ட உறவுகளின் பெயரைச் சொல்லிக்கொண்டு பிணங்கள் பிழைத்திருக்கச் செய்யும் முயற்சி. அமித், பலாயி, தீபா இவர்களுக்கருகில் போனால் கூடப் பிணநாற்றம் வீசும் என்று தோன்றியது சுஜாதாவுக்கு.

இவர்களெல்லாம் கருவிலேயே கெட்டுப் போனவர்கள், நோயுற்றவர்கள். ப்ரதீயும் அவனுடைய சகாக்களும் அடையாளம் மிஞ்சாமல் அழிந்துவிட விரும்பிய சமூகம் பலருடைய வயிற்றுச்சோற்றைப் பறித்து இவர்களை ஆடம்பரமாக வாழச் செய்திருக்கிறது. அந்த சமூகத்தில் செத்தவர்களுக்குத் தான் வாழ்க்கையில் உரிமை யுண்டு, உயிரோடிருப்பவர்களுக்கல்ல....

பலாயி என்ன சொல்லிக் கொண்டிருக்கிறான்?

''இப்போ அந்தப் பசங்களெல்லாம் என்ன ஆனாங்க? எல்லோரும் தப்பிச்சோம் பொழைச்சோம்னு ஓடிப்போயிட்டாங்க. அடேயப்பா, 'பரா நகர் - பரா நகர்' னு பிலாக்கணம் பாடிக் கவிதை எழுதினானே தீமான்!



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பிலாக்கணம் பாடி என்ன பிரயோசனம்? பரா நகர்ப் பகுதியிலே நூறுக்கு மேற்பட்ட தடியன்களை வெட்டிக் கொன்ன பிறகு தானே அங்கே அமைதி ஏற்பட்டிருக்கு இப்போ! அப்படி வெட்டிக்கொல்றதுக்கு முன்னாலே அங்கே ஒரே டென்ஷனாத்தானே இருந்தது!''

தீமான் யார்? ஓ, நந்தினி சொன்னாளே, அந்த தீமான்ராய்.....

ஒரு நல்ல சிவப்பான பெண் மாக்ஸி அணிந்திருந்தவள் - கையில் ஒரு கிண்ணத்துடன் வந்து பலாயியின் தோள்மேல் கை வைத்துச் சொன்னாள், ''ரொம்ப நல்லா எழுதறாங்க இல்லே?''

பலாயி சொன்னான், ''இருபதாயிரம் இளைஞர்கள் செத்துப் போயிட்டாங்கன்னு ஒப்பாரி வைக்கறான் தீமான். எனக்கு இவங்க சமாசாரம் தெரியாதா? கிளர்ச்சியும் அதுக்கு எதிர் நடவடிக்கையும் உச்சத்திலே இருந்த போது அவன் 'பாங்க்ளாதேஷ் - பாங்களாதேஷ்'னு அழுதுக்கிட்டிருந்தான் போலீஸ் மிரட்டலுக்குப் பயந்து போய். இப்போ எல்லாம் அடங்கிப்போச்சு, இனிமே பயமில்லேன்னு கிளர்ச்சிக் காரங்களுக்காகக் கண்ணீர் விடறான், என்ன எழுதறான்! வெறுங் குப்பை! அன்னிக்கு அவனோட கவிதை யொண்ணு படிச்சு எனக்கு அழுகை வந்துடுச்சு....வாங்க, ஒங்க கவிதையைப் பத்தித்தான் பேசிக்கிட்டிருக்கோம். நீங்க எப்போ எழுதறீங்க? நீங்க இவ்வளவு பிஸி மனுஷர், ஒங்களுக்கு எப்படி டயம் கிடைக்குது?.....ஒங்க கொள்கை பற்றி... உண்மையிலேயே ரொம்பப் பாராட்டத்தக்கது!''

தீமான்ராய்க்கு வயது நாற்பதுக்கு மேலிருக்கும். மொந்தை முகம். பார்க்க அவலட்சணமாக இருந்தான். அவன் பக்கா நடிகன் மாதிரி கணநேரத்தில் தன் முகத்தில் சங்கோசத்தை வருவித்துக் கொண்டான். கரகரத்த குரலில் சொன்னான், ''வேறே எதைப்பத்திக் கவிதை எழுதமுடியும்?''

''நிசமாவே...ஒங்க கவிதையைப் படிச்ச



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



போது...அனுப் தத்தா, இவரைத் தெரியுமா?''

''தெரியும், உணர்ந்து எழுதறார்....'' அனுப் சொன்னான்.

''இப்போ எல்லாரும் அவங்களைப்பத்தித்தான் நினைச்சுக்கிட்டிருக்காங்க...''

தீமான்ராய் மிகவும் திறமையோடு வெண்ணெய் தடவிய ரொட்டியைக் கடித்துக்கொண்டான், பிறகு விஸ்கியைக் கொஞ்சம் உறிஞ்சினான்.

நிறைய வெண்ணெயுடன் விஸ்கி உட்கொண்டால் போதை ஏற்படாது என்று கேட்டிருக்கிறார் சுஜாதா. தீமான்ராய் போதைக்கு ஆளாக விரும்பவில்லையென்பது புரிந்தது.

''தெரியும்!'' நீபா சொன்னாள் திடீரென்று. அவள் நிறைய விஸ்கி குடித்திருந்தாள். அவள் முகத்தில் அகம்பாவம் பிரதிபலித்தது.

''தெரியாதா என்ன?'' அமித் சொன்னான் கேலியாக.

''ஆமா....ஒரு போலிக் கவி....பொறத்தியான் அனுபவத்தை வச்சுக்கிட்டுக் கவிதை எழுதறான். அப்படிப்பட்ட கவிதையிலே உணர்ச்சி எப்படி இருக்கும்! என் தம்பி செத்துப்போனான். அப்போ இந்தக்கவி என்ன பண்ணிக்கிட்டிருந்தார்? எந்தப் பொம்பளையோட சேலைக்குப் பின்னாலே ஒளிஞ்சுக்கிட்டிருந்தார்?...பலாயி சொல்லியிருக்காரே!''

''அப்போ நீ ப்ரதீயாலே சங்கடத்திலே ஆம்பிட்டுக்கிட்டிருந்தே... வெக்கத்திலே தலை தூக்க மாட்டாமே தவிச்சே...''

''யாரு சொன்னாங்க?''

''நான் சொல்றேன்!''

www.tamilarangam.net



''நீங்கதான் என்னைத் திரும்பத்திரும்ப எச்சரிக்கை செஞ்சீங்க!...''

''இல்லே!...''

''பொய் சொல்லி!''

''வாபஸ் வாங்கு அந்த வார்த்தையை!''

''மாட்டேன்!''

''நான் கிதிர்பூர் கங்கூலி குடும்பத்துப் பையன். ஒம்மாதிரி ஒரு முக்காலணாத் தேவடியா கிட்டே....''

''அமித்!'' சுஜாதா தாழ்ந்த குரலில் அதட்டினார்.

சில ஆபத்தான கணங்கள், எந்த நேரமும் வெடிக்கலாம். திரி எரிகிறது, எரிந்து கொண்டு வருகிறது வெடி மருந்துக்கருகில்....நெருப்பு இதோ வெடிமருந்தைத் தொடப் போகிறது...

நெருப்பு வெடிமருந்தைத் தொடவில்லை. அதற்குள் நீபா கலகல வென்று சிரித்து விட்டாள் - ''அம்மா, நீ யொண்ணு!.... இந்தச் சண்டையெல்லாம் ரொம்ப ஜாலியாருக்காக்கும்!''

''அப்படீன்னா இதையெல்லாம் ஒன் வீட்டுக்குள்ளே வச்சுக்கோ!''

சுஜாதா அங்கிருந்து நகர்ந்தார்.

பார்ட்டி களை கட்டியது. எல்லாருமே நிறையக் குடித்து விட்டார்கள். அநேகமாக எல்லாருக்குமே போதைக்கிறக்கம். டோனியின் தங்கை நர்கிஸ் இரண்டு சாம்பல் கிண்ணங்களை எடுத்துத் தாளம் போட்டுக் கொண்டு 'சாமியார் சாமியார்' என்று பாடியவாறு ஆடத்தொடங்கினாள். ஜீசுமித்ரா குந்தி உட்கார்ந்து கொண்டு, இரு புறமும் உடம்பை ஆட்டிக் கொண்டே கை தட்டினார்.

www.tamilarangam.net



அமித் எரிச்சலடைந்து, ''ஒன்னோட அம்மா பிறத்தியாரை மகிழ்ச்சியோடே இருக்கவிடமாட்டா!'' என்றான்.

அவன் முழுப் போதை ஏற்றிக் கொள்ளத் தீர்மானித்துவிட்டான். சோடா கலக்காமல் விஸ்கியை அப்படியே கிண்ணத்தில் ஊற்றிக்கொண்டு, கிண்ணத்தை வாயில் கவிழ்த்துக் கொண்டான்.

பலாயி நீபாவிடம், ''நாம போயிடலாம்'' என்று சொன்னான்.

''சரி.''

''நாம சரத் வீட்டுக்குப் போகலாம். இன்னிக்கு அங்கே சினிமாப் படம். பாரிசிலேருந்து வந்திருக்கிற நல்ல நல்ல படமெல்லாம்....'' என்று சொல்லி, பலாயி நாக்கை உதட்டிலும் கன்னத்திலும் உருட்டி ஒரு விசித்திர ஒலி யெழுப்பினான் - அம்மணமான, சதைத்தன்மை பொருந்திய ஒலி. அந்த ஒலியிலிருந்தே ஊகித்துக்கொள்ளலாம் படம் எப்படியிருக்குமென்று. நிச்சயம் கிளர்ச்சியூட்டும், சந்தேகமில்லை!

''கிளம்புங்க.''

அவர்கள் போய்விட்டார்கள்.

தீமான்ராய் அமித்திடம், ''நீங்க நல்ல ஆளு!'' என்றான்.

''ஏன்?''

''ஒங்க வீட்டுக்காரி பலாயியைக் கூட்டிக்கிட்டு சினிமா பார்க்கப் போயிட்டாளே!''

''அதிலே ஒங்களுக்கு என்ன?''

''அந்த பலாயி வெறும் காலெண்டர் படத்தைப் பார்த்தாக் கூட....''

''அடே போதுமய்யா! நீங்க இலவசமாக் குடிக்கக் கிடைக்குதுன்னு பெரிய மனிசங்களை சிநேகிதம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பிடிச்சுக்கிட்டுத் திரியறீங்க....குடிச்சுட்டுப் போவீங்களா, மத்த விஷயங்களைப் பத்தி ஏன் மண்டையைக் கொழப்பிக்கறீங்க?...''

''பலாயியோடே...''

அமித் கிளுகிளுவென்று சிரித்தான் நரி மாதிரி. ''எங்கிட்டே பலாயிஎயப் பத்திச் சொல்லத்தேவையில்லே. அவன் என் அத்தை பிள்ளை.''

''அப்படியா?''

''ஆமாய்யா. நான் மகிமாரஞ்சன் கங்கூலியோட பிள்ளை வயித்துப்பேரன், பலாயி பெண் வயித்துப் பேரன்.''

''அப்படிச் சொல்லுங்க!''

''நீங்க விதியை நம்பறீங்களா?''

''இல்லவே இல்லை. நான் விதியை நம்பல்லே, கடவுளையும் நம்பல்லே.''

''உளறல்!''

''என்ன சொன்னீங்க?''

''குப்பை!...ஒங்க மாதிரி நாஸ்திகங்க தினம் ரெண்டு வேளையும் என் ஆபீசிலே வந்து விழறாங்க...''

''நீங்க போதையிலே உளர்றீங்க!''

''நீங்க மட்டும் சுய நினைவிலே இருக்கீங்களாக்கும்!.... விதியை நம்புங்க, மிஸ்டர்! விதியை நம்புங்க!''

''ஏன்?''

''விதியல்லாமே என்ன! பலாயி குடும்பத்திலே எந்தப் பொண்ணையாவது விட்டு வச்சிருக்கானா, என் பெண்சாதியை மட்டும் விட்டு வைக்க? மொதல்லே அவன் என்னோட சின்ன அத்தை, அவனோட சித்தி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இவங்களிலேருந்து தன் லீலையைத் தொடங்கினான். அப்படிப்பட்டவன் நீபாவை சுலபமா விடுவானா?...ஆனா ஒண்ணு, பலாயி உயர் குடும்பத்துக்காரன். தன் குடும்பத்துக்கு வெளியே விளையாடமாட்டான்....''

''பலாயியோடே ஒங்க பெண்சாதியை....''

''பலாயி எனக்கு ஒறவு மட்டுமில்லே, சிநேகிதனுங்கூட....அவனுக்கு எவ்வளவு செல்வாக்கு தெரியுமா? அவனை விரோதிச்சுக்கிட்டா....''

''நீங்க ரொம்ப தாராளந்தான்!''

மிஸ்டர் கபாடியா திவ்யநாத்திடம் சொன்னார், ''நான் நிசமாவே ரொம்ப தாராள மனதுள்ளவன்....''

''ஆமா, ரொம்ப தாராளந்தான்.'' திவ்யநாத் சொன்னார். கருப்புப் பொத்தானை விரலால் தடவிக்கொண்டே ''என்னோட திட்டத்தைப்பின் பற்றினா நாட்டோட எல்லாப் பிரச்சனையும் தீர்ந்துடும்.''

''எப்படி?''

தவறில்லாத வங்காளியில் பேசத் தொடங்கினார் மிஸ்டர் கபாடியா - ''நம்ம நாட்டோட பிரச்னை என்னன்னு சொல்லுங்க! ஒருமைப்பாடு இல்லேங்கறது தானே! பல மதங்கள், பல ஜாதிகள், பல மொழிகள் இருக்கறதாலே நாடு ஒடைஞ்சு போயிக்கிட்டிருக்கு.....உணவு ஒரு பிரச்சனையே இல்லே. உணவுக்காகக் கலகம் எங்கேயாவது நடக்குதா? உழவங்க வசதியாத்தான் இருக்காங்க. எல்லாரும் ரேடியோ வாங்கறாங்க. வேலை வாய்ப்பு? நிறையப் பேருக்கு வேலை கிடைச்சுக்கிட்டுத்தான் இருக்கு. நாட்டிலே சொத்துக்குக் குறைச்சலில்லே. எல்லார்கிட்டேயும் பணம் இருக்கு. இல்லேன்னா, எப்படி இவ்வளவு புது வீடுகள் வந்துக்கிட்டிருக்கு, புதுக் கார்கள் எல்லாரும் வாங்கிக்கிட்டிருக்காங்க, நல்லா மீனும் இறைச்சியும் சாப்பிடறாங்க?''

www.tamilarangam.net



''நிசந்தான்....''

''மொழி ஒரு பிரச்னையா? யார் யாரு எங்கெங்கே வசிக்கறாங்களோ அந்த அந்த எடத்து மொழியைக் கத்துக்கணும்....நான் இங்கே ஒயின் விக்கறேன், அதனாலே வங்காளி கத்துக்கிட்டிருக்கேன்....''

''ரொம்ப நல்லாவே கத்துக்கிட்டிருக்கீங்க!''

''கத்துக்க வேண்டாமா? தாகூரோட மொழியாச்சே!''

''உண்மைதான்.''

''ஆக, மொழிப்பிரச்னை தீர்ந்துடுச்சு....அப்பறம் மதம். மதம் என்னத்துக்கு?....கோவில்; மசூதி எல்லாத்தையும் எரிச்சுட்டு எங்க குருவைப் பின்பற்றட்டுமே! எங்க சாமியார் சாட்சாத் கடவுளாக்கும்!''

''நல்ல ஐடியா!''

''நாங்க - அதாவது இந்தியாவிலுள்ள சாமியாரின் குழந்தைகள் - டில்லி, பம்பாய், கல்கத்தா, சென்னை எல்லா இடங்களிலேயும் அலுவலகம் திறந்திருக்கோம். ஆறாயிரம் மக்களுக்கு வேலை கொடுப்போம். பிளேனும் ஹெலிகாப்டரும் வாங்கப் போறோம். எல்லா இந்திய மொழிகளிலேயும் சாமியாரோட உபதேசத்தை அச்சடிச்சு அந்தப் பிரசுரங்களை ஆகாசத்திலேருந்து பொது மக்களுக்கு வினியோகம் பண்ணுவோம். ரொம்ப சீக்கிரம் எல்லாரும் எங்க குருவோட தொண்டர்களாயிடுவாங்க....''

''உண்மைதான்.''

''இப்போ மதப்பிரச்னை தீர்ந்துடுச்சு. அப்பறம் ஜாதி, மொழி....ஒரு சட்டம் போட்டுட வேண்டியது, இனிமேல் யாரும் தன் ஜாதிக்காரங்களை, தன் மொழிக்காரங்களைக் கலியாணம் பண்ணிக்கக் கூடாதுன்னு....வங்காளி

www.tamilarangam.net



பஞ்சாபியை, ஒரியாக்காரன் பீகாரியை, அஸ்ஸாம்காரன், மராத்தியப் பெண்ணைக் கலியாணம் பண்ணிக்கணும்.... அவ்வளவு தான் - ஜாதி, மொழிப்பிரச்னையெல்லாம் தானாத் தீர்ந்து போயிடும்....''

''டோனி இப்போ தூலியைக் கலியாணம் பண்ணிக்கற மாதிரி....''

''ஆமா....இதுக்காக நான் ஒங்களுக்கு ரொம்பக் கடமைப் பட்டிருக்கேன்....''

''நீங்க என்ன இப்படிப் பேசறீங்க? நான் ஒங்ககிட்டே கடமைப் பட்டிருக்கேன். இதிலே எனக்கு ரொம்பப் பெருமை....''

''எனக்குந்தான்.''

''ஒயின் பிஸினெஸ் சக்கரவர்த்தியோடே சம்பந்தம் பண்ணிக்கறது சாதாரண விஷயமா?''

''நீங்க மட்டும் சாதாரண மனுஷரா?''

''டோனி ரொம்ப நல்ல பையன்.''

''தூலி மட்டும் சாதாரணப் பெண்ணா?''

''ஜாக்கி ரொம்ப நல்லவன்.''

''ஜோதியுந்தான்.''

''நர்கிஸ் மட்டும் சும்மாவா?''

''நீபாவுந்தான்.''

''ஒங்க குடும்பம் ரொம்ப உயர்ந்த குடும்பம்.''

''ஒங்க குடும்பமுந்தான்.''

''ஒங்க வம்சம்...''

''நீங்க பெரிய ஜமீந்தார்....''

www.tamilarangam.net



''நாங்க குலீன் - அதாவது ஒசந்த ஜாதி.''

''ஆகா, தெட் இஸ் கிரேட்!''

''ஒரு நாள் எங்க வம்சாவளியைக் காமிக்கறேன்.''

''சரி.''

''அப்போ தெரியும் ஒங்களுக்கு...''

''ஒரு விஷயம், மிஸ்டர் சாட்டர்ஜி...''

''என்ன?''

''மிஸஸ் சாட்டர்ஜியாலே ஒங்க சின்னப்பையனோட அதிர்ச்சியை....''

''அதெல்லாமில்லே. ஷி இஸ் ஆல் ரைட்.''

''ஒங்க பையனாயிருந்துக்கிட்டு இந்த மாதிரி...''

''பேட் கம்பெனி, பேட் ஃப்ரண்ட்ஸ்....''

''அப்படித்தான் இருக்கணும்....''

''நாங்க - அப்பாவும் பிள்ளையும் - எவ்வளவு நெருக்கமா இருந்தோம், தெரியுமா!''

''தூலி சொல்லியிருக்கா.''

''நாங்க குழந்தைங்க மாதிரி இருந்தோம். எங்களுக்குள்ளே ரகசியங்களே இல்லே.''

''அப்படித்தான் இருக்கணும்.''

''அவன் என்னைக் கடவுள் மாதிரி மதிச்சான்.''

''மதிக்கத்தானே வேணும்! இந்த மாதிரி அப்பா...''

''அப்படிப்பட்ட பையன்....''

''ஐயோ!''

''என் நெஞ்சு நொறுங்கிப்போச்சு.''

www.tamilarangam.net



''நொறுங்கத்தானே செய்யும்!''

''எனக்கு எப்படிப்பட்ட அதிர்ச்சி தெரியுமா?''

''வருத்தப்படாதீங்க. எங்க குருஜி சொல்றார் - சாவுன்னு ஒண்ணு இல்லே. உடல்தான் செத்துப்போகும். எல்லாரோட ஆத்மாவும் சுவர்க்கத்திலே சந்திக்கும். அப்போ ஒங்க பையன் பழையபடியே இருக்கறதைப் பார்ப்பீங்க.''

''சுவாமிஜி சொல்றாரா இப்படி?''

''ஆமா.''

''அப்படீன்னா நானும் அவரோட சீ ணாகப்பே ாறேன்.''

''செய்யுங்க.''

''இதோ என் மிஸஸ். இதோ பாரு, இவர் எவ்வளவு நல்ல நல்ல விஷயமெல்லாம் சொல்றார்! இங்கே வந்து கேளேன்!''

''கேட்டுக்கிட்டுத்தானே இருக்கேன் இங்கேயிருந்து.''

''மிஸஸ் சாட்டர்ஜி, விஸ்கி சாப்பிடறீங்களா?''

''வேண்டாம், நான் சாப்பிடறதில்லே.''

''ஒடம்பு சரியில்லையா?''

''இல்லே, இல்லே...''

சுஜாதா எழுந்திருந்து போனார். வினி அவரைக் கூப்பிட்டாள். வலி தோன்றுகிறது. தாங்கமுடியாத வலி. அலையலையாக வருகிறது. அலைகள் பலமாக ஒன்றோடொன்று மோதியுடைகின்றன. எல்லாமே ஆடுகிறது. மங்குகிறது, பிறகு மறுபடி தெளிவாகிறது.

ஜோதி இசைத்தட்டு போட்டிருக்கிறான். வெறிபிடித்த ஜாஸ் இசை.

''வினி, என்ன?''

www.tamilarangam.net



"தூலி கூப்பிடறா."

"ஏன்?"

"டோனியோட விசேஷ சிநேகிதன் யாரோ வந்திருக்கானாம்."

"எங்கே?"

SEELAN BOOKS SIGNATURE NORWAY

"வெளியிலே."

"ஏன் வெளியிலே நிக்கறான்?"

"வண்டியிலே ஒக்காந்திருக்கான்."

"எறங்கி வரச்சொல்லேன்..."

"அம்மா, ஒன் கால் ஏன் தடுமாறுது?"

"வலி."

"நீ ஒக்காந்துக்க. நான் அவனை உள்ளே கூப்பிடறேன்."

"இல்லே, நானே போறேன்."

"ஏன்? நான் போறேனே!"

"இல்லே, நான் போகல்லேன்னா, தூலி வருத்தப்படுவா. நான் போய் அவனைக் காரிலேருந்து எறங்கி வரச்சொல்றேன். அதுக்குள்ளே நீ போய் சிற்றுண்டி டப்பாவை எடுத்துக்கிட்டு வா. அவன் காரிலேருந்து எறங்கிவர இஷ்டப்படல்லேன்னா அங்கேயே டப்பாவைக் கொடுத்துடலாம்."

"அது தான் சரி."

வலி அதிகரிக்க அதிகரிக்க, குளிர் குறைந்துவிட்டது, உடம்பு சூடாகிவிட்டது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சுஜாதா சால்வையை அவிழ்த்து வைத்து விட்டு வெளியே வந்தார்.

குளிர். வாடைக்காற்று. தோட்டம் இருட்டில். இந்த இருட்டில் காணாமற் போய்விட முடிந்தால்!... இனி மறுபடி வீட்டுக்குள்நுழைய வேண்டிய நிர்ப்பந்தம் இல்லாவிட்டால்!....

வாசலில் கருப்பு வேன்.

கருப்பு வேன். கம்பிவலை போட்ட ஜன்னல். கம்பிவலை போட்ட பின்பக்கத்துக் கதவு. ஜன்னல் வலைக்குப் பின்னால் இரும்புத் தொப்பியணிந்த தலைகள்.

ஓட்டுநருக்குப் பக்கத்தில் அது யார்?

இஞ்சின் உறுமிக் கொண்டிருக்கிறது.

அப்பழுக்கற்ற வெள்ளைச்சீருடை. பித்தளை பாட்ஜ். அதில் பொறிக்கப்பட்டிருக்கிறது 'D.C.D.D'.

சரோஜ் பால்!

வங்காளத்தாயின் துணிச்சல் மிக்க பிள்ளை, சிங்க நெஞ்சன்!

சுவரில் எழுதப்பட்டிருந்த கோஷம் - 'சரோஜ்பால், உனக்கு மன்னிப்பு இல்லை!'

மின் எரிகலனின் அலுமினியம் கதவு தொப்பென்று விழுந்தது. அதற்குள் ப்ரதீ- சில்லிட்டுப்போன, அசைவற்ற உடல்.

சரோஜ் பால்.

-''ஆமா, எங்க அம்மா இருக்காங்க.''

-''ஒங்க பையன் தீகா போகல்லே.''

-''இதெல்லாம் வீட்டிலே இருக்கக்கூடாது!''

-''போட்டோ தரமுடியாது!''

-''நீங்க பிள்ளையை நல்ல முறையிலே வளர்க்கல்லே.''

www.tamilarangam.net



-''ஒங்க பையன் போக்கிரிகளோடே சிநேகம் வச்சுக்கிட்டிருந்தான்!''

-''ஒங்க பிள்ளை செஞ்ச காரியத்துக்கு மன்னிப்பு இல்லே.''

-''நீங்க ஒங்க பையனோட எண்ணங்களைப் புரிஞ்சுக்கிட்டு எங்ககிட்டே சரணடையச் சொல்லியிருக்கணும்.''

-''இல்லை, பாடியைக் கொடுக்க முடியாது!''

-''இல்லை, பாடியைக் கொடுக்க முடியாது!''

-''இல்லை, பாடியைக் கொடுக்க முடியாது!''

சுஜாதா நிமிர்ந்து பார்த்தார். சரோஜ்பாலும் பார்த்தான் - ஆயிரத்து எண்பத்து நாலின் அம்மா. ப்ரதீ சாட்டர்ஜியோட அம்மா. இவரைப் பார்க்க வேண்டியிருக்குமே என்றுதான் அவன் விருந்துக்கு வர விரும்பவில்லை.

வினி முன்னே வந்தாள். ''எறங்க மாட்டீங்களா?''

''இல்லே.''

''கொஞ்ச நேரம்...''

''இல்லே, வேலை இருக்கு....தூலி, டோனிக்கு என் வாழ்த்தைத் தெரிவியுங்க.''

''இந்த டப்பாவையாவது வாங்கிக்கங்க.''

''சரி, கொடுங்க. எனக்கு ரொம்ப அவசரம்....வணக்கம்.''

வண்டி புறப்பட்டுப் போய்விட்டது.

இன்னும் வேலையா? இப்போதும் சீருடையா? கருப்புவேன், சட்டைக்குக்கீழே இரும்புவலைச் சட்டை, உறையில் பிஸ்டல், பின்பக்க இருக்கைகளில் இரும்புத் தொப்பியணிந்த போலீஸ்காரர்கள்?

கிளர்ச்சி எங்கே? போலீசுக்கு வேலை எங்கே? பவானிபூர் - பாலிகஞ்சு - கரியா ஹாட் - கரியா - பேஹாலா -

www.tamilarangam.net



பராநகர் - பாக்பஜார் - எங்கே வேலை?

எங்கே கடைக்கதவுகள் அடைக்கப்படும், வீட்டுக்கு வீடு வாசல் கதவு மூடப்படும், எங்கே தெருவிலிருந்து பாதசாரிகள், சைக்கிளில் செல்பவர்கள், தெரு நாய்கள், ரிக்ஷாக்கள் பயந்து போய்த் தலை தெறிக்க ஓடும்?

அபாயச்சங்கு எங்கு ஒலிக்கும்? தடதட வென்று பூட்ஸ் ஒலி, வேனின் உறுமல், படார் படாரென்று துப்பாக்கியோசை எங்கே கேட்கும்?

எங்கே ஓடுவான், எங்கே மறுபடி ஓடுவான் ப்ரதீ? கொலையாளியும், துப்பாக்கிக்குண்டும், போலீஸ் வேனும், சிறையும் இல்லாத எந்த இடத்துக்கு ப்ரதீ ஓடித் தப்புவான்?

இந்தப் பெருநகரத்தில் - வங்காளத்தின் கங்கைச் சம வெளியில்- வடக்கு வங்காளத்து மலைக்காடுகளில் - ராட்பிரதேசத்துச் செம்மண், கூழாங்கல், அணைகளில் - சுந்தரவனத்துச் சதுப்புக் காடுகளில் - தானிய வயல்கள், தொழிற்சாலைகள், தேயிலைத் தோட்டங்கள், நிலக்கரிச் சுரங்கங்களில் - எங்கே ஓடுவான் ப்ரதீ? எங்கே ஓடிப்போய் மறுபடி தொலைந்து போவான்?

ப்ரதீ, ஓடிப் போகாதே! என்னிடம் வா, என் நெஞ்சுக்குள் வா! திரும்பி வா, ஓடிவிடாதே!

இன்று நாள் முழுதும் தேடி அவனைக் கண்டு பிடித்திருந்தார் சுஜாதா. மறுபடி வேன் போகத் தொடங்கினால், அபாயச் சங்கொலி வானத்தைக் கிழிக்கத் தொடங்கினால் ப்ரதீ மறுபடி காணாமற் போய்விடுவான்.

வீட்டுக்குத் திரும்பி வா, ப்ரதீ! மறுபடி ஓடிப்போய்விடாதே! அம்மாவின் நெஞ்சுக்குள் மறுபடி வந்துவிடு! மறுபடி ஓடித் திரியாதே! உன்னை யாரும் ஓடித் தப்பவிடமாட்டார்கள், நீ எங்கே ஓடினாலும் உன்னைக் கண்டுபிடித்து இழுத்து வந்து விடுவார்கள். என்னிடம் வந்து விடு, ப்ரதீ!....

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



''அம்மா, கீழே விழப்போறீங்க!''

சுஜாதா வினியின் கையைத் தட்டிவிட்டார். வேகமாக உட்பக்கம் ஓடினார். வீட்டுக் கதவருகே நின்றார்.

எல்லாம் அசைகிறது - ஆடுகிறது - சுற்றுகிறது.....

சவங்களை யாரோ ஆட்டுகிறார்கள். அழுகிப்போன சவங்கள் எல்லாம் - தீமான், அமித், திவ்யநாத், மிஸ்டர் கபாடியா, தூலி, டோனி, ஜீசுமித்ரா, மலிமித்ரா, மிஸஸ் கபாடியா....

இந்தச் சவங்கள் தங்கள் அழுகிப்போன இருப்பின் பலத்தில் எல்லாக் கவிதைகளையும், ஓவியங்களையும், சிவப்புரோஜாக்கள் - பசும்புல் - நியான் விளக்கொளி - குழந்தையின் அழுகை எல்லாவற்றையும் நெடுங்காலம், முடிவின்றி, அனுபவித்துக் கொண்டிருக்கும் என்றுதான் ப்ரதீ இறந்தானா? இதற்காகத்தானா? உலகத்தை இந்தச் சவங்களிடம் ஒப்படைக்கவா?

ஒரு போதும் இல்லை!

ப்ரதீ....

சுஜாதாவின் நீண்ட, வேதனை மிக்க, நெஞ்சைப் பிளக்கும் ஓலம் ஒரு கேள்வி போல, ஒரு வெடிப்பு போல, வெடித்தது - கல்கத்தாவின் வீட்டுக்கு வீடு பரவியது - நகருக்குள் ஊடுருவித்துளைத்தது - வானத்தில் எழுந்தது. அது காற்றில் கலந்து நாட்டின் மூலைக்குமூலை; திசைக்குத் திசை, வரலாற்றின் நினைவுச்சின்னங்களாக நிற்கும் தூண்களில், ஸ்தூபங்களின் இருட்டில், வரலாற்றுக்கு முற்பட்ட காலத்துப்புராணங்களின் நம்பிக்கையின் வேரில் பரவியது. அந்த ஓலத்தைக் கேட்டுப் பழங்காலம், நினைவுக்கு முற்பட்ட, மறக்கப்பட்ட பழங்காலம், பழங்காலத்துக்கு முற்பட்ட காலம், கடந்த காலம், நிகழ்காலம், எதிர் காலம் எல்லாமே விதிர்விதிர்த்து நடுங்கின, தடுமாறின, சுகமாக வாழ்ந்து வந்த ஒவ்வோர் இருப்பின் சுகமும் முறிந்து விழுந்தது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இந்த ஓலத்தின் இரத்தத்தின் நெடி, பழிக்குப் பழி வாங்கும் உணர்வு, சோகம்....

பிறகு எல்லாம் இருள்....

சுஜாதாவின் உடல் கீழே சாய்ந்தது.

திவ்யநாத் கத்தினார்- ''அப்பெண்டிக்ஸ் வெடித்து விட்டது!''

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 1084ன் அ



## மகாசுவேதாதேவி

தமிழ்ப்புத்தகாலயம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்